கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(02.07.2017 - 02 ஆடி 2017 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 07, கதிர் - 163, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /129 / NEWS / 2017

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி - 05



"நீரே என் ஆண்டவர் நீரே என் தேவன்"

புனித தோமையார்

ஆடி 03

கிறிஸ்தவ நம்பிக்கையிலிருந்து விலகி இருக்கும் நம்முடைய சகோதர சகோதரிகள் நமது இறைவேண்டல் மற்றும், நற்செய்தியின் சான்று வழியாக ஆண்டவரின் இரக்கத்தின் நெருக்கத்தையும் கிறிஸ்தவ வாழ்வின் அழகையும் மீண்டும் கண்டுணரும் படியாக செபிப்போம்.

திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்



# ஒற்றுமையை கட்டியெழுப்பக்கூடிய தீர்வை நோக்கி ஒன்றாக பயணிப்போம்

**யாழ் புனித பற்றிக்ஸ் கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் கொழும்பு உயர்மறைமாவட்ட கர்தினால்...**



நன்றி பாதுகாவலன்

இனப்பிரச்சினை தீர்வாக உருவாக்கப்பட்ட 13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து நிரந்தர அரசியல் தீர்வு நோக்கிச் செல்ல வேண்டும் என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார். 1958ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட சட்டம் இன்று பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்து விட்டது என்றும் பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் குறிப்பிட்டார். கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் இடம்பெற்ற யாழ் புனித பற்றிக்ஸ் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய போதே ஆண்டகை அவர்கள் இவ்வாறு கூறினார். இல்லாததைப் பற்றி பேசுவதை விட இருக்கின்ற விடயம் ஒன்றில் ஆரம்பித்து முன்நோக்கிச் செல்ல வேண்டும். சிலர் இல்லாததைப் பேசுகின்றனர். அவை விவாதங்களாகவே அமைந்து விடுகிறது. இல்லாதவை பற்றி பேசுவதில் பயனில்லை. ஆகவே இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தீர்வுக்கான வழியை தேட முடியும் என்று கர்தினால் சுட்டிக்காட்டினார்......

15

# மத்துகமை வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவினால் பாதிப்புக்குள்ளான மக்களைச் சந்தித்தார் கர்தினால் ஆண்டகை




தகவல் மற்றும் படங்கள் திரு. சுனில்

வெள்ளப்பெருக்கு மற்றும் மண் சரிவினால் பாதிப்புக்குள்ளாகி செய்வதறியாது தவிக்கும் மக்களின் சுக நலன்களை நேரில் விசாரித்து அறிவதற்காக கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் ஆண்டகை அவர்கள் அண்மையில் மத்துகமைப் பிரதேசத்திற்கு விஜயம் ஒன்றினை மேற்கொண்டார். இதன்போது முதலாவதாக மத்துகமை பங்கிற்கு சொந்தமான உல்காவத்தை என்னும் தோட்டத்திற்கு சென்ற ஆண்டகை அவர்கள், அங்கு பாதிப்புக்குள்ளாகியிருந்த மக்களைச் சந்தித்து உரையாடி அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார், "பெய்த கன மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு வடிந்தோடி பல நாட்கள் ஆனபோதிலும் அரசாங்கமோ அல்லது தனியார் நிறுவனங்களோ எவ்வித நிவாரணங்களையும் தமக்கு வழங்கவில்லை" என்பதையும், மீண்டும், இவ்வாறானதொரு பேரிழப்பு ...

14

# வாழ்த்துகின்றோம்.



கொழும்பு உயர்மறைமாவட்ட ஓய்வுபெற்ற பேராயர் அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை தனது 49வது ஆயர் திருநிலைப்படுத்தல் ஆண்டின் நிறைவை 17.07.2017 அன்று நினைவுகூர்கின்றார். (1968) ஆயர் அவர்கள் உடல் உள நலத்தோடு வாழ ஞான ஒளி இறையாசீர் வேண்டி வாழ்த்துகின்றது.

**கத்தோலிக்க திருச்சபையானது புனிதர்களை வழிபடுபவர்களல்ல மாறாக, புனிதர்களை உருவாக்குபவர்கள் ஆவர்.**

# "மனித குலமே அருமையான மிக உன்னதமான படைப்பாகும்"

கொழும்பு உயர்-மறைமாவட்ட பேராயர் கர்தினால் ஆண்டகையின் அறிக்கை...

08



களமுள்ள நூற்றாண்டுத் யூபிலி திருப்பலியில் கர்தினால் ஆண்டகை

15


# முதலாவது இலங்கை கத்தோலிக்க தேசிய பேரணி

முதலாவது இலங்கை கத்தோலிக்க தேசிய பேரணி யோர்தானின் தலைநகரமான ஆமன் நகரில் 07.07.2017இல் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வானது இலங்கையர்களோடு இணைந்து, யோர்தான் நாட்டு இலங்கை தூதர், அங்குள்ள இலங்கை மக்களின் ஆன்ம குரு என்போர்களது முழு ஆதரவோடும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. இலங்கைவாழ் இடப்பெயர்வு மக்கள் சார்பான கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் தலைவரான மேதகு ஆயர் ஹெரல்ட் அந்தனி பெரேரா ஆண்டகை பிரதம அதிதியாக கலந்துகொள்வார்.

யோர்தான் வாழ் கத்தோலிக்கரை ஓர் இலங்கை ஆயர் தரிசிப்பது இது இரண்டாவது தடவையாகும். மேதகு ஆயர் ஹெரல்ட் ஆண்டகை அங்கு சில ஆடைத்தொழிற்சாலைகளிலும், யோர்தான் கரித்தாஸ் சார்...

02

# புனித யோசேவ்வாஸ் இறையியலகத்தின் 13வது பட்டமளிப்பு விழா



15

**என் கடவுளே என் அரசே உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன் திபா 145**

# கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித ஆண்டகையினால் நியமிக்கப்பட்ட நியமனங்கள்

1. அருட்பணி. லியோ கமிலஸ் எட்டியாராச்சி, பங்குத் தந்தை - சீதுவ - இயக்குனர் - தேவ தர்ம நிக்கேத்தனய, நீர்கொழும்பு கிளை
2. அருட்பணி. ரஞ்சன் T. ஜோசப் சில்வா பங்குத் தந்தை - நாயக்ககந்தை - குருமுதல்வர் - வத்தளை
3. அருட்பணி. பிரடி சாந்திகுமார் பர்னாந்து பங்குத் தந்தை கோட்டே - குருமுதல்வர் கோட்டே
4. அருட்பணி. சுரான் அத்திட்டிய பங்குத் தந்தை களுத்துறை - குருமுதல்வர் - களுத்துறை
5. அருட்பணி. நிசங்க ஷெல்டன் டயஸ் பங்குத் தந்தை பானந்துறை - ஆன்மீகக் குரு உலக அப்போஸ்தலிக்க பாத்திமா (நீல இராணுவம்) சேவையாளர்
6. அருட்பணி. லக்பிரிய நோனிஸ் - கொழும்பு உயர்மறைமாவட்ட அன்மீகக் குரு - YCW/ CWM

உங்கள் புதிய பணியில் இறையாசீரை நிறைவாக வேண்டி நிற்கின்றேன்.

**தகவல் : அருட்பணி. டெனின்டன் சுபசிங்க, செயலாளர் – நிர்வாகம் – 19.06.2017**

# செக்கடித்தெரு புனித அன்னம்மாள் பங்கு பிறப்பின் 50வது ஆண்டு விழா



செக்கடித் தெரு பங்கு கொட்டாஞ்சேனை பங்கில் இருந்து பிரிந்து தனி பங்காக உருவாக்கப்பட்டு இவ்வருடத்துடன் 50ஆம் ஆண்டு பூர்த்தியாகின்றது. ஆகவே இப்பங்கில் புனித அன்னம்மாள் ஆலயம், புனித வேளாங்கண்ணி ஆலயம் என இரு ஆலயங்களும் 50ஆம் ஆண்டு ஜீபிலி ஆண்டை கொண்டாடுகின்றது. புனித அன்னம்மாள் திருவிழாவுக்காக முன் ஆயத்தமாக இம்மாதம் 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.15 மணிக்கு கொடியேற்றப்படும்.

**தகவல் : பங்குத் தந்தை ஆனந்தன் பர்னாந்து புள்ளே**

**அனைவரையும் அன்னையின் ஆசீரைப் பெற அழைக்கின்றோம்.**

## 01 முதலாவது இலங்கை...

இடப்பெயர்வு மக்கள் பல இன்னல்கள் மத்தியில் அல்லலுறும் நூற்றுக்கணக்கான இடப்பெயர்வு மக்களைச் சந்திப்பார். அங்கு வாழ் அனைத்து கத்தோலிக்கரும் ஆயரோடு இணைந்து விழாத் திருப்பலியில் கலந்து கொள்ள ஆசிக்கின்றார்கள். யோர்தான் மறைமாவட்டமானது, இந்த வரலாற்று முக்கியம் வாய்ந்த நிகழ்வை முறையே செயற்படுத்த தமது முழு ஆதரவையும் ஆன்மகுரு அருட்பணி. சிறிகாந்த அடிகளாருக்கு நல்கியுள்ளார்கள்.



அருட்திரு ஜோன் ட டெனியல் (SJ) தனது குருத்துவ பணியின் 50 வருட பூர்த்தி (ஜுபிலி)யை லேவெல்ல பாத்திமா தியான இல்லத்தில் அருட்திரு டிரோன் (SJ) அருட்திரு பீட்டர் குருகுலசூரிய (SJ) ஜெஸ்வீட் சபை அங்கத்தவ குருக்களுடனும் உறவினர், நண்பர்களுடனும் மிக எளிமையாக நன்றித் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். கூடியிருந்த மக்களின் ஒரு பகுதியினரையும் படத்தில் காணலாம்.

**தகவலும் படமும் A. றொபட் டெனியல், கட்டுகஸ்த்தொட்ட**

# தேவ இரகசியத்தின் ரோஜா மாதாவின் 10வது ஆண்டு பெருவிழா 13.07.2017



வத்தளை புனித அன்னம்மாள் ஆலய பங்கில் 10வது ஆண்டாக தேவ இரகசியத்தின் ரோஜா மாதா பெருவிழா தமிழில் 13.7.2017 வியாழக்கிழமை கொண்டாடப்படவுள்ளது. அன்றைய தினம் மாலை 3.00 மணிக்கு செபமாலை, பிரார்தனை மற்றும் திருச்சுரூப பவனியும் இடம்பெறும் அதனைத் தொடர்ந்து பெருவிழா சிறப்புத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

**அனைவரும் வருக! அன்னையின் அருள் ஆசீர் பெறுக!.**

**தகவல் : அருட்தந்தை சுராஜ்**



புனித லோரன்ஸ் பங்கு மக்கள் தமது வருடாந்த நற்கருணை (திருஉடல், திருஇரத்தப்) பெருவிழாவை 18.06.2017 அன்று கொண்டாடினார்கள். காலை 7.30 மணி திருப்பலியின் பின்பு இயேசுவின் திருஉடல், ஆராதனைக்காக எழுந்தேற்றம் பண்ணப்பட்டது. நாள் முழுவதும் ஒவ்வொரு பக்திச் சபைகளும் வழிபாடுகளை நடாத்தினார்கள்.

ஊர்வலத்தின் போது, திருஉடல், திருஇரத்தம் தாங்கிய கதிர்பாத்திரம் வைக்கப்பட்டு, செப வழிபாடுகள் நடாத்தப்பட்டு ஆண்டவரின் ஆசீர் கொடுக்கப்படுவதற்காக அழகுற அலங்கரிக்கப்பட்ட மூன்று பீடங்கள் கோவிலின் சுற்றுப்புறங்களில் முறையே, முதலாவது பற்றிமா திருத்தலத்திலும், அடுத்தது கோவிலின் பின்புறத்திலும், மூன்றாவது கெபியிலும் அமைக்கப் பெற்றிருந்தன. மாலை 5.00 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகியது. பற்றிமா திருத்தலத்தில் வண. அருட்பணி மனோகுமரன் அடிகளார் ஆங்கில மொழியில் வழிபாடு நடத்தி நற்கருணை ஆசீரை வழங்கினார். ஊர்வலம் தொடர்ந்து கோவிலின் பின்னே அமைவு பெற்றிருந்த பீடத்தை நோக்கிச் சென்றது. அங்கே அருட்பணி புத்திக்கே ஜயமான அடிகளார் சிங்கள மொழியில் வழிபாடு நடத்தி நற்கருணை ஆசீரை வழங்கினார். மூன்றாவது தரிப்பிடமான கெபியில் அருட்பணி. பிறிட்டோ அமதி அடிகளார் தமிழ் மொழியில் வழிபாடு நடாத்தி நற்கருணை ஆசீரை வழங்கினார். இறுதி ஆராதனையும், ஆசீரும் அருட்பணி. றொபேட் அபயநாயக்க அடிகளாரால் ஆலயத்தினுள்ளே நடாத்தப்பட்டது. இந்நிகழ்விகளில் சிலவற்றை படங்களில் காணலாம்.

**தகவல் : S.B. டேவிட்**

# வண. கொண்சால்வேஸ் அடிகளின் 341வது ஜென்ம தினம்

இலங்கை கத்தோலிக்க இலக்கியத்தின் மூல கர்த்தாவாகத் திகழும் வண. கொண்சால்வேஸ் அடிகளின் 341வது ஜென்ம தின சிறப்புத் திருப்பலி 2017.06.08 வியாழக்கிழமை காலை 7.00 மணிக்கு போளவத்தை மோட்ச அலங்காரி நாயகியின் தேவாலயத்தில் பங்குத்தந்தை வண. ஜயந்த பெரேரா, உதவிப்பங்குத் தந்தை பிரதீப் சேவியர் ஆகியோரின் அழைப்பின் பேரில், சிலாப புனித அந்தோனியார் கல்வி நிலையத்தின் தலைமைப் பிதா வண. அன்டன் ரஞ்சித் பெர்னாண்டோ அவர்களின் தலைமையில் நடந்தேறியது. இதனைத் தொடர்ந்து அடிகளாரின் திரு உடல் அடக்கம் செய்யப்பட்டுள்ள இடத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது.

**தகவல் : மேரி அலெக்சியா திரேசா ஆசிரியை**



50வருட புதுவாழ்வு நிறைவை முன்னிட்டு திருத்தந்தையின் அழைப்பை ஏற்று இலங்கையிலிருந்து உரோமைக்கு சென்ற "புபுதுவ" புதுவாழ்வை சேர்ந்தவர்களில் ஒரு பகுதியினரை படத்தில் காணலாம்.



இரத்தினபுரி மறைமாவட்டத்தின் கேகாலை மாவட்ட தெஹியோவிற்ற பங்கின் பொன்விழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. தனிப்பங்காக தரமுயர்த்தப்பட்டு முதல் பங்குத்தந்தையாக 15 ஆண்டுகள் பணியாற்றிய அருட்பணி. ஸ்டெனிபஸ் (சே.ச) அடிகளார் விசேடமாகக் குறிப்பிடப்பட்டார். பங்குத்தந்தை அருட்பணி. அயால் இந்திக அடிகளார் வரவேற்புரை நிகழ்த்துவதையும், ஆயர் அவர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

**தகவல் : ஜே. அந்தனி**

# வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆடித்திருவிழா



வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மடுத் திருத்தலத்தின் ஆடித்திருவிழாவை முன்னிட்டு இம்மாதம் 1ம்திகதி நற்கருனை ஆராதனையும், ஆசிரும் இடம் பெறும். அதனை தொடர்ந்து 02.07.2017அன்று காலை திருவிழா திருப்பலியானது தமிழ் சிங்கள மொழிகளில் ஆயர்கள், குருக்கள் இனைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக்கொடுப்பார்கள். அதனை தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனியும் மடு அன்னையின் ஆசீர்வாதமும் இடம்பெறும்.

**எமது பத்திரிகையை இணையத்தில் பார்வையிட**
http://www.colomboarchdiocesancatholicpress.com/

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
02 ஆடி, 2017 ஞாயிற்றுக்கிழமை.

**"இதோ! என் கைகள் இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்று தோமாவிடம் கூற, தோமா "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார். [யோவான்.20:27-28]**

பரிசுத்த திருச்சபையானது இம்மாதம் அன்னை ரோசா மிஸ்டிக்கா மற்றும் தூய தோமையார் ஆகியோரின் திருவிழாக்களை கொண்டாடுகின்றது. அன்னை மரியா பல்வேறு இடங்களில் பல்வேறு நபர்களுக்கு பல்வேறு விதங்களில் காட்சி கொடுத்திருக்கிறார். கொடுத்தும் வருகின்றார். அந்தவகையில் இம்மாதம் 13ம் திகதி ரோசா மிஸ்டிக்கா அன்னையை சிறப்பாக நினைவுகூர்கின்றது. அன்னை ஃப்யரினா என்ற தாதிக்கு இத்தாலி மிலான் நகரில் அல்பஸ் எனும் மலையடிவாரத்தில் 1947ம் ஆண்டில் தனது நெஞ்சில் மூன்று ஈட்டிகளை பதித்தவராக கண்ணீருடன் காட்சி கொடுத்தார். அவை செபம், மனஸ்தாபம, பரிந்துரை என்பனவற்றை குறித்து நிற்கின்றன. மீண்டும் அன்னை அதே பெண்ணுக்கு காட்சி கொடுத்த வேளையில் வெள்ளை, மஞ்சள், சிவப்பு என்னும் மூன்று நிறங்களைக் கொண்ட ரோஜா மலர்களை நெஞ்சில் பதித்தவராக காட்சி கொடுத்தார். வெள்ளை நிற ரோஜா அன்னை அதி பரிசுத்தம் நிறைந்தவராகவும் இறைவனின் மாசில்லா மகளாகவும் ஞானத்தின் இருப்பிடமாக திகழ்வதைக் குறிக்கின்றது. சிவப்பு நிற ரோஜா சுதனின் தாய் மரியா என்றும் அவரே இரக்கத்தினதும், வியாகுலங்களினதும் தாய் என்பதை குறித்து நிற்கின்றது. இறுதியாக மஞ்சள் நிற ரோஜாவானது மரியா தூய ஆவிக்கு அர்ப்பணமானவர் என்றும் அவரே விண்ணக மண்ணக அரசி என்றும் மற்றும் திருச்சபையின் தாய் என்பதையும் குறித்து நிற்கின்றது.

தூய தோமையார் இயேசுவின் பன்னிரு சீடர்களில் ஒருவராக இயேசுவோடு மூன்று ஆண்டுகள் இணைந்து பணிவாழ்வில் ஈடுபட்டும் மற்றும் அவரது போதனைகளைக் கேட்டும் அவர் யாரென்றும் அறிந்திருந்தும் இயேசு உயிர்த்த பின்பு சீடர்களுக்கு தோன்றியபோது அங்கு தோமா இருக்கவில்லை. சீடர்கள் இயேசுவைக் கண்டதாக கூறியும் அதனை நம்பவில்லை. இயேசு இரண்டாம் முறை காட்சி கொடுத்தபோது "இதோ! என் கைகள் இங்கே உன் விரலை இடு. உன் கையை நீட்டி என் விலாவில் இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்று தோமாவிடம் கூற தோமா "என் நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார். (யோவான்.20:27-28) இவ்வாறே நாமும் நமது வாழ்வில் எவ்வித ஐயமுமின்றி, முழுமையான விசுவாசத்தோடு, இறைவனை ஏற்று அவர் வழி நடக்க முயல வேண்டும். திருமுழுக்கின் வழியாக நாம் பெற்றுள்ள சீடத்துவ வாழ்விற்கு எம் முன்மாதிரிகையான வாழ்வால் சாட்சியம் பகர வேண்டும்.

மனிதரின் ஆன்மீக வாழ்வின் உறைவிடம் கடவுள் நம்பிக்கையில்தான் உள்ளது. தம்மையே வெளிப்படுத்தும் இறைவனுக்கு மனிதர் கொடுக்கும் மறுமொழிதான் நம்பிக்கை. மனித வாழ்வானது நாளாந்தம் பல்வேறு கவலைகள், கஷ்டங்கள், சோதனைகள், வேதனைகள் நிறைந்ததாக காணப்படுகின்றது. மனிதன் பலவேளைகளில் சோர்ந்து துவண்டு கடவுளை மறந்து விடுகின்றான். கடவுள் மீதான நம்பிக்கையை இழந்தவனாக காணப்படுகின்றான். ஆனால் இறுதிவரைக்கும் கடவுள் நம்பிக்கையில் நிலைத்திருப்போரே மீட்படைவர்.

இறையாசீருடன்
ஆசிரியர்



# இனிய சொல்

## சிரித்துப் பேசப் பழகுங்கள் !!!

**சிரிப்பு ஒரு சிறந்த மருந்தாகும்.**

**சிரிப்பதால் மனம் சுத்தமாகின்றது.**

"சிரித்தால் வாயில் உள்ள முத்தா உதிர்ந்துவிடும்" என்று சில சமயம் கிண்டலாகச் சிலரைப் பார்த்துக் கேட்க நேரிடும். "உம்" என்று இருப்போர் பலருடன் நல்லுறவு கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படும். புன்னகையுடன் ஒருவரை எதிர்கொண்டாலும், சிரித்துப் பேசினாலும் பிறர் மனம் மகிழும், முகமலர்ச்சியுடன் - பேசப் பழகியவர்கள், குடும்பத்தில் இருந்தாலும், நண்பர்கள் வட்டாரத்தில் இருந்தாலும் உறவினர் மத்தியில் இருந்தாலும் கலகலப்புக்குப் பஞ்சம் இருக்காது.

நாம் பழகுகின்ற ஒவ்வொருவரோடும் நட்பு நலம் காத்து வாழ்கின்ற பண்பை நமது இயல்பான பண்பாக வளர்க்க வேண்டும். அதற்காகவே யாரைப் பார்த்தாலும், முகத்திலே ஓர் இனிமை இருக்க வேண்டும். நமது முகமானது பிறர் நினைவில் ஓர் ஆக்கப்பூர்வமாகத் தொடர்புகொள்ள உதவியாக அமைய வேண்டும். உள்ளம் அழுதாலும் உதடுகள் சிரிக்கட்டும் என்பது புதுமொழியன்றோ!

இன்முகமாக இருப்பதோடு நாம் பிறரிடம் பேசும் பேச்சு, இனிய பேச்சாக அமைவது மிகவும் முக்கியம். பிறரோடு பேசும்போது கடுஞ்சொற்களைத் தவிர்க்க வேண்டும். "தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு" என்ற குறளையும் நாம் நினைவு கூர வேண்டும். தீயினால் சுட்ட புண் ஆறிவிடும், ஆனால் வாயினால் கடும் சொற்களைப் பேசும்போது, அது ஆறாமல் இருக்கும் என்பதால் வள்ளுவர் அதனை "ஆறாதே நாவினால் கூட்டவடு" என்று கூறியுள்ளார். எனவே கடுஞ்சொற்களைத் தவிர்த்து, இன்முகத்தையும் இனிய சொற்களையும் இயல்பாக ஆக்கிக்கொள்ள வேண்டும்.

இன்முகத்துடன் சிரித்துப் பேசப் பழக வேண்டும். சிரிப்பு ஒரு சிறந்த மருந்தாகும். நாம் சிரிப்பதால் மனம் சுத்தமாகின்றது. உடல் ஆரோக்கியமாகிறது. சிரிக்கும்போது நமது உடலிலுள்ள அனைத்து இரத்த நாளங்களும் விரிந்து சுருங்குகின்றன: இரத்த ஓட்டம் அதிகமாகிறது. இதனால் உடலில் நோயின் தாக்கம் குறைகிறது. மனம் விட்டு சிரிக்கின்ற பழக்கம் மருந்துவருக்கு நீங்கள் செலுத்த வேண்டிய பணத்தை குறைப்பதோடு, உங்களுடைய வாழ்நாளையும் நீடிக்கிறது. வேறு எங்கும் தேடி, பணம் கொடுத்து வாங்க வேண்டியதில்லை. மகிழ்ச்சி என்பது இனிமையான எண்ணங்களை வைத்திருப்பதாகும். நீங்கள் ஒருமுறைதான் வாழப்போகிறீர்கள். ஆதலால் உங்களையும் மற்றவர்களையும் மகிழ்ச்சி உள்ளவர்களாக மாற்றிட உங்கள் ஆற்றலைப் பயன்படுத்துங்கள். உலகில் உள்ள உயிரினங்களில் சிரிக்கத் தெரிந்த ஒரே உயிரினம் மனிதன் மட்டும்தான். மனிதனுக்கு இறைவன் வழங்கிய சிறப்பான வரம் சிரிப்பாகும். ஆகவே இறைவன் கொடுத்த சிறப்பான வரத்தை வீணாக்காமல், எல்லோரிடமும், இனிய முகம் காட்டி, சிரித்துப் பேசப் பழகுங்கள். ஆம்,இப்போதிருந்தே சிரியுங்கள்.


நாம் சிரிக்க, பழக முடியாமல், இருப்பதற்கு நம்மை அறியாமலே நம்மை நாம் முதன்மைப்படுத்திக் கொள்கின்ற செயல்கள் தினமும் நடந்து கொண்டிருக்கின்றன. நம்மை முதன்மைப்படுத்துகின்ற குணம் நமது முன்னேற்றத்திற்கும் நமது மகிழ்ச்சிக்கும் சிரிப்புக்கும் முட்டுக் கட்டையாக இருக்கிறது. என்று சொல்கிறார்கள். அது மட்டுமல்ல, யார் ஒருவர் தன்னை மட்டுமே முதன்மையாக வைத்துச் செயல்படுகிறாரோ அவர் தன்னுடைய நண்பர்களையும் உறவினர்களையும் தொலைத்து விடுகிறார் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால் யார் மற்றவருடைய நலனில் அக்கறைய இல்லாமல் இருக்கின்றாரோ, அந்த மனிதர் தனக்கும் மற்றவர்களுக்கும், ஏன் சமுதாயத்திற்கும்கூட மிகப் பெரிய இழப்பையும் தோல்வியையும் துன்பத்தையும், கொண்டு வருபவராக இருப்பார் என்றும் கூறுகின்றார்கள்.

"நான் தான் முக்கியம் : நான்தான் சிறந்தவன்" என்கின்ற மனநிலை தோல்விகளையும் துன்பங்களையும்தான் கொண்டு வருமே தவிர வெற்றிகளையும், மகிழ்ச்சியையும் சிரிப்பையும் முன்னேற்றத்தையும் கொண்டு வருவதில்லை. ஆகையால் உங்கள விருப்பத்தை முதன்மைப்படுத்தாமல், மற்றவரின் விருப்பத்தை முதலில் நிறைவேற்றுங்கள். உங்கள் நேரத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். உண்மையான அன்பை வெளிப்படுத்துங்கள். குறைகளைப் பெரிதுபடுத்தாமல், நிறைவினை மனதில் கொள்ளுங்கள். உங்கள் குடும்பத்திலும் சமுதாயத்திலும் குறை கூறாமல் நிறைவாகப் பேசுங்கள். மற்றவர்கள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்களோ, அதையே நீங்கள்...

15

## உண்மை உறைக்கும்

கமிலஸ்






"வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டு போகும்" என்பது அழகிய ஆழமான வார்த்தை" நமது முன்னோர்கள் ஒவ்வொன்றையும் அழகாகவும் மிக ஆழமாகவும் தெளிவாகவும் வலியுறுத்தியுள்ளார்கள்.

சிரிப்பு, நகைச்சுவை என்ற வார்த்தையை கேட்டாலே நமது உதடுகளில் புன்னகை பூ மலர்கிறது. கடவுள் நாம் அனைவரும் மகிழ்ச்சியா இருப்பதையே விரும்புகிறார். எவ்வளவு மருந்து மாத்திரைகள், குணப்படுத்தாத நோய்கள் வாய்விட்டு சிரிக்கும்போது குணமாகின்றன. இது அறிவியல் பூர்வமான உண்மை. அதனால்தான் ஜுலை முதல் நாள் உலக நகைச்சுவை தினமாக உலகம் கொண்டாடுகிறது.

எனது ஆசிரியர் இவ்வாறு கூறுவது வழக்கம் "ஐயா நீங்க எந்த மாதிரியான படங்களை விரும்பி பார்ப்பீர்கள்" என்று பாடசாலை மாணவர்களாக நாங்கள் இருந்த காலத்தில் வினவினோம். அதற்கு ஆசிரியர் "நான் அதிகம் விரும்பி பார்ப்பது நகைச்சுவை படங்களை, அதற்கான காரணம் எந்திரமயமான வாழ்க்கையில் சோகமான அல்லது திகில் நிறைந்தபடங்களை பார்த்து நோய் ஏற்படுத்திக் கொள்ள விரும்பாமல் நகைச்சுவை படங்களை பார்ப்பதனால் வயது குறைந்து சுறுசுறுப்புடன் செயல்படுகின்றேன்" என்றார். இது கதையல்ல நிஜம் இன்றும் அந்த ஆசிரியர் நல்ல இளமையுடன் இருக்கின்றார் என்றால் அதன் உண்மை உங்கள் அனைவருக்கும் புரிவது மட்டும் அல்லாமல் நீங்களும் அந்த சிரிப்பு மந்திரத்தை பின் தொடரலாம்.

குழந்தையின் சிரிப்பு கண்டு மயங்காதோர் யார் உண்டு. அதுவும் குழந்தை உறங்கும்போது சிரிக்கும் அழகை பார்த்து ரசிக்காத பெற்றோர் உலகத்தில் எத்தனை! எத்தனை; அது மட்டுமா... நாமும் தான் கண்ணாடி முன் நின்று சிரித்து பார்ப்போம். எவ்வளவு அழகான புன்னகை நிறைந்த முகம்! நாமும் தான் எவ்வளவு அழகு.

இதனைப் படிக்கும் அனைவருக்கும் ஒரு சவால்! நீங்கள் புன்னகை ஏந்திய முகத்துடன் அலுவல்களை தொடங்கிப் பாருங்கள். அன்றைய நாளில் கடவுளின் ஆசீர்வாதத்தை பகிர்ந்து கொள்வீர்கள். அதனை தினமும் தொடரும்போது உங்கள் வயது குறையும் நோய் உங்களை விட்டு ஓடிவிடும்.

நகைச்சுவையுடன் பேசக்கூடிய அல்லது சிரிப்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் பேசும் ஒருவரை சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்கும் பிடிக்கின்றது. ஒரு கூட்டத்தில் அல்லது நான்கு பேர் கூடி இருக்கும். இடத்தில் கூட நகைச்சுவையுடன் பேசுபவரையே அனைவரும் விரும்புகின்றனர். "அவரைக் கூப்பிடுங்கள் அவர் இருந்தால் நேரம் போவதே தெரியாது என்று சொல்பவர்கள் பலர். அந்தளவிற்கு நம் ஒவ்வொருவருடைய மனதிலும் நகைச்சுவை உணர்வு இருக்கின்றது.

குழந்தையின் சிரிப்பு, நட்பில் தோழமையில் சிரிப்பு, அன்பின் சிரிப்பு விழாக்களில் உறவினர்களுடன் சிரிப்பு இப்படி சிரிப்பின் வகைதான் எத்தனை எத்தனை! அதிலும் ஏழையின் சிரிப்பில் இறைவனை காணலாம் என்ற சான்றோர்களின் வாக்கில் எத்தனை எத்தனை அர்த்தங்கள். மனிதர்கள் சிரிப்புடன் வாழ்வதை காணும் வானகத் தந்தை மகிழ்ச்சி கொள்கின்றார் என்றால் மிகையாகாது. உலகத்தில் நாம் எதை மறந்தாலும் நகைச்சுவை நடிகர்களை நம்மால் எளிதில் மறக்க இயலாது. நகைச்சுவை கடவுளின் கொடை.

எந்திர கதியான பரபரப்பான இன்றைய காலத்தில் வாய்விட்டு சிரிப்போம். நோய்விட்டு வாழ்வோம்!

## வெற்றிக் கொள்வோம்

**இறைவா!**
**நாங்கள் உம்மிடம் வேண்டுவதெல்லாம்**
**உலகிலுள்ள எல்லாத் தீமைகளையும்**
**அழித்தருள வேண்டுமென்பதே!**

**புரிந்து கொள்ளுதல் மூலம்**
**அறியாமையை வெற்றிக் கொள்ளவும்,**

**தாராள குணத்தின் மூலம்**
**ஏற்றத் தாழ்வுகளை வெற்றிக் கொள்ளவும்**

**நம்பிக்கையின் மூலம்**
**அவநம்பிக்கையை வெற்றிக்கொள்ளவும்**

**உண்மையின் மூலம்**
**பொய்மையை வெற்றிக்கொள்ளவும்**
**அருள் தாரும்**



## இன்னும் அதிகமாக....

இறைவா! தாராள மனத்தை
எனக்குத் தந்தருளும்
உமக்கு உகந்த விதத்தில்
அன்பு காட்டவும், பணிபுரியும்
கணக்கிடாமல் கொடுக்கவும்,
காயத்தை கவனியாமல் போரிடவும்
ஓய்வைத் தேடாமல் உழைக்கவும்
கைமாறு கருதாமல் பணியாற்றவும்
உமது திருவுளத்தை நிறைவேற்றுகிறேன்
என்பதில் மட்டும் நிறைவு காணவும்,
எனக்கு வரம் தாரும்



# பொறாமை ஒழியட்டும்

எவரிடத்திலும், பொறாமை கொள்ளாதிருக்கும் குணத்தினை ஒருவன் பெற்றிருந்தால் அவன் பெறுவதற்குரிய செல்வங்களுள் அதனைவிட வேறு இல்லை.

பொறாமைதான் ஒரு மனிதன் அழிவுக்கு வகை செய்கிறது. பொறாமையுள்ள மனிதன் ஒருநாளும் உருப்படமாட்டான். பொறாமை என்பது தனி மனித ஆளுமையின் அழுகல் நோயாக இருக்கிறது. பொறாமை உள்ள மனிதன் வாழ்வில் முன்னேற்றுவதற்கு வழியில்லை. செல்வம் சேர்ப்பதற்கு வழி இல்லை பொறாமையே ஒரு மனிதனின் அழிவிற்கு அஸ்திவாரமாக அமைகிறது. இது தன்னையும் அழிவுக்கும் தன்னைச் சார்ந்தவர்களையும் அழிக்கும்.

### நால்வகை மனிதர்கள்

இந்த உலகில் வாழக்கூடிய மனிதர்களை நான்கு வகையாகப் பிரிக்கலாம். முதலாவது வகையினர், மேன்மக்கள், இரண்டாவது வகையினர் நல்லவர்கள், மூன்றாவது வகையினர் கெட்டவர்கள், நான்காவது வகையினர் மிகவும் கெட்டவர்கள்,

**முதல் வகையினர் :** நாம் கஷ்டப்பட்டாலும் அடுத்தவர்கள் கஷ்டப்படக் கூடாது என்று நினைப்பவர்கள். அடுத்தவர்களுக்காக துன்பத்தை அனுபவிக்கத் தயங்காதவர்கள்.

**இரண்டாவது வகையினர் :** நல்லவர்கள் நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்கள். தன்னுடைய நலத்தை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

**மூன்றாவது வகையினர் :** தன் சொந்த நலனுக்காக அடுத்தவர் நலனைக் கெடுக்கத் துணிந்தவர்கள். கெட்டவர்கள்.

**நான்காவது வகையினர்** எப்போதுமே கெடுதல் பண்ணிக்கொண்டே இருப்பார்கள்.

இவ்வாறாக சமுதாயத்தில் பொறாமையால் அலைகின்ற மக்கள் ஆயிரம் ஆயிரம். பொறாமையினால் அடுத்தவரின் பெயரைக் கெடுப்பார்கள், இல்லாத அவதூறுகளை பரப்பிடுவார்கள்.

### என்ன செய்ய வேண்டும்.

பொறாமையைக் களைந்திட என்ன செய்ய வேண்டும். முதலாவதாக நம்மிடமுள்ள பொறாமைக் குணத்தை ஒப்புக்கொள்ள வேண்டும். இது மாபெரும் சவால்.

இரண்டாவது உங்களிடம் உள்ள திறமைகளை அடையாளம் காணுங்கள். அதில் கூடிய கவனம் செலுத்துங்கள்.

மூன்றாவதாக நீங்கள் நிர்ணயிக்கின்ற வாழ்க்கை இலட்சியங்களை அடைய உங்களை நீங்களே ஊக்குவித்துக் கொள்ளுங்கள்.

நான்காவது மற்றவர் சாதித்திருக்கின்ற சாதனைகளை அங்கீகரித்து மனமுவந்து பாராட்டுங்கள். தாழ்ச்சி உங்களிடம் இருந்தால் தற்பெருமையும், பொறமையும் ஓடிவிடும்.

ஐந்தாவது பொறாமை உங்களிடம் இருக்கிறது என்றால் நல்ல உளவியலாளரிடம் பகிர்ந்து தீர்வு காணுங்கள்.

## படி சிந்தி


* பெரியவனுக்குச் சிறைக்கூடமும், தூக்கு மேடையும் கட்டுவதை விட சிறுவனுக்குப் பாடசாலை கட்டுவது சிறந்தது
* இளைஞனின் கல்வி புறக்கணிக்கப்படும் ஒரு சமுதாயத்தில் பக்தியோ, அறமோ, சுதந்திரமோ, நீண்ட நாள் தழைக்க முடியாது.
* பொதுவான வெற்றி என்பது மற்றவர்களை கைவிட்டுவிட்ட பின்பும், அயராமல் தொடர்வதாலேயே கிட்டுவதாகும்.



### இறைவார்த்தை கலா 5:26

**வீண் பெருமையைத் தேடாமலும், ஒருவருக்கு ஒருவர் எரிச்சல் ஊட்டாமலும் ஒருவர் ஒருவர்மீது பொறாமைப் படாமலும் இருப்போமாக**

**நீங்கள் மிகவும் நல்லவரா? நல்லவரா? கெட்டவரா? மிகவும் கெட்டவரா? சிந்தித்துப் பாருங்கள்**




# அமைதிக்கு ஓர் அன்னை

# புனித அன்னை திரேசா

தெரசா பார்க்க விரும்பிய மற்றோர் இடம் இல்லிநாயிஸ் மாநிலத்தின் பெயோரியா நகரம். இந்த ஊர் மக்கள்தான் அன்னையின் தாய்-சேய் நலத் தொண்டுக்குப் பண உதவி செய்துவந்தவர்கள். அந்நகரில் 1958இல் நடந்த மகளிர் தேசிய மாநாட்டில் தெரசாவின் உடன் உழைப்பாளர் சபையைச் சேர்ந்த எய்லீன் ஈகன் உரை நிகழ்ந்தியிருக்கிறார். அவர் அப்போதுதான் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குத் திரும்பியிருந்தார். எய்லீன் அம்மாநாட்டில் கலந்து கொண்டு அன்னை கல்கத்தாவில் புரிந்துவரும் அரும்பெரும் சாதனைகளைப் பற்றி உரையாற்றினார்.

இதைக் கேட்ட அமெரிக்க நாட்டு மகளிர்க்கு இந்தியப் பெண்களுக்கு உதவிபுரிய வேண்டும் என்னும் எண்ணம் மேலிட்டது. அதற்கு ஒரு திட்டத்தையும் அன்றே அவர்கள் வகுத்தார்கள். அதுதான் கல்கத்தாவில் செயல்பட்டுவரும் தாய்சேய் நலத்திட்டம். இதுவரை அவர்கள் செய்த உதவிக்கு அன்னை நன்றி தெரிவித்தார். அவர்களை நேரில் பார்க்க கொடுத்துவைத்தது தாம் பெற்ற பெரும்பேறு என்றார் அன்னை.

அன்னையுடன் மிக நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் பாட்னா மெடிக்கல் மிஷன் சகோதரிகள். பாட்னாவில் இவர்கள் நடத்தும் மருத்துவமனையில் தான் தெரசா மருத்துவப் பயிற்சி பெற்றார் என்பது வாசகர்களுக்கு நினைவு இருக்கலாம். சகோதரி டாக்டர் ஸ்டெ.ஃபனி இன்ஜென்டா, சகோதரி எலிஸ், சகோதரி சிரில் இவர்கள் அளித்த மருத்துவப் பயிற்சி தெரசா நடத்தி வந்த நிர்மல் ஹிருதய் விடுதியிலும், தொழுநோயாளர் குடியிருப்புக்களிலும் அவருக்கு எவ்வளவு கைகொடுத்தது என்று நீங்கள் அறிந்திருப்பீர்கள். இந்தச் சகோதரிகளின் சபைத் தலைவியைப் பார்க்க வேண்டும் என்னும் எண்ணம் தெரசாவுக்குப் பல நாட்களாக இருந்து வந்தது. ஆயினும் இதுவரை அதற்கு வாய்ப்பு கிட்டவில்லை.

1960ம் ஆண்டு அன்னை லாஸ் வேகாஸில் நடந்த தேசிய மகளிர் மாநாட்டில் கலந்துகொண்டு நியூயார்க் மாநகருக்கு வந்தார். அங்கே லீயோ விடுதி என்னும் இடத்தில் தங்கியிருந்தார். ஒருநாள் காலையில் திருப்பலிக்குச் சென்றிருக்கிறார். அப்போது அவரது இருக்கைக்கு முன் மற்றொரு சகோதரி அமர்ந்திருப்பதைக் கவனித்தார். மேலநாட்டுப் பாணியில் உடை அணிந்திருந்த அவர் யாரென்று தெரசாவுக்குத் தெரியாது. திருப்பலி முடிந்து அவர் வெளியே செல்ல எழுந்தார். அப்போதுதான் அவர் யார் என்று தெரசாவுக்குத் தெரிய வந்தது. அவர்தான் அமெரிக்கன் மெடிக்கல் மிஷன் சபையை நிறுவின சகோதரி அன்னா டெங்கால்.

அன்னை தெரசாவும், அன்னை டெங்காலும் 20ம் நூற்றாண்டில் தோன்றிய இரு சபையின் தலைவிகள். இவ்விருவருக்கும் சில ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் உள்ளன. இருவரும் உயரம் குறைந்தவர்கள். இருவரும் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட ஏழை மக்களுக்கு உதவும் நோக்கமுடன் சபையைத் தொடங்கினவர்கள். இருவரும் தென் ஜரோப்பிய பகுதியில் தோன்றினவர்கள். அன்னை தெரசா யூகோஸ்லாவியாவில் தோன்றியவர். அன்னை டெங்கால் ஆஸ்திரியா நாட்டில் பிறந்தவர். இருவரும் தங்கள் பயிற்சிக்காக அயர்லாந்து நாட்டை நாடியவர்கள். அன்னை தெரசா அயர்லாந்து நாட்டின் டப்லினில் தமது கழகத்தில் மருத்துவப் படிப்பை முடித்தார்.

1919ஆம் ஆண்டில் உலகப் போரின்போது பிரிட்டிஷ் அரசு இவரைச் சுதந்திரமாக நடமாடவிடவில்லை. எனவே அவர் ராவல் பிண்டியில் இருந்து கத்தரீன் மருத்துவமனைக்கு வந்தார். ராவல்பிண்டி தற்போது பாகிஸ்தானில் உள்ளது. ஆனால், அப்போது இந்தியாவின் ஒரு பகுதியாக இருந்தது. அங்கே மருத்துவப் பணி புரிந்துவந்தார். மரியாயின் பிரான்சிஸ்கன் மிஷனரி சபைக் கன்னியர் புரிந்துவரும் பணிகளைக் கேள்வியுற்று அச்சபையில் சேர்ந்தார். அப்போது துறவற வார்த்தைப் பாடுகளைக் கொடுத்த சகோதரிகளுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. எனவே அவர் அச்சபையைவிட்டு விலகினார். அன்னை தெரசா லொரெட்டோ கன்னியர் சபையை விட்டு புது துறவற சபையை நிறுவினதுபோல டெங்கால் தாயாரும் பிரான்சிஸ்கன் மிஷன் சபையைவிட்டு வெளியேறி ஒரு புதுச்சபையை நிறுவினார். அதுவே அமெரிக்கன் மெடிக்கல் மிஷன் சபை. 1925இல் மூன்று சகோதரிகளுடன் தொடங்கப் பெற்ற இச்சபையில் இன்று ஏறத்தாழ 2000 பேர் இந்தியா, பாகிஸ்தான், ஆப்ரிக்கா, லத்தீன் அமெரிக்கா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆகிய இடங்களில் பணிபுரிந்து வருகின்றனர்.

அன்னை தெரசாவும் அன்னை டெங்காலும் கடந்துவந்த பாதை ஒரே மாதிரியானதே. இவருடைய குறிக்கோளும் ஒன்றே. இருப்பினும் இருவருக்குமிடையே சில வேற்றுமைகளும் இருந்தன. அன்னை தெரசா மருத்துவத்தில் அடிப்படை பயிற்சிகள் பெற்றிருந்த போதிலும் அதில் பட்டப்படிப்பு எதுவும் படித்தவரல்லர். ஆனால் டெங்கால் தாயார் மருத்துவத் துறையில் முதுகலைப் பட்டம் பெற்றவர். அவரது தனித்திறமையே அறுவைச் சிகிச்சை செய்வதுதான். மற்றொரு வேற்றுமை அவர்களுடைய வயதில் வேறுபாடு தெரசாவுக்கு அப்போது வயது ஐம்பதுதான் அன்னை டெங்கால் 68ஐ எட்டிப் பிடித்திருந்தார்.

தெரசாவின் வெளிநாட்டுப் பயணத்தின்போது நடந்த மற்றொரு நிகழ்ச்சியை இங்கு தருகிறோம். அவர் கல்கத்தாவை விட்டுப் புறப்படுமுன் சகோதரி அந்திரேயாவின் பெற்றோர்களைச் சந்திப்பதாக அன்னை கூறியிருந்தார். வெளிநாட்டிலிருந்து வந்து தெரசாவின் சபையில் சேர்ந்த மூவருள் சகோதரி அந்திரேயாவும் ஒருவர். அவரின் பெற்றோர் சுவிட்சலாந்து நாட்டில் .ஃபிரிபர்க் என்னுமிடத்தில் இருந்தனர். அவர்கள் அன்னை தெரசாவின் வருகைக்காக .ஃபிரிபர்க் விமான நிலையத்தில் காத்துக்கொண்டிருந்தார்கள்.

அன்னை விமான நிலையத்தில் வந்திறங்கியதும் இருவரும் அவரைத் தங்கள் வீட்டுக்கு அழைத்துச் சென்றனர். சபையில் சேர்வதற்கு முன் சகோதரி அந்திரேயாவின் பெயர் பார்பரா. கல்கத்தாவில் தெரசா புரிந்துவரும் பணிகளைப் பற்றி மிஷன் பத்திரிகைகளின் வாயிலாக பார்பரா அறிந்திருக்கிறார். உடனே அவர் அன்னை தெரசாவின் சபையில் சேர விழைந்தார். குறிப்பாக அன்னை தொழுநோயாளர்பால் வைத்திருந்த அன்புதான் பார்பராவை அவர் பக்கம் ஈர்த்தது. "பார்பரா ஒரு மருத்துவராகி தொழுநோயாளர் மத்தியில் பணிபுரிவதை அதிகமாக விரும்பினாள்". என்கிறார் அந்திரேயாவின் சகோதரி.

அவர் சபையில் சேருவதை அவரின் தாயார் மறுக்கவில்லை. ஆனால், அவருடைய தந்தையார் அதை விரும்பவில்லை. அவருக்குத் தான் தாயாரைவிட மகள்மேல் அதிக பாசம் இருந்தது. தம் மகள் தம்மைவிட்டுப் பிரிந்துப் போவதை இன்னும் ஏற்றுக்கொள்ளாதவர் போல் காணப்பட்டார். அவர் அன்னை தெரசாவிடம் எதுவுமே பேசவில்லை. தம் மகளைப் பற்றி தெரசாவிடம் எதுவுமே பேசவில்லை. பிடிவாத குணம் உடையவர் போலும்!

சுவிட்சலாந்து நாட்டைவிட்டு புறப்பட்ட அன்னை உரோம் நகரைப் பற்றி எண்ணிக்கொண்டிருந்தார். அங்கே தம் சபையைப் பற்றி அதிகாரிகளிடம் எடுத்துக்கூறி அதைப் பாப்பானவரின் சபையாக உயர்த்த பரிந்துரைக்க வேண்டும் என ஆவல்கொண்டார். இதுவே அவரது ஏக்கம். இதுவே அவரது நோக்கம்.

ஆகவே .ஃபிரிபர்க் நகரிலிருந்து புறப்பட்டு அன்னை உரோம் நகரில் வந்திறங்கினார். தெரசா உரோம் நகருக்குச் செல்வது இது முதல் தடவை. பனிக்காலம் ஆகையால் குளிர் கடுமையாக இருந்தது. அதையும் பொருட்படுத்தாமல் வத்திக்கான் அரண்மனையை நோக்கிச் சென்றனர். தம் சபையித் சட்டதிட்டங்கள் அடங்கிய தட்டெழுத்துப் பிரதியையும் சபையின் செப நூலையும் எடுத்துக்கொண்டு வத்திக்கான் அரண்மனையை அடைந்தார். பாப்பானவரைச் சந்திக்க வேண்டுமென்றால் முன் அனுமதி பெறவேண்டும்.

அதற்காக காத்துக் கொண்டிருக்கும் வேளையில் தெரசாவின் சகோதரர் லாசர் அன்னையைச் சந்திக்க வந்தார். ஏறத்தாழ 31 ஆண்டு இடைவெளிக்குப் பின் நடக்கிற ஒரு சந்திப்பு இது 1929ஆம் ஆண்டு தெரசா ஸ்காப்ஜே ஊரைவிட்டு இந்திய நாட்டுக்கு வந்த பின்னர் லாசரைச் சந்திக்கவே முடியவில்லை. அன்று தெரசா தம் தாயிடமும் தமக்மை ஆஜேயிடமும் விடைபெற்றுப் புறப்படும் போது லாசர் வீட்டில் இல்லை. அவர் ஆஸ்திரியா நாட்டு இராணுவப் பள்ளியில் சேர்ந்து...

## மறக்க முடியாத சந்திப்புக்களும் அனுபவங்களும்



15ம் பக்கம்

தொகுப்பு

**அருட்சகோதரர் R. ஜோசப் ஜெயகாந்தன்**

# தேர்வு ஒரு க( வ )லை

வருடம் முழுவதும் கடின உழைப்போடு நாம் படித்த பாடங்களை கேட்கப்பட்ட கேள்விக்கு ஏற்ப விடையளிக்க வேண்டும் என்று நினைத்தவுடனே நமக்கு ஏற்படுவது கவலை, பயம் ஆனால், அது கவலையல்ல, பயமல்ல மாறாக, அது ஒரு கலை, பலம். ஒரு மாணவன் எவ்வளவு நன்றாகப் படித்திருந்தாலும் வருடம் முழுவதும் செய்த கடின உழைப்பின் பயன் அவன் தேர்வு எழுதும் கலையில் தான் இருக்கிறது. அதற்கு மிக அதிக கவனம் கொடுக்கப்பட வேண்டும். இதைப்பற்றி நமக்கு நம் ஆசிரியர்கள், பெற்றோர்கள், செய்தித்தாள்கள், நண்பர்கள் என்று ஒவ்வொருவரும் தங்களால் ஆன அறிவுரைகளைச் சொல்லிக்கொண்டே இருப்பார்கள். நாம் இங்கு பார்க்கப் போவது தேர்வு எழுதும் கலையைப் பற்றி. உற்சாகத்தோடு தேர்வை எதிர்கொள்ளும் பலத்தைப் பற்றி

## அடுத்த மாதம் க.பொ.த உயர்தரம் எழுத இருக்கும் மாணவர்களுக்காக ஒரு சில துணுக்குகள்.

## வாசித்து பயன்பெறுங்கள்



### தேர்வுக்கு முந்தைய நாட்கள்

1. பாடக்குறிப்புக்களை வரிசைப்படுத்துதல் : என்பது இதுவரை நாம் படிக்கும்போது எடுத்த குறிப்புக்களை தேர்வு அட்டவணைக்கு ஏற்ப ஒழுங்குபடுத்துதல் ஆகும்.
2. கடந்த 5 ஆண்டுகளின் வினாத்தாள்களில் உள்ள வினாக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தல்.
3. மாதிரி வினாத்தாள்களுக்கு விடைகளை எழுதி அதை தெரிந்த ஆசிரியர்களிடம் கொடுத்து மதிப்பிடல்
4. கூடுதல் நேரப் படிப்பு : இதுவரை எடுத்துக் கொண்ட நேரத்தைவிட இந்த நாட்களில் சற்று அதிக நேரம் செலவிடுதல் (6-8 மணிநேரம்)
5. போதிய ஓய்வு என்பது மிக முக்கியமான ஒன்று. ஒரு நாளைக்கு குறைந்தது 6-7 மணி நேரமாவது இரவில் ஓய்வு எடுக்க வேண்டும்.

### தேர்வு நாட்கள்

1. மனசே அமைதி : என்பது உள்மன ஓய்வு. காலை எழுந்தவுடன் காலைக்கடன்களை முடித்துவிட்டு அமைதியான சூழ்நிலையில் அமர்ந்து குறைந்தது 10-15 நிமிடம் மனதை ஒருமுகப்படுத்தி அமைதி நிலைக்குக் கொண்டு வருதல்.
2. தேர்வு எழுதும் பேனாவில் குறைந்தது 10-15 நிமிட கையெழுத்துப் பயிற்சி மிகவும் அவசியம்.
3. காலை உணவு மிக மிக முக்கியம். அதேவேளையில் விரைவில் செரிமாணம் அடையும் உணவுப் பொருட்களை தேவையான அளவு உட்கொள்ளுதல் அவசியம். எண்ணெய் மற்றும் கொழுப்பு சார்ந்த வகைகளை தவிர்த்தல் நலம் பயக்கும்.
4. தேர்வு உபகரணங்களை மறவாமல் எடுத்து வைத்தல் வேண்டும்.
5. இறைவேண்டல் நம்முடைய கடின உழைப்பை இறைவன்பதம் வைத்து தேர்வை சிறப்பாக எழுதத் தேவையான அருளை வேண்டுதல். குறிப்பாக பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் ஆசி வேண்டுதல்.

### தேர்வு நேரம்

1. முன்னதாகவே வருதல் : தேர்வுக்கு 15-20 நிமிடங்கள் முன்னதாகவே தேர்வு மையத்தில் இருத்தல் தேவையற்ற பதட்டத்தைத் தவிர்க்க உதவும்.
2. மூச்சுப் பயிற்சி அல்லது மணிக்கட்டுப் பயிற்சி கண்களை மூடியவாறு நன்றாக மூச்சை உள்வாங்கி வெளிவிடுதல் மற்றும் மணிக்கட்டை மெதுவாக மேலும் கீழும் அசைத்தும் விரல்களை மடித்தும் பயிற்சி செய்வது நம்மை அமைதி நிலைக்கு கொண்டு வரும்.
3. விடைத்தாள் தகவல்கள் : விடைத்தாள் கொடுக்கப்பட்டவுடன் அதில் எழுதப்பட வேண்டிய தகவல்களை எழுதுதல் மிக மிக முக்கியமான ஒன்றாகும். தேர்வு எண், தேர்வு பாடம் ஆகியவற்றை முதலில் குறிப்பிடுவது சாலச் சிறந்தது.
4. கேள்வித்தாள் படித்தல் மற்றும் நேர மேலாண்மை : கேள்வித்தாளை பொறுமையாகப் படித்து அதற்கு ஏற்ப நேர மேலாண்மை செய்வது அவசியம்.
5. தொடுத்து எழுதுதல் : ஒவ்வொரு விடையையும் எழுதும் முன் மனதில் எழுதப்போவதை விரைவாக தொடுத்தபின் எழுதும்போது தேவையற்ற நேர விரயம் இருக்காது.

### தேர்வுக்குப் பின்

1. விடைத்தாள் சரிபார்த்தல் : தேர்வை 5-10 நிமிடங்களுக்கு முன்பாக முடித்து விடைத்தாள் சரியாக கட்டப்பட்டு இருக்கிறதா? தேர்வு எண், மொத்தப் பக்கங்கள் போன்றவற்றை சரிபார்த்தல் அவசியம்.
2. சரியா? தவறா? தேர்வு அறையை விட்டு வெளியே வந்தபின் சக மாணவ, மாணவியரிடம் விடைகளை சரியா? தவறா? என்று சோதித்தல் வேண்டாம். அது அடுத்த தேர்வை சிறப்பாக எழுத உதவாது. தேவையற்ற மன உளைச்சலைத்தான் கொடுக்கும். எனவே இதைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும்.
3. மதிய உணவு மற்றும் ஓய்வு : மதிய உணவை நன்றாக உண்டபின் ஒரு அரைமணி நேர அல்லது 1 மணி நேர ஓய்வு புத்துணர்ச்சியைக் கொடுக்கும்.
4. தேர்வு உபகரணங்களை சரிபார்த்தல் : அடுத்த தேர்வுக்குத் தேவையானவற்றை இப்பொழுதே சரிபார்த்து எடுத்து வைப்பது மிக நன்று.
5. தேர்வுக்கு தயார் : இப்பொழுது புது புத்துணர்ச்சியுடன் அடுத்த தேர்விற்காக முழு பலத்துடன் தொடங்கலாம்.

என் இனிய மாணவ மாணவியரே! நீங்கள் ஆளப்பிறந்தவர்கள். சிகரம் தொடுபவர்கள். உங்கள் பலத்தை நீங்கள் குறைத்து மதிப்பிடாதீர்கள். எதற்காக படிக்கிறோம்? யாருக்காகப் படிக்கிறோம்? என்ற எண்ணம் நாம் எப்படி படிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கிறது. கடின உழைப்பிற்கு ஈடு இணை இவ்வுலகில் ஏதுமில்லை






மன்னிப்பது சுவாசிப்பதைவிட முக்கியம்
மன்னிப்பதால் வெறுப்பான உள்ளம் மாற்றமடைகிறது
மன்னிப்பதால் உலகில் தீமை குறைகிறது
மன்னிப்பதால் சமாதானம் நிரம்புகிறது

மன்னிப்பவர் தெய்வ நிலைக்கு உயர்கிறார்
மன்னிப்பவர் மன அமைதி பெறுகிறார்
மன்னிப்பவர் உறவில் வளர்கிறார்
மன்னிப்பவர் மனமகிழ்ச்சி அனுபவிக்கிறார்

மன்னிக்க மறுப்பதால் உறவு விரிசலடைகிறது
மன்னிக்க மறுப்பதால் மனிதம் பாதிப்புக்குள்ளாகிறது
மன்னிக்க மறுப்பதால் செபங்கள் பலனளிப்பதில்லை
மன்னிக்க மறுப்பதால் தீய ஆவியால் அலைக்களிக்கிறோம்.

மன்னிப்பின் மேன்மையை உணர்ந்திடுவோம்
மன்னிப்பினால் புது உலகம் படைத்திடுவோம்
மன்னிப்பினால் சகோதரத்துவ உறவை வளர்த்திடுவோம்
மன்னிப்பதால் பகைமையை விரட்டிடுவோம்


மன்னிப்போம் மனதார மன்னிப்போம்
மன்னிப்போம் ஏழேழு எழுபது முறை மன்னிப்போம்
மன்னிப்போம் உறவு வளர மன்னிப்போம்
மன்னிப்போம் அன்போடு மன்னிப்போம்




**மன்னித்துவிடு**

**உன் மனதில் மகிழ்ச்சி தொடரும்**

## சிந்திப்போம்



**அன்னை தெரேசா**


கருவுற்றால் ஒரு குழந்தைக்கு
மட்டும் அன்னையாக முடியும்.
ஆனால் கருணையுற்றால்
ஆயிரம் குழந்தைகளுக்கு
அன்னையாக முடியும்.



### மரங்கள்

இறைவா எனக்கு கண்ணீர்
விடும் வரத்தை தருவாயா?
என்னை வெட்டி வீழ்த்தும் மனிதர்களிடம்
கண்ணீர் விட்டாவது கெஞ்சிப் பார்க்கின்றேன்.

### கல்வி



இரண்டு நாளைக்கு ஒரு பென்சிலா?
அதட்டும் அப்பா, தவறாமல் குடிக்கிறார்
ஒரு நாளைக்கு 10 சிகரெட்டை

### அன்பு மலர்கள்



அதர்மத்தைக் கூட
அடி பணிய வைத்துவிடும்

கட்டிப்போட்டு வைத்தாலும்,
கண்டிப்பாய்...
புன்னகைதான் செய்வோம்



# இறைவார்த்தை வழிபாடு

## WLX - பேதுரு -

### பொதுக்காலத்தின் 13வது ஞாயிறு (02.07.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 13வது ஞாயிறு தின வழிபாட்டில் பங்கேற்க வந்திருக்கும் இறைமக்களே! சீடத்தவ வாழ்க்கையை சிந்திக்க இன்றைய இறைவார்த்தைகள் நம்மை அழைக்கின்றது. தன்னலம் துறப்பதே சீடத்துவ வாழ்வின் சிறப்பாகும். கிறிஸ்துவே என் ஆதாயம் கிறிஸ்துவே எனது ஒப்பற்ற செல்வம் அவர் பொருட்டு நான் அனைத்தையும் இழந்து விட்டேன். கிறிஸ்துவை ஆதாயமாக்கிக்கொள்ள எல்லாவற்றையும் குப்பையாக கருதுகின்றேன் என்கிறார் தூய பவுல் அடியார். நாம் வாழுகின்ற இந்த அதி நவீன சமுதாயத்தில் ஆசை என்ற கற்களைக் கொண்டு பொறாமை என்னும் சாந்து பூசி கட்டப்பட்ட சுயநல வீட்டிலே வாழ்ந்து கொண்டிருக்கிறோம் இதனால் எம் மத்தியில் பிரச்சினைகள் மலிந்து காணப்படுகின்றன. இந்நிலையில் இயேசுவின் சீடத்துவ அழைப்பு நம்மைச் சிந்திக்க வைக்கின்றது. தம் சிலுவையை சுமக்காமல் என்னை பின்பற்றி வருவோர் என்னுடையோர் அல்லர் என்கிறார் இயேசு. நமது வாழ்க்கையில் ஏற்படும் நெருக்கடிகள் சவால்களை வெற்றிக்கொள்ள வன்முறைக் கோலங்களை துரத்தி விட்டு முரண்பாடுகளை அகற்றி விட்டு இயேசுவின் உண்மையான சீடர்களாக வாழ வரம் வேண்டுவோம்.

**முதல் வாசகம் : 2 அர 4:8–11, 14–16**
ஆண்டவரின் மனிதர் வரும்பொழுதெல்லாம் இங்கே தங்கிச் செல்லட்டும்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரின் பேரன்பைப் பற்றி நான் என்றும் பாடுவேன்

**இரண்டாம் வாசகம் : 2 உரோ 6:3–4,8–11**
கிறிஸ்துவோடு நாம் இறந்தோமாயின் அவரோடு வாழ்வோம் என்பதே நாம் கொண்டுள்ள நம்பிக்கை

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட வழி மரபினர். அரச குருக்களின் கூட்டத்தினர். தூய மக்களினத்தினர் உங்களை இருளினின்று தமது வியத்தகு ஒளிக்கு அழைத்துள்ள வரின் மேன்மை மிக்க செயல்களை அறிவிப்பது உங்கள் பணி அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 10:37 – 42**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

தூய்மையின் முழுவடிவே அன்பிறைவா! எப்பொழுதும் தூய பாதையில் தன் மக்களை வழிநடத்தும் திருச்சபைக்காகவும், அதன் தலைவரான திருத்தந்தை, இயேசு கிறிஸ்துவின் ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது சீடத்துவ வாழ்வில் நிலையாய் வாழ்ந்திடத் தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

உண்மையின் உறைவிடமே அன்பிறைவா! நாட்டை வழிநடத்தும் தலைவர்களும் பொறுப்புள்ள அதிகாரிகளும் உலக செல்வத்திற்கு அடிமையாகாமல் தங்களை வெறுமையாக்கி தமது அழைத்தலைப் புரிந்து கொண்டு மக்கள் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து நாட்டை வளமாக்க வேண்டிய நல்லுள்ளம் கொண்டவர்களாக வாழ்ந்திடத் தேவையான வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

தியாக்தின் திருஉருவே அன்பிறைவா! உமது சீடத்துவத்தைப் பின்பற்றும் நாங்களும் எங்கள் சிலுவைகளை முழுமனதோடு சுமந்து செல்லவும் உலக செல்வங்களை தியாகம் செய்யவும், உலகம் ஒரு சத்திரம், விண்ணகம் தான் உண்மையான வீடு என்பதை உணரவும் தூய்மையான பாதையில் இயேசுவைப் பின்தொடரவும் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

### பொதுக்காலத்தின் 14வது ஞாயிறு (09.07.2017)

**வாசக விளக்கம்:** பொதுக்காலத்தின் 13வது வாரத்தில் கால்பதிக்கும் இறை அன்பர்களே உறவுகளே இன்றைய உலகில் மனித வாழ்வு சுகமாக, சுவையாக, ஆடம்பரமாக இருக்க வேண்டும் இதை அடைவதற்காக எந்த வழியைப் பின்பற்றினாலும் கவலை இல்லை என்ற மனப்பான்மையுடன் வாழும் நமக்கு இன்றைய இறைவார்தை வழியாக இயேசு பாடம் கற்பிக்கின்றார். வாழ்வில் வேதனையா? வாழ்க்கை சுமையாய் தெரிகிறதா? உள்ளம் கலங்குகிறதா? நாள் முழுவதும் ஒரே பிரச்சனையாக உள்ளதா? முதலில் என்னிடம் வா என்கிறார் இயேசு. பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன் எனத் தேற்றுகின்றார். சுமைகள் இல்லாமல வாழ்க்கை இல்லை சுமையே வேண்டாம் என்பவர் இவ்வுலகில் வாழத் தகுதியற்றவர்கள். சுமைகள் எல்லாருக்கும் உண்டு. ஆனால் எப்படி சுமைகளை சுகமாக்குவது பளுவை எளிதாக்குவது என்பதில தான் தடுமாறுகின்றோம் பலவிதமான சுமைகளால் தத்தளிக்கும் நமக்கு இயேசு அற்புதவெளிச்சதைக் காட்டுகின்றார். அவர் காட்டும் பாதையில் நாம் நடந்தால் நமது சுமைகளை சுகங்களாக மாற்றலாம் இதற்கு வேண்டிய அருள் வரங்களை கேட்டிடப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : செக் 9:9–10**
இதோ உன் அரசர் உன்னிடம் வருகிறார்.

**பதிலுரைப் பாடல் :**
என் கடவுளே என் அரசே உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்

**இரண்டாம் வாசகம் : உரோ 8:9,11–13**
தூய ஆவியின் துணையால் உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால் நீங்கள் வாழ்வீர்கள்

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா தந்தையே! விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே உம்மைப் போற்றுகின்றேன் ஏனெனில் விண்ணரசின் மறைபொருளை குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத்தேயு 11:25–30**

**விசுவாசிகளின் மன்றாட்டு**

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

வாருங்கள் இளைப்பாருங்கள், கற்றுக்கொள்ளுங்கள் என்ற இயேசுவின் வார்த்தைகளை தனதாக்கி தன் மக்களை நிலைவாழ்வுக்கு அழைத்துச் செல்லும் திருச்சபையையும், திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் ஆகிய அனைவரும் தமது சீடத்துவ வாழ்வில் நிலையாய் வாழ்ந்திடத் தேவையான அருள்வரங்களை பொழிந்தருள வேண்டுமென்று...

எமது நாட்டில் வறுமை நோய் பிணி, துன்பங்களால் அல்லறும் மக்களுக்கான உதவிகளை பாராட்சமின்றி வழங்கி அவர்களைத் தேற்றவும், வாழ்வுக்குத் தேவையான நிரந்தர வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கவும், எமது நாட்டை வளமாக்கத் தலைவர்களும் தொண்டர்களும் மக்களும் ஒன்றிணைந்து செயல்படவும் வேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

கிறிஸ்துவின் மக்களாகிய நாமனைவரும் ஆவிக்குரியவர்களாக கிறிஸ்துவின் மதிப்பீடுகளின்படி வாழவும் இயேசுவே எம் கவலைகளை எடுத்துக் கொள்ளும் எம் சுமைகளைச் சுமந்து கொள்ளும் எமக்கு விடுதலை தாரும் என்று மன்றாடவும் சுமைகள் சுகமானதே ஏனெனில் அவர் நுகம் எளிது என உணர்ந்து கொள்ளவும் வேண்டிய மனநிலையைத் தந்தருள வேண்டுமென்று...

## வாய்ப்புகள் வரும் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன் சந்தர்ப்பங்களைத்தேடி செல்பவர்களே வாழ்வில் வெற்றி பெறுகிறவர்கள்




## ‘காற்றுள்ள போதே தூற்றிக்கொள்’

வளமான வாழ்க்கை என்பது
ஏராளமான வாய்ப்புகளைக் கொண்டது
தேடி வரும் வாய்ப்பு என்றிராமல்
தேடிச் சென்றால் வாய்ப்புகள்
பல உருவாகிடுமே

ஒரு கதவு மூடி விட்டாலும்
மறு கதவு திறந்து கொள்ளும்
வாய்ப்புகள் மலைபோல் குவிந்துள்ளது
தேடி எடுத்தால் வாழ்வை வளப்படுத்தும்

வாய்ப்புகளைச் சரிவரப் பயன்படுத்தி
மனதினில் சரியென்று படுபவற்றை
நல்ல செயல்பாடுகள் உள்ளவற்றை
துணிவோடு செய்தால் சிகரம் தொடலாம்

வாய்ப்புகளை நன்கு பயன்படுத்தியதாலே
வானத்தை வசமாக்கிக்கியவர்கள் பலருக்கு
உரும்மாய் பிடித்த நான்கு தூண்கள்
இலட்சியம், திட்டம், உழைப்பு, விடா முயற்சி

திறமையோடு அறிவும் இணைந்துவிட்டால்
தடைக்க கற்றல் கூட படிக்கற்களாகும்
முன்னேறியே தீருவேன் என்ற மன உறுதி
வாய்ப்புகளால் ஏற்றம் பெற்றிடுமே!

உன்னைச் சுற்றிலும் ஓராயிரம் வாய்ப்புகள்
நீதான் விழித்தெழுந்து வசமாக்கிக் கொள்
நாளைய தலைமுறை தேடி வருபவர்கள்
வாய்புகள் பல உருவாக்கி சாதனைகளாக்கு




எங்கே இருக்கின்றீர்களோ,
அங்கே என்ன என்ன
இருக்கின்றதோ, அதைக்
கொண்டு எவ்வளவு நல்லது
செய்ய முடியுமோ அதைச்
செய்யுங்கள்அப்போது வாழ்வு
அர்த்தம் பெறும்

☆ மலைகள் எத்தனை வேகமான சூறாவளி வீசினாலும், அசைந்துக்கொடுப்பதில்லை.

☆ அறிவாளிகள் புகழ்ச்சிக்கு மயங்கி அடிமையாகி ~விடுவதில்லை.

☆ சீரான செலவு செய்து சேமித்து வைக்கப்படும் பணமே சிறந்ததொரு வருமானமாக இருக்கும்.

☆ அன்பும் வணிகமும் எதிரெதிர் துருவங்கள். அன்பின் வணிகத்திற்கு இடமில்லை. வணிக்கத்தில் அன்பிற்கு இடமில்லை.

☆ ஒருவருடைய விமர்ச்சனம் உங்களுக்கு எரிச்சலை உண்டு பண்ணினால், அந்த விமர்சனம், சரியானதே, ஏற்றுக்கொண்டு, திருத்திக்கொள்ள முயற்சி செய்தால் உங்களுக்கு வெற்றியும், முன்னேற்றமும் அவசியம்.

# "மனித குலமே இறைவனின் அருமையான மிக உன்னதமான படைப்பாகும்"

## கொழும்பு உயர் மறைமாவட்ட கர்தினால் ஆண்டகை



என் அன்பின் அருட்பணியாளர்களே கொழும்பு உயர் மறைமாவட்ட மக்களே,

ஆண்டவரில் அனைவருக்கும் வாழ்த்துக்கள்

இவ்வாண்டு மாசித் திங்கள் 19ஆம் திகதி ஆழ்கடலில் திருச்சுரூபப் பவனியை மேற்கொண்ட பேருவலை பங்கு மக்கள் பயணித்த படகு துரதிர்ஷ்டவசமாக மூழ்கியதால், ஏற்பட்ட உயிர் இழப்புக்கள், பலத்த காயங்களுக்குட்பட்டோர் பற்றிய நிகழ்வு மறக்க முடியாததொன்றாகும். எனவே இத்தகைய அசம்பாவிதங்களைத் தடுக்க சில ஒழுங்கு விதிமுறைகளை உருவாக்க வேண்டியது அவசியமாகின்றது. இதற்கமைய இவ்வாறான திருச்சுரூப பவனி மேற்கொள்ளுவோரால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய இவ்விதி முறைகள் பற்றி திட்டமிட அருட்தந்தை சாம் குயின்டஸ் பெரேரா அடிகளார் தலைமையிலான ஒரு குழுவை நான் நியமித்துள்ளேன்.

அவர்களும் பின்வரும் துறைகள் சார் நிறுவனங்களாகிய

- ✷ (மீன், நீர் வளம் சார் திணைக்களம்)
  Department of fisheries and aquatic resources sri lanka
- ✷ (இலங்கை கடற்படையினரின் வாழ்வும் பகிர்வும்)
  Life and Sharing school of the sri lanka navy

08.03.2017 கால அளவில் வெளியிட்ட சிறப்பு சுற்றுமடல்களின் விடயங்களையும் பயன்படுத்தி உருவாக்கிய விதி முறைகளை மனப்பூர்வமாக ஏற்று அவற்றை இந்த எனது சுற்றுமடல் வழியாக அதிகாரப் பூர்வத்தோடு பிரகடனம் செய்கிறேன். எனவே கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்குட்பட்ட பகுதிசார் பொறுப்பாளர்கள் இவ்வாறான, கடல், வாவி, ஆறு மார்க்கமாக திருச்சுரூபப் பவனிகளை ஒழுங்கமைப்போர் பின்வரும் ஒழுங்கு விதிமுறைகளையும், சட்டதிட்டங்களையும் மிகக் கவனத்தோடு கடைப்பிடிக்க நான் கண்டிப்பாக ஆணையிடுகின்றேன். மேலுமாக நான் அறியத்தருவது, இவ் ஒழுங்குமுறைகளுக்கு அமைய நடவாதவிடத்து, இவ்வாறான திருச்சுரூபப் பவனிகளுக்கு அதிகார பூர்வமாக தடைவிதிக்கப்படும் என்பதை கவலையோடு தெரிவிக்கின்றேன்.

மனித குலமே இறைவனின் அருமையான மிக உன்னதமான படைப்பாகும். ஏனெனில் அவர்களை தமது சாயலாக மட்டுன்றி தமது உயிர் மூச்சை அவர்களுக்குள் ஊதி அவர்களை உயிரோடு வாழ படைத்துள்ளார். எனவேதான் உயிரைப் பாதுகாக்க நாம் ஒவ்வொருவரும் நடவடிக்கை எடுக்க வேண்டியது நமது தலையான கடமையாகும்.

நமது பங்கு ஆலயங்கள் திருத்தலங்களுக்கு அமைவாக ஊர்வலங்களை ஒழுங்குசெய்ய நமக்கு உரிமையுண்டு. எனினும் இவ்வாறான செயற்பாடுகளை நாம் மேற்கொள்ளும்போது நமது கவனக்குறைவு, முன் எச்சரிக்கை, அலட்சியங்கள் காரணமாக மக்களுக்கு உயிர் ஆபத்து வராமல் முற்பாதுகாப்பாக இருக்க வேண்டும், இது ஒவ்வொரு ஆயர், அருட்பணியாளர், துறவியர், பொதுநிலையினரின் பொறுப்பாகும். எனவே இவை போன்ற ஊர்வல ஒழுங்குகளை மேற்கொள்வோர் மிகக்கவனத்தோடு பின்வரும் விதிமுறைகளை கையாள கடப்பாடுள்ளவர்களாவர்.

### மிக உன்னிப்பாக கவனத்தோடு கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

1) இவ்வாறான திருச்சுரூபப் பவனி மீன்பிடி படகுகளை பயன்படுத்த விளையுமிடத்து, அவை பதிவு செய்யப்பட்ட படகுகளாகவும், பின்வரும் துறை அதிகாரிகளின் அனுமதியைப் பெற்றவையாகவும் இருக்க வேண்டும்.

### அனுமதி பெற வேண்டிய துறைகள்

- ✷ (மீன், நீர் வளம் சார் திணைக்களம்)
  Department of fisheries and aquatic resources sri lanka
- ✷ (கரையோர பாதுகாப்பு திணைக்களம்)
  Department of coast conservation.
- ✷ (இலங்கை கடற்படை மற்றும் காவல்துறை)
  The Sri lanka Navy and the Sri Lanka Police.

2) தெரிவு செய்யப்பட்ட படகுகளை மக்கள் பிரயாணம் செய்வதற்கு ஏற்றனவா என்பது பற்றி பரிசீலித்து உறுதிப்படுத்தப்படனவாக இருக்க வேண்டும்.

3) ஒவ்வொரு படகிலும் அனுமதிக்கப் பெற்ற எண்ணிக்கைக்குரிய நபர்கள் மட்டுமே ஏற்றப்பட வேண்டும்.

4) படகுகளில் பிரயாணம் செய்யும் ஒவ்வொருவரும் நீரில் முழ்கா குறுஞ்சட்டை (life Jacket) அணிந்து கொள்ள வேண்டும்.

5) படகு ஓட்டுநர் அனுபவமும் செயலுக்கு தகுதி பெற்றவராகவும் இருக்க வேண்டும்

6) உயிர் காப்பாளர்களது சேவை ஒழுங்கு செய்யப்பட்டு அவர்கள் ஊர்வலத்தில் உதவக்கூடிய முறையில் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

7) காலநிலை மாற்றம் பற்றிய விழிப்புணர்வுடன், சீற்றத்துடன் கூடிய கடல் அலைபோன்ற கால நிலைமாற்றங்கள் காணப்படுமிடத்து, இதுபோன்ற திருச்சுருபப் பவனிகள் மேற்கொள்ளக்கூடாது

8) மீன்பிடிக்கு தேவையான அனைத்து கருவிகளும் படகுகளிலிருந்து அகற்றப்பட வேண்டும்.

படகில் சம நிலை இன்மையினால் ஆபத்து ஏற்படாமல் இருக்கப் பிரயாணம் செய்வோர் திடிரென தம் இருப்பிடங்கள் மாற்றாதபடி அமர்ந்து கொள்ள முற்கூட்டியே அறிவுறுத்தல் கொடுக்கப்பட வேண்டும்.

மேலுமாக மேற்கூறிய நிபந்தனைகளை மேற்கொண்ட-பின்பு என்னிடமிருந்து அல்லது உங்களது மறைமாவட்ட ஆயரினதோ அல்லது பதில் ஆயரிடமிருந்தோ திருச்சுரூபப் பவனிகளை ஆரம்பிப்பதற்கு முன்னதாக எழுத்து வடிவில் அனுமதி பெறுவது மிக முக்கியமானதாக அமைகிறது

அன்புக்குரிய சகோதர சகோதரிகளே, ஆழ்ந்த விசுவாசத்தோடும், பயபக்தியோடும் சமய திருச்சுரூபப் பவனிகளில் பங்கு கொண்ட பேறுவலை பக்தர்களுக்கு ஏற்பட்ட அவல நிலை மிகக் கவலைக்குரியதாகும். தாம் மேற்கொண்ட செயற்பாடு ஆபத்தானது, என அறிந்திருந்தால் அதை அவர்கள் நிச்சயமாக தவிர்த்திருந்திருப்பார்கள். எனவே இவ்வாறான நிகழ்வுகளிலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினைகள் முக்கியமானவையாகும். உயிர் இழப்புக்குள்ளான இவ் வான் மக்களுக்களுக்காக நாம் தொடர்ந்தும் செபிக்கும் வேளையில் இவ்வாறன ஆபத்தான நிகழ்வுகளை எதிர்காலத்தில் தவிர்த்துக் கொள்வோம்.

இவ்வாறான ஊர்வலங்கள் ஒழுங்கமைக்கும் அருட்பணியாளரின் பொறுப்பு மிகப் பாரியதொன்றாகும். எனவே சட்ட விதிகளுக்கு பிரமாணிக்கமுள்ளவர்களாக, மேற்கொள்ளும் ஊர்வலங்கள் பாதுகாப்பும், பயனுள்ளதாகவும் அமைய அனைத்து முயற்சிகளையும் எடுக்குமாறு முக்கியமான இவ்வேண்டுகோளை அவர்களுக்கு விடுக்கின்றேன். இதில் குறிப்பிட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு, செயற்பட தூண்டும், வலுவந்தப்படுத்துப் பொதுநிலையினரோடு மிகக் கண்டிப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்

**இச்சட்ட விதிமுறைகள் இன்று 18.06.2017 முதல் அதிகாரப் பூர்வமாக செயற்படுத்தப் படவேண்டியதாகும்.**

# யாழ் புனித பற்றிக் கல்லூரி பரிசளிப்பு விழா நிகழ்வுகள் சில...










# ஏழைகளை அரவணைப்பதை வலியுறுத்தும் உலக வறியோர் நாள்

**கார்த்திகை 19ஆம் திகதி சிறப்பிக்கப்படவுள்ளது**

“வார்த்தைகளால் அல்ல, மாறாக வாழ்வு நடவடிக்கைகளால் அன்புகூர்வோம்“ என்ற கருத்தை மையப்பொருளாக வைத்து, முதல் உலக வறியோர் நாளுக்குரிய செய்தியை வெளியிட்டுள்ளார், திருத்தந்தை பிரான்சிஸ். இறை இரக்கத்தின் ஆண்டை நிறைவுசெய்த வேளையில், உலக வறியோர் நாள் ஒவ்வோர் ஆண்டும் சிறப்பிக்கப்படும் என அறிவித்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாண்டு கார்த்திகை மாதம் 19ம் திகதி சிறப்பிக்கப்படவுள்ள முதல் உலக நாளுக்கென வெளியிட்டுள்ள செய்தியில், இயேசு நம்மை அன்புகூர்வதுபோல பிறரையும் அன்புகூர முயலும் நாம், ஏழைகளிடம் அன்புகூர்வதற்கு, இயேசுவையே முன்மாதிரியாக கொள்ளவேண்டும் எனக் கூறியுள்ளார். ஏழையின் கூக்குரலுக்கு இறைவன் செவியுற்றார், என்ற 34ம் திருப்பாடலின் வரிகளை, தன் செய்தியில் எடுத்தியம்பியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழைகளிடையே பணியாற்றுவதற்கு ஏழுபேர் கொண்ட குழுவை, தூய பேதுரு உருவாக்கியது குறித்தும் திருத்தூதர் பணி நூலிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார். இயேசுவின் சீடனாயிருப்பது என்பது, ஏழைகளோடு சகோதரத்துவத்தையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்துவதாகும் என்பதை, தொடக்ககால கிறிஸ்தவ சமூகம் அறிந்தே இருந்தது என்பதையும் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அசிசியின் புனித பிரான்சிஸ் மற்றும் பல்வேறு புனிதர்கள் கடந்த நூற்றாண்டுகளில் விட்டுச் சென்றுள்ள எடுத்துக்காட்டுகளைப் பின்பற்றுமாறும் வேண்டுகோள் விடுத்துள்ளார். தொழுநோயாளர்களைக் கட்டியணைத்து, அவர்களுக்குப் பொருளுதவிகளை வழங்குவதில் மட்டும் புனித பிரான்சிஸ் நிறைவு காணவில்லை, மாறாக, அவர்களோடு சென்று வாழ்ந்த அந்தச் செயல், அவரின் மனமாற்றத்திற்கு முக்கிய காரணியாக இருந்தது எனவும் எடுத்துரைத்தார் திருத்தந்தை. பிறரன்புப் பணிகள் மற்றும் பகிர்தலை நாம் மேற்கொள்ளும்போது, அதைப் பெறுபவரிலும், அவர் முகத்திலும் இறைவனைக் காணமுடியும் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய நவீன உலகில், ஏழ்மையை அதன் முழு வடிவத்திலேயே காண்பது சிரமம் எனினும், துன்ப துயரங்கள், சமூகத்தின் விளிம்புக்குத் தள்ளப்படும் நிலை, அடக்குமுறை, வன்முறை, துன்புறுத்தலும் சிறையிலடைத்தலும், போர், கருத்துச் சுதந்திரமின்மை, மாண்பு மதிக்கப்படாமை, அறியாமை, கல்வியறிவின்மை, மருத்துவ வசதியின்மை, வேலையின்மை, ஆள்கடத்தல், அடிமைத்தனம், நாடுகடத்தல், மிகக் கொடிய வறுமை நிலை, கட்டாயக் குடிபெயர்வு போன்றவைகளில் ஏழ்மையின் பாதிப்புக்களைக் காணமுடியும் என உரைத்துள்ளார். ஏழைகளுக்கு உதவும் கைகள் பேறுபெற்றவை எனவும் தன் செய்தியில் குறிப்பிட்டுள்ள திருத்தந்தை, பிறரை ஒடுக்கி வைத்தல் மற்றும், பொருள்களை வீணாக்குதல் என்ற கலாச்சாரத்திற்கு எதிராக விசுவாசிகள் செயல்பட்டு, சந்திப்பு கலாச்சாரத்தை ஆரத்தழுவ வேண்டும் என்பதை வலியுறுத்தவே, இந்த ஏழைகளுக்கான உலக நாள் எனவும், தன் செய்தியில் இறுதியாகக் கூறியுள்ளார்.

**ஆதாரம் : வத்திக்கான் வானொலி**

# வெள்ளவத்தை மயூரா பிரதேச புனித அந்தோனியார் திருவிழா





வெள்ளவத்தை மயூரா பிரதேசத்தில் அமைந்துள்ள புனித அந்தோனியார் ஆலயத் திருவிழா 25.06.2017 அன்று வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் காலை 8.30 மணித் சிறப்புத் திருப்பலியை அருட்பணி. ஹர்சன பிரசாத் அடிகளார், அருட்பணி. மனோகுமரன் அடிகளார், அருட்பணி, யூட் பிரசாத் அடிகளார், அருட்பணி. புத்திக்கே அடிகளார், அருட்பணி. பிறிட்டோ அடிகளார் ஆகியோர் இணைந்து சிறப்பித்தனர். திருப்பலியின் ஆரம்பத்தில் பல்சமய தலைவர்கள் வருகைதந்திருந்தனர். திருப்பலி நிகழ்வுகள் சிலவற்றை படத்தில் காணலாம்.

**தகவல் : மைக்கல் பெர்னாண்டோ புள்ளே**

# கொழும்பு – 3, கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் திருவிழா





கொள்ளுப்பிட்டி புனித அந்தோனியார் ஆலய திருவிழா ஆனி மாதம் 25ந் திகதி ஞாயிறன்று சிறப்பாக கொண்டாடப்பட்டது. திருவிழாவை முன்னிட்டு மாலை ஆராதனையை அருட்பணி. லூயிஸ் அடிகளாரும், திருவிழா சிறப்புத் திருப்பலியை அருட்பணி. குயின்டஸ் பர்னாந்து அடிகளாரும் சிறப்பித்தனர்.

**தகவலும் படமும் திரு.டெரிக்**

# இராஜகிரிய, திருஇருதய நாதர் ஆலய திருவிழா







கடந்த 24.06.2017 அன்று திரு இருதயநாதர் ஆலய மாலை ஆராதனை வெகு விமரிசையாக நடைபெற்றது. இவ் ஆராதனையை அருட்பணி. தயா வெலிகட ஆராய்ச்சி தலைமையேற்று வழிநடத்தினார். அருட்பணி. லின்டன் அடிகளார் தமிழில் மறையுரை ஆற்றினார். ஆராதனையைத் தொடர்ந்து சுற்றுப்பிரகாரம் நடைபெற்றது. பின்பு திருஇருதய நாதரின் ஆசீர்வாதம் இடம்பெற்றது. எமது பங்குத் தந்தை அருட்பணி. அன்சலிம் பொன்சேக்கா, உதவிப்பங்குத் தந்தை மைக்கல் சந்தானம் அடிகளார் ஆகியோர் இவ் ஆராதனையை சிறப்பித்தனர்.

**தகவல் : மேரி அருள்செல்வம்**







ஓர் ஆற்றங்கரையின் மரத்தடியில் ஓர் எலியும் தவளையும் சந்தித்து நண்பர்களாயின. அது முதல் அடிக்கடி சந்தித்துப் பழகி வந்தன. எலியின் வளைக்கு தவளை வந்து போய்க் கொண்டிருந்தது. வளைக்கு வரும் தவளைக்குப் பண்டங்களைக் கொடுத்து எலி உபசரித்தது.

ஒரு நாள் தவளை தனது இருப்பிடத்துக்கு எலி ஒரு முறையாவது வரவேண்டும் என்று மிகவும் வற்புறுத்திக் கேட்டுக் கொண்டது. தவளையிள் இருப்பிடம் வாய்க்காலைத் தாண்டி இருந்ததால் எலி அங்கு சென்று வர இயலாது என்று வர மறுத்தது.

ஆனால், தவளையோ, “தண்ணீரைக் கடக்க முடியாதே என்று தாங்கள் தயங்க வேண்டாம். என் முதுகில் ஏற்றிக் கொண்டு போய்விட்டு மீண்டும் பத்திரமாகக் கொண்டு வந்த சேர்க்கிறேன்” என்று தவளை உறுதி கூறியது. மிகவும் கட்டாயப்படுத்தியதால் எலியும் வரச் சம்மதித்தது.


தவளை ஒரு கயிற்றைத் தேடி எடுத்துக் கொண்டு வந்தது. தனது காலில் ஒரு நுனியையும் மற்றொரு நுனியை எலியின் காலிலும் கட்டியது. தவளையின் முதுகில் எலி ஏறி அமர்ந்து கொண்டது. இரண்டும் புறப்பட்டுச் சென்றன. பாதிக் கால்வாயை இரண்டும் கடந்து கொண்டிருக்கும்போது தவளைக்கு ஒரு வஞ்சக எண்ணம் ஏற்பட்டது. எலி தனது வளையில் ஏராளமான விதவிதமான உணவுப் பண்டங்களைச் சேமித்து வைத்திருப்பதை எண்ணிப் பார்த்தது.

அப்பண்டங்கள் தனக்கு மட்டும் கிடைத்தால் எவ்வளவு சுவையாக உண்ணலாம் என்ற ஆசை தவளைக்கு வந்துவிட்டது. அந்தத் தீய எண்ணம் தவளைக்கு ஏற்பட்ட உடனேயே தவளை தண்ணீருக்குள் கீழ்நோக்கிச் சென்றது. அதனைக் கண்ட எலி மிகவும் பதறிப்போய், “நண்பரே! என்ன விபரீதம் இது! தண்ணீருக்குள் உம்மால் செல்ல முடியும். என் உயிருக்கு ஆபத்து ஆயிற்றே! இது உமக்குத் தெரியாதா?” என்று கேட்டது.

அதற்குத் தவளை, “தெரிந்துதான் அதைச் செய்கின்றேன். உம்மைத் தண்ணீருக்குள் அமிழ்த்திக் கொன்றால்தானே நீர் விதவிதமாகச் சேர்த்து வைத்திருக்கும் பண்டங்கள் எனக்குக் கிடைக்கும்” என்றது. “நட்புக்குத் துரோகம் செய்ய நினைக்கும் நய வஞ்சகனாக நீ இருப்பாய் என்று நான் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. நான் எவ்வளவு சிரமப்பட்டு அந்தப் பொருட்களை எல்லாம் சேர்த்து வைத்தேன் தெரியுமா? அதனை விரும்பிக் கேட்டிருந்தால் உனக்கே தந்திருப்பேனே. அதை விட்டுவிட்டு இப்படியொரு கொடுஞ்செயலைச் செய்ய உனக்கு எப்படி மனம் வந்தது?” என்று எலி கேட்டது.

“நீ என்ன சொன்னாலும் உன்னைக் கொல்லாமல் விடப்போவதில்லை” என்று கூறிவிட்டு மேலும் தண்ணீரில் தவளை மூழ்கியது. மூச்சுத் திணறிய எலி சிறிது நேரத்தில் செத்து மிதந்தது. அப்போது வானில் பறந்து வந்த பருந்து ஒன்று பாய்ந்து வந்து எலியைக் கவ்வியது. அப்போது எலியுடன் இணைத்துக் கட்டப்பட்டிருந்த தவளையும் அதனுடன் சேர்ந்து மேலே சென்றது. ஓர் இடத்திற்குச் சென்று இறங்கிய பருந்து எலியுடன் தவளையையும் கொன்று தின்றது.

## மாணவச் செல்வங்களே! லூக்கா 10:30–37 பகுதியை வாசித்து பின்வரும் கதையை கண்டுபிடியுங்கள்



தொடரும்

| வாழ்க்கை நிலைகள் | திருவருட்சாதனங்கள் |
|---|---|
| 1. பிறப்பு | ................................... |
| 2. சக்தி, ஆற்றல் | ................................... |
| 3. ஆன்ம உணவு | ................................... |
| 4. மன்னிப்பு | ................................... |
| 5. குணமாக்குதல் | ................................... |
| 6. குடும்பம் | ................................... |
| 7. பணிவாழ்வு | ................................... |

# புத்தகம்

புத்தகம் வாழ்வில் கிடைத்த புதையல்
புத்தகம் வாழ்வில் சிறந்த நண்பன்
புத்தகம் அறிவின் ஆரம்ப ஒளி
புத்தகம் அறிவில் ஆற்றலைப் பெருக்கும் வழி

புத்தகம் படிப்பதனால் புதிய கருத்துக்களை
புத்தகம் படிப்பதனால் புதிய அர்த்தங்களை
புத்தகம் படிப்பதனால் புதிய சிந்தனைகளை
புத்தகம் படிப்பதனால் புதிய தன்னம்பிக்கை உருவாக்கும்.

புத்தகம் நல்ல மனிதனை உருவாக்கும்
புத்தகம் வரலாற்றுச் சாதனையாளர்களை
உருவாக்கும்

புத்தகம் சிறந்த வழிகாட்டியை உருவாக்கும்
புத்தகம் மனிதனை மாமனிதனாய் உருவாக்கும்

வாசிக்கும் பழக்கம் புது உலகம் காட்டும்
வாசிக்கும் பழக்கம் புது அனுபவங்களைக் கொடுக்கும்
வாசிக்கும் பழக்கம் உங்களை உயர்ந்தவனாக்கும்
வாசிக்கும் பழக்கம் அறிவைத் தீட்டி ஆயுதமாக்கும்.

நல்ல புத்தகங்களை பரிசாய்க் கொடுங்கள்
நல்ல புத்தகங்களை வீட்டில் வையுங்கள்
நல்ல புத்தகங்களை பரிசளிக்கச் சொல்லுங்கள்
நல்ல புத்தகங்களைத் தினமும் வாசியுங்கள்

வாசிப்பு உங்கள் சுவாசமாகட்டும்
வாசிப்பு உங்கள் வாழ்வை உயர்த்தட்டும்
வாசிப்பு உங்கள் வாழ்வை வளமாக்கட்டும்
வாசிப்பு உங்கள் நண்பர் ஆகட்டும்.

**எப்போதும் நல்ல**
**புத்தகங்களுக்கிடையே**
**எனது காலத்தை**
**கழிக்க விரும்பினேன்**
**– ஜவஹர்லால் நேரு –**









# என்வகை மார்க்கம்

"பென்சில்" என்ற எழுதுகோலைப் பற்றிய சுவாரசியமான ஓர் உவமை உண்டு. அதனை உருவாக்கியவர் அதற்குக் கீழ்க்காணும் நான்கு கட்டளைகளைக் கவனத்தில் கொள்ளப் பணித்தார்.

**ஒன்று :** உனது நன்மைத்தனம் அல்லது உன் ஆற்றல் உனக்குள்ளேதான் இருக்கிறது.

**இரண்டு:** உன் வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் நீ கூர்மைப்படுத்தப்பட வேண்டும்.

**மூன்று :** நீ இன்னொருவர் கரங்களில் இருக்கும் போதுதான் பயன்படுவாய், பலம் பெறுவாய்.

**நான்கு :** நீ தவறாது உன் தடயத்தைப் பதிக்க வேண்டும்.

இளைஞனே! நீ ஒரு பென்சில். இது உனது வளர்ச்சிப் பருவம். கூர்மைப்படுத்தப்பட வேண்டும். ஒருவரின் அனுபவங்களே வேரைச் சிறப்பாகப் பக்குவப்படுத்தவோ பண்படுத்தவோ முடியும் என்பது உண்மைதான். இருப்பினும் எழுத்துக்களுக்கும் அப்பணியில் பங்குண்டு என்பது என் அனுபவம். டாக்டர் ருத்ரன் அவர்களின் எழுத்துக்கள் என்னைப் பாதித்ததன் விளைவே இக்கட்டுரை.

பகலிரவைக் கூட வேறுபடுத்திப் பார்க்க விருப்பமில்லாத உன் இளமைப் பருவத்தில், வேறுபடுத்திப் பார்க்க வேண்டிய ஒருசில கட்டாயங்களை இங்கே உனக்குச் சொல்ல விரும்புகிறேன்.

## தேவைகள்... ஆசைகள்...

தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் வித்தியாசம் தெரியாததனால் தான் பல இளைஞர்கள் வாழ்வில் தடுமாறுகிறார்கள். தடம் பிறழ்கிறார்கள். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் தேவை. அறுசுவை உணவு, ஜொலிக்கும் பட்டாடை, பங்களாபோல் வீடு என்பது ஆசை. வெயிலுக்கு நிழல் - தேவை, வெயிலுக்கு ஏ.சி அறை - ஆசை, தேவையும், ஆசையும் இணையும்போது மகிழ்ச்சி அதிகரிக்கின்றது. ஒருவருக்கு எது தேவை எது அவசியமில்லாத ஆசை என்பதனை அவரவர் தத்தம் தகுதிக்கேற்றார்போல் முடிவுசெய்ய வேண்டும்.

இதுக்கும் இருபத்துநான்கு மணி நேரத்தில் அல்லது ஒரு வாரத்தில், மாதத்தில், ஆண்டில் உன் படிப்பு, விளையாட்டு, பிற பொழுதுபோக்குகள் இவைகளுக்கும், நண்பர்களுக்கும் நீ செலவிடும் நேரத்தைக்கூட, "தேவை - ஆசை" அளவுகோலில் சரிசெய்தால் வாழ்வும் செம்மையாகும். மனத்திற்கும் நிம்மதி கிடைக்கும்.

## உண்மை... நம்பிக்கை...

"இவன் ஒரு சோம்பேறி, இவனா இந்த வேலையைச் செய்யப் போகின்றான்?" என்று பிறர் உன்னைப் பழிப்பதையோ, "ஆங்கிலமா? கணிதமா? எனக்கு வரவே வராது" என்று நீயே உன்னை எடை போடுவதையோ கொஞ்சம் எண்ணிப்பார். எது உண்மை? எது நம்பிக்கை? எனக்கு புத்தி இருக்கின்றது என்பது உண்மை. அது கூர்மையாகவோ மழுங்கியோ உள்ளது என்பது உண்மையா?

உண்மைக்கு ஆதாரங்கள் அவசியமில்லை. நம்பிக்கைக்கு நான்கு பேர் உறுதிப்படுத்த வேண்டியுள்ளது. புத்திக்கூர்மையைப் பலமுறை பாராட்டுவதிலிருந்து தான் அது உண்மை என நம்புகின்றான். பிறர் கூறுவதைக் கொண்டு நம்மையே நாம் உயர்வாகவோ தாழ்வாகவோ மதிப்பீடு செய்வது ஒரு நம்பிக்கை. இது ஆபத்தானது. மற்றவர் உன்னை ஒரு கோணத்தில்தான் பார்க்கின்றனர். அவர்களுக்குத் தெரியாத, ஆனால் உனக்கு மட்டுமே தெரிந்த, பல கோணங்களும் கோணல்களும் உன்னிடம் உண்டு என்பதை நீ ஒருவன் மட்டுமே அறிவாய். அதுதான் உண்மை.

## அவசரம்... வேகம்...

ஆற்றில் ஆழமில்லா இடத்தில் தண்ணீர் சலசலத்து ஓடுவதனைக் கண்டிருக்கிறாயா? அதுதான் அவசரத்தனம். ஆழமான இடத்திலோ இயக்கம் இருப்பதுபோல் தெரியாது, ஆனால் அங்கே தண்ணீர் நிதானமாகவும் அதிவேகமாகவும் ஓடிக்கொண்டிருக்கும். அதுவே வேகம் உள்ளவனுக்குப் பொருந்தும்.

அவசரம் என்பது எதனையும் திட்டமிடாமல் கடைசி நேரத்தில் மனதில் பயத்தோடும், குழப்பத்தோடும் செய்து முடிப்பது. இச்செயலில் முழு திருப்தி இருக்காது. ஆனால், ஒரு செயலை நன்கு திட்டமிட்டு எந்தவித ஆரவாரமுமின்றி நிதானமாகச் செய்வர்கள் அச்செயலை வேகமாகவும் செய்து முடிப்பர். அவசரம் அச்சத்தின் அடையாளம். வேகம் அமைதியின் வெளிப்பாடு. இளமை இயல்பாகவே வேகமுடையதுதான். ஆனால் அது பல வேளைகளில் "அவசரமாகச் செயல்படுகிறது. தேவைக்கும் ஆசைக்கும் வித்தியாசம் தெரியாமல் போவது இந்த அவசரத்தால்தான்.

## கனவு... இலட்சியம்...

இளமைத் துடிப்பும் துணிவும் பல இளைஞர்களைக் கனவுலகில் மிதக்க வைக்கின்றன. நடக்க முடியாத, நடக்கக் கூடாதவற்றிலும் கூடத் தேவையற்ற ஆசைகளை வளர்த்து அவற்றை அடையமுடியாமல் போகும்போது பல இளைஞர்கள் விரக்தியின் விளிம்பையும் தாண்டி விடுகிறார்கள்.

கனவு என்பது கடிவாளம் அற்றது. கண்ணுக்குத் தெரியும் தொடுவானையும் தாண்டக்கூடியது. ஆனால், இலட்சியம் என்பது நியாயமாக அடையக்கூடிய தூரமாகும். நமது முன்னோர்கள் வாழ்ந்தது போல நானும்... கனவு காணவேண்டும். அது தேவைதான். அது மிகையாகும்போதுதான் வாழ்வின் சுவை போய்ச் சுமை வருகிறது.

நீ மனதுக்குள் வைத்துப் பூஜிக்கும் உன் ஹீரோ அந்நிலையை அடைய எவ்வளவு முயற்சிகள் எடுத்திருப்பார்! எவ்வளவு வேதனைகளைத் தாங்கியிருப்பார். எவ்வளவு தடைகளைத் தாண்டியிருப்பார். அவர்கள் சென்ற திசையும், தொட்ட சிகரமும் நாம் இன்னொரு பாதையில் சென்று புதிய புதிய சிகரங்களைத் தொட உதவும் வரைபடங்களே.

## வளைந்து கொடுப்பது... விட்டுக்கொடுப்பது...

தனக்கென ஓர் இலட்சியம், தனிப்பாதை, பயணம் என தனித்தன்மையோடு செயல்படுவதே சிறந்த வாழ்வு. ஆனால் நாம் சமுதாயத்தில் பிறரோடு ஒட்டி உராய்ந்து ஒதுங்கி வாழ்கிறோமே. மனித உறவில் உரசலும் விரிசலும் ஏற்படும்போது வளைந்து கொடுத்தோ விட்டுக்கொடுத்தோ வாழ்கிறோம்.

வளைந்து கொடுப்பது என்பது நமது இயலாமையை நாமே ஒப்புக்கொள்வதாகும். இது அச்சத்தின் வெளிப்பாடு. இன்னும் பேசினால் அல்லது செயற்பட்டால் இருப்பதும் போய்விடுமோ என்ற அச்சத்தின் வெளிப்பாடு வளைந்து கொடுப்பது. இதற்குமேல் என்னால் எதுவும் செய்ய முடியாது என மலைத்தப்போய் வளைந்து கொடுப்பது பலவீனம்.

விட்டுக்கொடுப்பது ஒருவரின் நிறைவிலிருந்து வருவது. பலசாலியே விட்டுக்கொடுக்க முடியும். பலவீனமோ வளைந்து கொடுக்கத்தான் முடியும். விட்டுக்கொடுப்பதால் மனதில் பெருமிதமும் மகிழ்ச்சியும் உண்டாகும். ஆனால் வளைந்துகொடுப்பதால் மனதில் வெறுமையும் விரக்தியுமே தோன்றும், விட்டுக்கொடுப்பது விலகுவதற்காக அன்று. மீண்டும் எழுவதற்காகவே.

## கேட்டல்... கவனித்தல்...

நாம் பேசும்போது முழுதாய் பேசுகிறோம். ஆனால் கேட்கும் போது? சந்தடி மிகுந்த சாலையில் உள்ள கடையில் டி.வி அதில் உலகக் கோப்பை கிரிக்கெட் ஒளிபரப்பாகிறது. பல இளைஞர்கள் நெடுநேரம் சாலையில் நின்றே விளையாட்டைக் கவனிப்பதைப் பார்த்திருக்கின்றோம். நீயும் ஒரு வேளை அவர்களில் ஒருவனாகவே இருக்கலாம்.

அப்போது சாலையில் சைக்கிளா, காரா, லாரியா, பஸ்ஸா என்றுகூட நீ பார்க்கமாட்டாய். அவற்றின் பேரிரைச்சலாலும் என்னைத் தொந்தரவு செய்யாது. யாரேனும் என்னை உரசிச் சென்றாலும் அதை நீ அப்போது பொருட்படுத்தமாட்டாய். சாலையின் இரைச்சல் என் செவிகளை எட்டினாலும் அதனையும் மீறி உன் முழுக்கவனமும் அந்தக் கிரிக்கெட் "கமெண்ட்ரி"யில்தானே இருக்கிறது!

இதுதான் கேட்டலுக்கும் கவனித்தலுக்கும் உள்ள வேறுபாடு. கவனித்தல் உன் படிப்பிலும் விளையாட்டிலும் மட்டுமன்று, பிறரோடு பழகுவதிலும் வேண்டும். அப்போதுதான் உயரலாம்.

## வெற்றி... தோல்வி...

வெற்றி தோல்வி எல்லோர் வாழ்விலும் உண்டு. அமைதியாக அமர்ந்து எண்ணிப் பார்த்தால் வெற்றிகளைவிட, தோல்விகளே முண்டியடித்துக்கொண்டு முழுமனதையும் ஆக்கிரமிப்பு செய்யும். இன்பத்தைவிடத் துன்பமே ஆழமானது. அழுத்தமானது, நினைவில் என்றென்றும் நிலைத்து நிற்கக் கூடியது என்பது உண்மைதான். அதற்காக வடுவைச் சுரண்டினால் வலிதானே உண்டாகும்.

வாழ்வில் வெற்றி என்பது பந்தயத்தில் இறுதியில் கிடைக்கும் கோப்பை அன்று, வாழ்வின் ஒவ்வொரு மணி நேரத்தையும், நாளையும் சரியான விதத்தில், சரியான விகிதத்தில் அணுகி, அடுத்த கட்டத்திற்குப் போவதுதான் வெற்றி. சின்னச் சின்ன வெற்றிகளை அனுபவிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும்.

அடைந்த தோல்விகள், மீண்டும் நாம் அவற்றை அடையாமல் இருக்கப் பாடமாக அமையவேண்டும். பெற்ற வெற்றிகளோ இன்னும் பல வெற்றிகளை அடைய உற்சாகத்தையும் உரத்தையும், உறுதியையும் தரவேண்டும்.

## எச்சரிக்கை... சந்தேகம்...

எதிர்பார்ப்பே இல்லாமல் எவரும் வாழ்தல் உண்டா. வாழ்வில் எதிர்பார்ப்புகள் உள்ள வரை ஏமாற்றங்களுக்கும் வாய்ப்புகள் உண்டு. ஏமாற்றங்கள் ஏற்படும்போது உடன் தொற்றிக்கொள்ளும் நோய்தான் சந்தேகம். இச்சந்தேகம் நம்மையும் வாழவிடாது, பிறரையும் யதார்த்தமாய்ப் பாவிக்க விடாது. உறவில் விரிசல், ஒதுங்கி வாழ்தல், வீண்பழி சுமத்தல், வீழ்ந்துபோதல் என்று தொடரும்.

ஏமாற்றங்கள் ஏற்பட்டுவிட்டால் அவற்றை அனுபவமாக எடுத்துக் கொண்டு, அடுத்த கட்டத்தில் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளும் பக்குவம் பெறவேண்டும். எச்சரிக்கை உணர்வு நமது அனுபவங்களிலிருந்து மட்டுமன்று, பிறர் அனுபவங்களிலிருந்தும் கற்கவேண்டிய பாடம். "அவனால் முடியவில்லையா? அது என்னால் முடியும்" என்று செயல்படுவதைவிட, "அவனால் ஏன் முடியவில்லை? என்னால் எப்படியெல்லாம் முடியும்?" என்று யோசிப்பது தான் எச்சரிக்கை உணர்வு.

சந்தேகம் பார்வையைக் குறுக்கும், எச்சரிக்கை பார்வையை விரிவடையச் செய்யும்.

## வேண்டும்... வேண்டும்...

இளைஞனே, இப்போது உனக்கு

- தேவைகளை ஆசைகளிலிருந்து பிரித்து அறியும் தெளிவு வேண்டும்.
- உன் நம்பிக்கையை விட உண்மையில் தான் உயர்வு உண்டு என்ற உறுதி வேண்டும்.
- இளமையின் இயல்பான வேகத்தை அவசரம் தடுமாறச் செய்திடா நிதானம் வேண்டும்.
- விரிந்த வானில் பறக்கக் கனவு காண்பதைவிடக் கண்ணில் தெரியும் பாதையைக் கடக்க உரம் வேண்டும்.
- வளைந்து கொடுத்து பயந்து வாழ்வதைவிட, விட்டுக்கொடுத்துத் துணிந்து வாழத் திராணி வேண்டும்.
- கேட்டலும் கவனித்தலும் முழுமை பெறவேண்டும்.
- தோல்வி தரும் பாடமும், வெற்றி தரும் பலமும் தொடர்ந்து செயல்படத் தூண்ட வேண்டும்.
- சந்தேகச் சாக்கடையில் சுகமாய்ப் புரண்டு கிடப்பதைவிட, எச்சரிக்கை ஏணியில் கவனமாய் ஏறிச் செல்லும் துணிவு வேண்டும்.

மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.



# இயேசுவே வானிலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு

இயேசுவே விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த வாழ்வு தரும் உணவு என, இயேசுவின் திருஉடல், திருஇரத்தம் பெருவிழாவாகிய 18.06.2017 ஞாயிறன்று, நண்பகல் மூவேளை செப உரையில் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ். ஞாயிறன்று, வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களிடம் இவ்வாறு கூறியத் திருத்தந்தை, தந்தையாம் இறைவன், இயேசுவை, நித்திய வாழ்வின் உணவாக, இவ்வுலகுக்கு அனுப்பினார் எனவும், இதனாலே, இயேசு தம் உடலை நமக்குத் தந்து, தம் குருதியைச் சிந்தி, சிலுவையில் தம்மையே தியாகம் செய்தார் எனவும் கூறினார். திருப்பயணிகளாகிய நம்மை விசுவாசத்திலும், நம்பிக்கையிலும், பிறரன்பிலும் பேணி வளர்ப்பதற்காக, இயேசு, எம்மாவு சீடர்களிடம் ஆற்றியது போன்று, திருநற்கருணையில், நம்முடன் இருக்கின்றார் என்றும் திருத்தந்தை கூறினார்.

சோதனைகளில் நம்மைத் தேற்றவும், நீதி மற்றும் அமைதிக்கு நம்மை அர்ப்பணித்து செயலாற்றுகையில், நமக்கு ஆதரவாகவும், இயேசு திருநற்கருணையில், நம்முடன் இருக்கின்றார் என்றும், மூவேளை செப உரையில் உரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

# திருநற்கருணையில் கடவுளின் அன்பை நினைவுகூர்கின்றோம்

உரோம் புனித ஜான் இலாத்தரன் பசிலிக்கா வளாகத்தில் 18.06.2017 ஞாயிறு இரவு ஏழு மணிக்கு, இயேசுவின் திருஉடல், திருஇரத்தம் பெருவிழாத் திருப்பலியைத் தொடங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருநற்கருணையில் நாம் கடவுளின் அன்பை நினைவுகூர்கின்றோம் என, மறையுரை வழங்கினார்.

கிறிஸ்துவின் திருஉடல், திருஇரத்தப் பெரு-விழாவை நாம் கொண்டாடும்போது, கிறிஸ்து நமக்குச் செய்த எல்லாவற்றையும், குறிப்பாக, அவர் நம்மீது வைத்திருக்கும் மாபெரும் அன்பை நினைவுபடுத்த, திருநற்கருணை நமக்கு உதவுகின்றது என்று கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

ஆண்டவர், திருநற்கருணையில், அன்புக்காக நொறுக்கப்பட்டவராக, சிதறிய நம் வாழ்வின் மத்தியில், நம்மைச் சந்திக்க வருகிறார் என்பதை இப்பெருவிழா நமக்கு நினைவுபடுத்துகின்றது என்றும் மறையுரையில் கூறியத் திருத்தந்தை, இப்பெருவிழா நாளின் இறைவார்த்தை, நினைவுகூருங்கள் என்பதை, நம் ஒவ்வொருவரிடமும் கூறுகின்றது என்றார்.

செடிக்குத் தண்ணீர் எவ்வளவு முக்கியமோ, அதேபோன்று, விசுவாசத்திற்கு நினைவுகூருவது, இன்றியமையாதது எனவும், தண்ணீரில்லாத செடி, உயிரோடு இருந்து கனிதர முடியாது, அதேபோல்தான் விசுவாசமும் என்றுரைத்த திருத்தந்தை, நம் ஆண்டவர் நமக்கு ஆற்றியுள்ள அனைத்தையும் நினைவுகூர்வதற்கு ஆழமான விசுவாசம் தேவை என்றும் கூறினார்.

ஓய்வின்றி ஆற்றப்படும் செயல்கள் மற்றும், தொழிலால், நம் நினைவுகள் பலவீனமடைகின்றன எனவும், இத்தகைய வாழ்விலும், நிகழ்வுகளிலும்,



நினைவுகளைக் கொண்டிருப்பது கடினம் எனவும், இந்த நிலை, மேலெழுந்தவாரியாக வாழ்வதற்கு நம்மை இட்டுச் செல்லும் எனவும் எச்சரித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

திருநற்கருணையை இதயங்களில் நாம் வாங்குகையில், கிறிஸ்து நம்மை அன்புகூர்கிறார் என்ற உறுதியில், பெரு மகிழ்வடைவதற்கு ஒரு வாய்ப்பாக உள்ளது எனவும், திருநற்கருணை, கடவுளின் அன்பை நமக்கு நினைவுபடுத்துகின்றது எனவும், மறையுரை-யாற்றினார், திருத்தந்தை பிரான்சிஸ்.






# போர்த்துக்கல் காட்டுத் தீயில் பலியானவர்க்கு திருத்தந்தை செபம்

போர்த்துக்கல் நாட்டின் Pedrógão Grande பகுதியில் பரவிவரும் காட்டுத் தீயில் பலியானவர்கள் மற்றும், காயமடைந்தவர்களை, 18.07.2017 ஞாயிறு மூவேளை செப உரைக்குப்பின், நினைவுகூர்ந்து, அவர்களுக்காகச் செபித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். Pedrógão Grande பகுதியில் காட்டுத் தீயில் சிக்கி குறைந்தது நான்கு குழந்தைகள் உட்பட, 62 பேர் பலியானதுடன், 59க்கும் அதிகமானோர் காயமடைந்-துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனையடுத்து அந்நாட்டில் மூன்று நாள் தேசிய துக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், 156 இடங்களில் தீயணைப்பு மற்றும், மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்றன

மேலும், ஆனி 20, செவ்வாயன்று, ஐ.நா. வால் கடைப்பிடிக்கப்பட்ட உலக புலம்பெயர்ந்தோர் தினத்தையும், இஞ்ஞாயிறு (18.07.2017) மூவேளை செப உரைக்குப்பின் குறிப்பிட்டுப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், எக்காலத்தையும்விட இக்காலத்தில், புலம்பெயர்ந்தோர்க்கு அதிக ஆதரவு தேவைப்படுகின்றது என்று கூறினார். ஆயுத மோதல்கள், வன்முறை, அடக்குமுறை ஆகியவற்றுக்கு அஞ்சி, நாடுகளைவிட்டு வெளியேறும் மக்களையும், இவ்வாறு அம்மக்கள் மேற்கொள்ளும் ஆபத்தான கடல் மற்றும், தரைவழிப் பாதைகளில் உயிரிழந்தவர்களையும் நினைவுகூர்வோம் என்றும் திருத்தந்தை கூறினார். உரோம் நகரில், சான் எஜிதியோ பிறரன்பு அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் கலந்துகொள்ளும், மத்திய ஆப்ரிக்கக் குடியரசு மற்றும், ஐ.நா. பிரதிநிதிகள் குழுவுக்கு, தனது சிறப்பு வாழ்த்தையும் திருத்தந்தை தெரிவித்தார்,

# புலம்பெயர்ந்தவர் குறித்த புதிய சட்டத்திற்கு வரவேற்பு

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில் அமர்ந்திருந்த பல்லாயிரக்கணக்கான பயணிகளுக்கு, புதன் பொது மறைக்கல்வியுரையை வழங்கிய பின், அவர்களை வாழ்த்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆனி 20, செவ்வாயன்று கடைப்பிடிக்கப்பட்ட உலக புலம்பெயர்ந்தவர் நாளையொட்டி, தான் சந்தித்த புலம்பெயர்ந்தவர்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

உரோம் நகரில், பங்குத்தளங்கள், மற்றும், துறவு நிறுவனங்கள் அடைக்கலம் அளித்துள்ள புலம்பெயர்ந்தவர்கள் பிரதிநிதிகள் குழு ஒன்றைச் சந்தித்தது பற்றிக் குறிப்பிட்டு, புலம்பெயர்ந்தவர் குறித்த புதிய சட்டம் உருவாக்கப்படுவதற்கு எடுக்கப்படும் முயற்சிகளை வரவேற்பதாகத் தெரிவித்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

“நான் அந்நியனாக இருந்தேன் : நல்லது செய்யும் மனித சமுதாயம்” என்ற சுலோகத்துடன், புலம்பெயர்ந்தவர் குறித்த புதிய சட்டம் உருவாக்கப்படுவதற்கு தொடங்கப்பட்டுள்ள நடவடிக்கைக்கு, இத்தாலிய காரித்தாஸ், புலம்பெயர்ந்தவர் நிறுவனம் மற்றும், ஏனைய கத்தோலிக்க நிறுவனங்களும் ஆதரவளித்து வருவதையும், திருத்தந்தை குறிப்பிட்டார்.

இத்தாலிய சமூகத்திலும், பணித்தளத்திலும், புலம்பெயர்ந்தவர்களை நன்றாக ஒருங்கிணைக்கும் நோக்கத்தில், இத்தாலிய அரசியலில், அண்மை வாரங்களாக, இப்புதிய சட்ட வரைவு குறித்து விவாதங்கள் இடம்பெற்று வருகின்றன.

உலகளவில், புலம்பெயர்ந்தவர் எண்ணிக்கை, ஆறு கோடியே 56 இலட்சமாக உயர்ந்திருப்பதாக, ஐ.நா. அறிவித்துள்ளது. ஐ.நா. புலம்பெயர்ந்தவர் அமைப்பு வெளியிட்ட ஆண்டறிக்கையில், 2016ம் ஆண்டின் இறுதியில் இருந்த புலம்பெயர்ந்தவர் எண்ணிக்கை, 2015ம் ஆண்டைவிட மூன்று இலட்சம் அதிகம் எனக் கூறப்பட்டுள்ளது.

# ஊழல், மனித சமுதாயத்தைக் கொல்லும் புற்றுநோய் - திருத்தந்தை


கிழிதல், உடைதல், சிதைதல் என்ற சொற்களின் ஒட்டுமொத்த வடிவமாக அமைந்திருப்பது, “ஊழல்” என்ற சொல் என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஒரு நூலுக்கு எழுதியுள்ள அணிந்துரையில் கூறியுள்ளார்.

ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்களுடன், வித்தோரியோ அல்பெர்த்தி என்பவர் மேற்கொண்ட நேர்காணலின் தொகுப்பு, ஆனி 15, வியாழனன்று, ஒரு நூலாக வெளியிடப்பட்டது.

“துருப்பிடித்தல்” அல்லது, “அரித்தல்” என்ற பொருள்படும் 'Corrosion' என்ற தலைப்பில் வெளியான இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஊழல் என்பது, மனித சமுதாயத்தைக் கொல்லும் புற்றுநோய் என்று குறிப்பிட்டுள்ளார்.

இறைவனோடு, அயலவரோடு, படைப்போடு என்ற மூன்று நிலைகளில் மனிதர்கள் கொள்ளும் உறவுகளைக் குறித்துப் பேசும் திருத்தந்தை, ஊழல் என்ற நோயினால், இம்மூன்று நிலைகளிலும் எதிர்மறையான தாக்கங்கள் உருவாகின்றன என்று கூறியுள்ளார்.

உயிரற்ற உடல் அழுகிப்போவதுபோல், ஊழலில் ஊறிப்போகும் மனிதர்கள், உயிருள்ளபோதே அழுகிய உடலைப்போல மாறுகின்றனர் என்று,




தன் அணிந்துரையில் திருத்தந்தை எச்சரிக்கை விடுத்துள்ளார். சமுதாயத்தின் பல்வேறு நிறுவனங்களில் ஊழல் காணப்படுவதுபோல், திருஅவையிலும் மறைமுகமான வழிகளில் இது நுழைந்துவிடுகிறது என்று கூறும் திருத்தந்தை, “உலகோடு இணைந்துபோகும் ஆன்மீகம்“, திருஅவை சந்திக்கும் ஆபத்தான ஊழல் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# அப்போஸ்தலர் புனித தோமையார்



ஆடி 03

இவரது இன்னொரு பெயர் திதிமுஸ். அதன்பொருள் இரட்டைப்பிள்ளை. இவர் கலிலேயா நாட்டைச் சேர்ந்தவர். மீன் பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தவர். இவர் கல்வி கற்றவர் அல்ல. கள்ளம் கபடு அற்றவர். இயேசுவை அதிகம் நேசித்தார்.

லாசர் வியாதியாயிருக்கிறார் என்று அறிந்த இயேசு யூதேயாவுக்குப் போவோம் வாருங்கள்" என்றார். யூதர்கள் இயேசுவை கல்லால் எறிய நினைத்தார்கள். ஆதலால் அவர் அங்கு போவதை சீடர்கள் விரும்பவில்லை. எனினும் இயேசு அங்கு செல்லத் தீர்மானித்தார். அப்பொழுது தோமையார் "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம் என்று ஏனைய சீடர்களிடம் சொன்னார்.

கடைசி இரவு உணவு முடிந்த பிறகு இயேசு சீடர்களை நோக்கி "நான் போய் உங்களுக்கு இடம் ஏற்பாடு செய்த பின் திரும்பி வந்து உங்களை என்னிடம் அழைத்துக் கொள்வேன். நான் போகும் இடத்திற்கு வழி உங்களுக்குத் தெரியும்" என்றார். அப்போது தோமையார் "ஆண்டவரே நீர் செல்லுமிடமே எங்களுக்கு தெரியாதிருக்க அங்கே போகும் வழி எப்படித் தெரியும்?" என்றார். இயேசுவோ நானே வழியும் உண்மையும் உயிரும் என்று கூறினார்.

இயேசு உயிர்த்த பின் சீடர்களுக்குத் தோன்றினார். இயேசு வந்த போது தோமையார் அவர்களோடு இல்லை. மற்ற சீடர்கள் அவரிடம் "ஆண்டவரை கண்டோம்" என்றதற்கு அவர் "அவருடைய கைகளில் ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து, ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு அவர் விலாவில் என் கையை விட்டாலொழிய விசுவசிக்க மாட்டேன்" என்றார். அடுத்த முறை இயேசு காட்சி கொடுத்த போது தோமையாரை நோக்கி "இங்கே உன் விரலை விடு. இதோ காயங்கள். உன் கையை நீட்டு, என் விலாவில் விடு. விசுவாசம் அற்றவனாயிராதே. விசுவாசம் கொள்" என்றார். அப்போது தோமையார் அவரை நோக்கி "என் ஆண்டவரே என் தேவனே" என்றார். இயேசுவோ "என்னைக் கண்டதால் விசுவாசம் கொண்டாய்" காணாமல் விசுவசிப்பவர்கள் பேறு பெற்றவர்கள்" என்றார்.

பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டபின் தோமையார் பல நாடுகளில் வேதம் போதித்தார். இந்தியாவுக்கு வந்து மைலாப்பூர் என்னும் இடத்தில் வேதத்துக்காக கொல்லப்பட்டார்.

## எங்கே போயிருந்தீர் தோமாவே...?

ஆடி 03

**'வாருங்கள் அவரோடு நாமும்**
**இறப்போமென வார்த்தைகளில்**
**சொன்னவரா நீர்?**
**வாழ்வும் வழியுமான தலைவன்**
**இயேசுவையே வேதனையில்**
**விட்டவரா நீர்? கூறுங்கள்**
**தோமாவே, பாடுகளின் வேளையிலே**
**கோமகனே என்ன ஆனீர்?**

**உயிரைத் துச்சமென மதித்து**
**இயேசுவுடன் பெத்தானியா**
**சென்றீர் அன்று - உம் வீரம்**
**எங்களுக்கு வியப்பதைத்**
**தருவதனால் உங்களுக்குள்**
**கேள்வியொன்று**
**உடன் வந்த சீடரெல்லாம்**
**இயேசுவை கைவிட்டு**
**உயிர் பிழைக்க ஓடிச்சென்று ஒளிய,**
**நீர் மட்டும் ஊரிலேயே இல்லாமல்**
**போனதுதான் ஏனோ அன்று!!!**

**விருந்து முடிந்தவுடன்**
**அவசரப் பணி நிமித்தம்**
**விடை பெற்றுப் போயிருந்தீரோ**
**வீரர்கள் இயேசுவையே கைது**
**செய்த சேதியறியா வெளியூரில்**
**நீர் இருந்தீரோ!**
**பருந்துகள் வசம் சிக்கிய**
**அமைதிப்புறா இயேசு பற்றி அறிந்திரா**
**இடம் சென்றீரோ...?**
**பார்க்காது விசுவாசிக்கும் பண்பை**
**வெளிப்படுத்த பரமனும்மைத்**
**தேர்ந்தெடுத்தாரோ..?**

**இயேசு பிரானறியாது**
**தூசு கூட நகராது**
**எல்லாம் அறிந்த அவரே - அவர் தம்**
**இன்னல் வேளைகளில் நீர் இல்லாது**
**போனதற்கு காரணமாய் இருந்தவரே**
**மாசுமறுவற்ற உம் விசுவாசத்தை**
**வெளிப்படுத்த நிகழ்த்தியது**
**இந்தப் புதிரே**
**மாபரன் இயேசுவுக்காய் மறைசாட்சி**
**ஆனவரே தோமா என்னும்**
**ஞானக் கதிரே**

**இயேசு பிரான் பாடுவேளை**
**இல்லாது போனாலும்,**
**இயேசுவுக்காய் நற்செய்தி**
**எங்கெங்கோ அறிவிக்க**
**இருக்கின்ற நாடு விட்டீர்**
**இயேசு வழி மான்தரித்த**
**பூமியில் இணைந்திடவே**
**இயேசுவுக்காய் உயிரை விட்டீர்**
**எள்ளவும் குறையாத விசுவாச**
**இலக்கணமாய் எங்கள் நெஞ்சில்**
**மதிப்பைப் பெற்றீர்**



# இம்மாதப் புனிதர்கள்



## புனித மரியமதலேன்

**1726 - 1846**



ஏழை மக்களுக்கு நல்ல கல்விப் பயிற்சியளிக்கப்பட வேண்டும். பிரான்ஸ் நாட்டில் பிறந்த இவர் இந்தப் உண்மையை அறிந்திருந்தாள். இவரது கிராமத்தைச் சேர்ந்தவர்கள் மீன் பிடித்து வாழ்ந்து வந்தார்கள். ஏழைப் பெண்களுக்காக இவர் ஒரு பாடசாலையை தொடங்கினாள். இவர் தன் மாணவிகளின் அன்பைப் பெற்றாள். அவர்களுக்கு நல்ல பயிற்சி அளித்து அவர்கள் சிறந்த தாய்மார்களாக இருக்க உதவி செய்தாள். 60 ஆண்டுகளாக நாள்தோறும் ஒரு முறையே உணவு அருந்தி வந்தாள். பிரான்ஸ் நாட்டில் புரட்சி தொடங்கியது. அப்பொழுது இவர் மக்களுக்கு மறை உண்மைகளைக் கற்பித்து வந்தாள். துன்புறுத்தப்பட்ட மக்களுக்கு பாதுகாப்பு இடம் அளித்தாள். அவர்கள் இங்கிலாந்துக்கு போக உதவி செய்தாள். திவ்விய நற்கருணை இவரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாசற்றவர்களது இரத்தம் வடிக்கப்பட்ட அக்காலத்தில் திவ்விய நற்கருணையை இவர் தன்னுடன் எடுத்துச் சென்றாள். சாகும் தறுவாயில் இருந்தவர்களுக்கு அதைக் கொடுத்தாள். சிறுவர்களுக்க கல்வி கற்பிக்க கன்னியர் சபை ஒன்றை ஏற்படுத்தினாள்.

# பயனுள்ள வாழ்க்கை வாழ விழைகின்றாயா?



திருமதி ஷேல்ஸ் என்பவள் தனது வாழ்க்கையில் நிகழ்ந்த ஓர் உண்மை நிகழ்வை கூறுகின்றாள். மகளிர் மன்ற கூட்டத்தில் திருமதி ஷேல்ஸ் கூறியதாவது, *'எனக்குப் பத்து வயது நடக்கும்போது ஒரு நாள் நன்றாக தூங்கிக் கொண்டு இருந்தேன். அப்பொழுது என் தாய் வியாதியாகப் படுத்திருந்தாள். என் தாய் என்னை எழுப்பி அப்பாவுக்கு காலை உணவு வாங்கிக் கொண்டு வா'* என்று என்னிடம் சொன்னார்கள். என் தாய்க்கு உதவிபுரிவது எனக்கு எப்போதும் பிடிக்கும். எனவே, என் தாய் என்னை எழுப்பும்போது விடியற்காலை மணி ஐந்து, *'ஆகட்டும் அம்மா'* என்று நல்ல பிள்ளை போல சொல்லி விட்டு, நான் மீண்டும் போய் பழைய படியே படுத்துக்கொண்டேன். என் நிலைமையை நன்கு புரிந்து கொண்ட என் தாய், கஷ்டத்தோடு அவளே கடைக்குப் போய் என் தந்தைக்கு காலைச் சிற்றுண்டி வாங்கி வந்தார்கள். என் தாய் எனக்குக் கொடுத்த வேலையைச் செய்யாமல் போய்விட்டேன் என்று எண்ணியபோது எனக்குச் சொல்ல முடியாத வேதனையாக இருந்தது. அதற்காக என் தாய்க்குச் சமாதானம் கூறவும் முயன்றேன். இது நடந்த சில நாட்களில் என் தாய் இறந்து பேனார்கள். இந்த நிகழ்ச்சி பசு மரத்து ஆணிபோல என் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்து விட்டது. அன்றே நான் ஓர் உறுதியான திர்மானம் எடுத்துக்கொண்டேன். அத்தீர்மானம் என்னவென்றால், யார் எப்பொழுது என்னிடம் ஓர் உதவி கேட்டாலும் அதைத்தட்டாமல் செய்வேன். காரணம் அதுவே அவர்கள் கேட்கும் கடைசி உதவியாக இருக்கக்கூடும் அந்த தினத்திலிருந்து நான் அனைவருக்கும் என்னால் இயன்ற அளவு உதவிசெய்து கொண்டும் வருகின்றேன். ஒவ்வொரு நாளும் நான் இறைவனைப் பார்த்து *'இறைவா நீர் எவ்வாறு அனைவரையும் பராமதித்துப் பாதுகாத்து வருகின்றீரோ, அவ்வாறே, நானும் என்னால் இயன்ற அளவு என்னை ஒறுத்து பிறருக்குத் துணைபுரியும் வரத்தை எனக்குத் தந்தருளும்'* என்று வேண்டிக் கொண்டு வருகின்றேன் என்றாள்.

நாம் செய்யும் ஒவ்வொரு செயலையும் நமது வாழ்வின் இறுதிச் செயல் என்று எண்ணி செய்வோமானால், அது எப்பொழுமே சிறப்பாக அமையும், அவ்வாறே நமக்குக் கிடைக்கும் இறுதி வாய்ப்பு என்று கருதி அதை இழந்து விடாமல், பயன்படுத்திக் கொள்வோமாகில், நிச்சமாய் நாம் பயனுள்ள வாழ்க்கை வாழ்ந்தவர் ஆவோம். இதுவே பயனுள்ள வாழ்க்-கையின் இரகசியம்.

1412ஆம் ஆண்டு தை திங்கள் ஆறாம் நாள் பிரான்ஸ் நாட்டில் ஜோன் ஆ.்.ப் ஆர்க் என்ற வீரப் பெண்மணி பிறந்தாள். பிரான்ஸ் நாட்டில், "திருச்சபையின் நேச புதல்வி" என்ற சிறப்புப் பெயர் உண்டு. காரணம் பிரான்ஸ் நாடு அநேக புனிதர்களையும், புனிதைகளையும் ஈன்றெடுத்துத் திருச்சபைக்குக் கொடுத்திருக்கின்றது.

பிரான்ஸ் நாட்டை அடிமைப்படுத்த வந்தவர்களோடு போர் புரிய ஜோன் ஆ.்.ப் ஆர்க்கே ஜீசஸ், மேரி என்ற பெயர்களை பொறிக்கப்பட்ட கவசத்தை அணிந்து கொண்டு போர்களத்தில் இறங்கி, வீரப் போர் புரிந்தாள். வெற்றிமேல் வெற்றி பெற்றாள். அந்நாட்டு எட்டப்பன் ஒருவனால், காட்டிக் கொடுக்கப்பட்டாள், உயிரோடு எரிக்கப்டுவதற்கு முன்பு ஒரு குச்சியால் ஒரு சிலுவையைச் செய்து, அதை முத்தி செய்து விட்டு இயேசு என்ற சொல்லைச் சொல்லிக் கொண்டே இன்னுயிரை ஈந்தாள்.

**பயனுள்ள வாழ்க்கை வாழ்வதற்கு ஜோன் ஆஃப் ஆர்க் ஓர் சிறந்த எடுத்துக்காட்டு.**

- **விதைநெல் மடிந்தால் தன் நெற்கதிர் கிடைக்கும்**
- **பூ கருகினால் தான் கனி கிடைக்கும்**
- **உப்பு கரைந்தால் தான் சுவை கிடைக்கும்**
- **மெழுகுதிரி உருகினால் தான் ஒளி கிடைக்கும்**
- **குடம் வெறுமையானால் தான் நிரப்ப முடியும்**



# பாத்திமா காட்சிகளின் சுருக்கம் 03

## காட்சி 03

ஆடி மாதம் 12ஆம் திகதி லூசியா கோவா தா ஈரியாவுக்கு தான் வரவில்லை என்று மற்ற இருவரிடமும் சொன்னாள் லூசியா. இப்படிச் சொல்லுவாள் என்று பிரான்சிசும், ஜசிந்தாவும் எதிர்பார்க்கவில்லை. அவர்களுக்கு அது பெரும் அதிர்ச்சியும் வேதனையாகவும் இருந்தது. அவர்கள் கண்டதும் கேட்டதும் எல்லாம் பசாசின் தந்திரமாக இருக்க முடியும், முடியாது என்பது பற்றி மூவருக்குள்ளும் ஒரு விவாதமே நடைபெற்றது.

அது பசாசென்று உனக்கு எப்படி தெரியும்? அந்தப் பெரிய ஒளியில் நம் அம்மாவையும் நமதாண்டவரையும் நீ பார்க்கவில்லையா? நீ இல்லாமல் நாங்கள் அங்கே எப்படி போக முடியும்? நீ தானே பேச வேண்டும் என்று சொன்னான் பிரான்சிஸ். பின்பு லூசியா தன் எண்ணத்தை மாற்றிக்கொண்டாள். மூவரும் மறுநாள் காலையில் கோவா தா ஈரியாவை அடைந்தார்கள். இவர்கள் மூவரும் வருவதற்குள் அங்கே ஆயிரத்துக்கும் மேல் சனங்கள் கூடியிருந்தது. மூவரும் சென்ற பிறகு பிரான்சிஸ் ஜசிந்தாவின் தாய் ஒலிம்பியாவும், லூசியாவின் தாய் மரிய ரோசாவும் கோவா தா ஈரியாவுக்கு சென்றார்கள். பிரான்சிஸ், ஜசிந்தாவின் தந்தை மார்டோவும் யாரிடமும் சொல்லாமல் அங்கு சென்றார்.

லூசியா “தொப்பிகளை கழற்றுங்கள், அம்மா வருகின்றார்கள்” என்றாள். இதை மார்ட்டோ கேட்டார். அதுமட்டுமன்றி ஒரு சிறுமேகம் அஸின்ஹேரா மரத்தில் வந்து தங்குவதையும் கண்டார்.

திடீரென சூரிய வெளிச்சம் மங்கியது. ஒரு குளிர்ந்த காற்று வீசி வெப்பத்தை தணித்தது. ஒருவருக்கும் எந்த வார்த்தையும் கேட்கவில்லை. குழந்தைகள் மூவரும் பரவச நிலையை அடைந்து தேவ அன்னையின் காட்சியை கண்டார்கள்.

**“உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்’** என்று கேட்டாள் லூசியா

**‘அடுத்த மாதம் 13ஆம் திகதி நீங்கள் இங்கு வரவேண்டும். உலக சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளவும், யுத்தம் முடிவடையவும், தேவதாயின் மகிமைக்காக ஜெபமாலையை தினமும் தொடர்ந்து சொல்லி வாருங்கள். ஏனென்றால் தேவதாய் மட்டும் இவற்றை பெற்றுத் தர முடியும்’** என்றார்கள் தேவ அன்னை.

**‘அம்மா நீங்கள் யார் என எங்களுக்குச் சொல்லுங்கள். நீங்கள் எங்களுக்கு காணப்படுகின்றீர்கள், என்று எல்லோரும் நம்பும் படி ஒரு புதுமை செய்யுங்கள்’** என்றாள் லூசியா.

**‘இங்கு மாதந்தோறும் தொடர்ந்து வாருங்கள். அக்டோபர் மாதம் நான் யாரென்றும் என்ன விரும்புகின்றேன் என்றும் சொல்வேன். எல்லோரும் நம்பும் படி ஒரு புதுமை செய்வேன்’** என்று கூறினார்கள்

**இதன் பின் லூசியாவிடம் சிலர் கூறியிருந்த விண்ணப்பங்கள் அவள் தேவதாயிடம் தெரிவித்தாள். 1941ஆம் ஆண்டில் இது பற்றி அவள் எழுதும் போது அவ்விண்ணப்பங்கள் எவை என்பது பற்றி மறந்துவிட்டதாக குறிப்பிட்டாள்.**

மீண்டும் நம் அன்னை அம்மூன்று சிறுவர்களையும் பார்த்து, **‘பாவிகளுக்காக உங்களை பலியாக்குங்கள் அடிக்கடி குறிப்பாக நீங்கள் ஏதாவது பரித்தியாகம் செய்யும்போது ‘ஓ இயேசுவே! உமது அன்பிற்காகவும் பாவிகள் மனம் திரும்பவும் மரியாயின் மாசற்ற இருதயத்துக்குக்கெதிராகச் செய்யப்படும் பாவங்களுக்காக பரிகாரமாகவும் இதை செய்கின்றேன்’** என்று சொல்லுங்கள்.

## நரகக் காட்சி

இந்தக் கடைசி வார்த்தைகளைக் கூறியபடி தன் கரங்களை விரித்தார்கள். அவற்றிலிருந்து பாய்ந்த ஒளி பூமியைப் பிளந்ததுப் போல் காணப்பட்டது. அங்கு ஒரு நெருப்பு கடலையே நாங்கள் கண்டோம். அந்நெருப்பினுள் பசாசுகளும் ஆன்மாக்களும் அமிழ்த்தப்பட்டிருந்தன. அவர்கள் பழுக்கச் சிவந்து ஊடுருவிப் பார்க்கக் கூடிய தணல் போலிருந்தனர். மானிட வடிவத்தில், சிலர் கருப்பாக அல்லது பித்தளை நிறமாக இருந்தனர். மேகம் போல் புகையுடன் அவர்கள் உள்ளிருந்தே பீறிட்டு வந்த நெருப்பு சுவாலைகளால் அங்குமிங்கும் வீசப்பட்டனர். பெருந் தீயிலிருந்து சிதறும் நெருப்புப் பொறிகளைபோல பாரமோ நடுநிலையோ இல்லாமல் எப்பக்கமும் விழுந்தனர். வேதனையாலும், எல்லாவற்றையும் இழந்து விட்ட துயரத்தாலும் அவர்கள் அழுத சத்தம் எங்களுக்கு பயங்கரத்தை உண்டாக்கியதால் நாங்கள் அச்சத்தால் நடுங்கினோம். பசாசுகள் அகோர அராசிகமான இனந்தெரியாத மிருகங்களைப் போலும் ஊடுருவிப் பார்க்கக் கூடிய எரியும் நிலக்கரி போலும் மற்றவர்களிடமிருந்து பிரித்து அறியக்கூடியவாயிருந்தன. பயம் மேலிட்டு உதவி தேடுவது போல் நாங்கள் நம் அன்னையை நோக்கி கண்களை உயர்த்தினோம். அவர்கள் எங்களைப் பார்த்து அன்புடன், துயரத்துடன் இவ்வாறு கூறினார்கள்.

**‘பரிதாபத்துக்குரிய பாவிகளின் ஆன்மாக்கள் செல்லும் நரகத்தை நீங்கள் கண்டீர்கள் அவர்களை காப்பாற் உலகில் என் மாசற்ற இருதயத்தின் மீது பக்தியை ஏற்படுத்த இறைவன் விரும்புகின்றார். நான் உங்களிடம் கூறுவதை நீங்கள் செய்தால் அநேக ஆன்மாக்கள் காப்பாற்றப்படுவார்கள். சமாதானமும் நிலவும், இந்த யுத்தம் முடிவடையும், ஆனால் மனிதர்கள் இறைவனை நோகச் செய்வதை நிறுத்தாவிட்டால் இதைவிட கொடிய யுத்தம் 11ஆம் பத்திநாதர் காலத்தில் ஆரம்பிக்கும்.**

**இனம் தெரியாத ஒரு ஒளியால் ஓர் இரவு வெளிச்சம் பெறுவதை நீங்கள் காணும்போது, உலகத்தின் பழி பாவங்களுக்காக யுத்தத்தாலும், பசியாலும் திருச்சபைக்கும் பாப்பரசருக்கும் எதிரான கலாபனையாலும் உலகை இறைவன் கண்டிக்கப் போகின்றார் என்பதற்கு அவர் கொடுக்கும் அடையாளம் அதுவே அறிந்துகொள்ளுங்கள். இதை தடுத்து நிறுத்த, ரஷ்யாவை என் மாசற்ற இருதயத்திற்கு ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும்**

**முதல் சனிக்கிழமைகளில் பரிகார நற்கருணை வாங்க வேண்டுமென்றும் கேட்க வருவேன். என் விருப்பங்கள் நிறைவேற்றப்பட்டால் ரஷ்யா மனந்திரும்பும். சமாதானம் உலகமெங்கும் பரப்பும்...**

**தொடர்ச்சி 15ஆம் பக்கம்**

## 01 மத்துகமை வெள்ளப்பெருக்கு..

(வெள்ளம் ஏற்படும்போது) இடம்பெற்றால், அதிலிருந்து தோட்டப்புற மக்களை பாதுகாக்க இத்தோட்டத்திற்கென படகு ஒன்றை பெற்றுத்தருமாறும்” கர்தினால் ஆண்டகையிடம் அம்மக்கள் கேட்டுக்கொண்டனர். இது தொடர்பாக தனது கவனத்தை செலுத்திய ஆண்டகை அவர்கள், அவ்வேளையில் தம்முடன் சென்றிருந்த, செத்சரன நிறுவனத்தின் இயக்குனர் அருட்தந்தை லோரன்ஸ் ராமநாயக்க மற்றும் மத்துகமை பங்குத்தந்தை ஆகியோரிடம், இவர்களின் வேண்டுகோள் தொடர்பாக தமது கவனத்தை செலுத்தி இதனை நிறைவேற்றுமாறு அறிவுறுத்தல்களை வழங்கினார்.

அத்தோடு, செத்சர நிறுவனத்தினால் அனுப்பி வைக்கப்பட்ட உலர் உணவுப் பொருட்கள், மற்றும் சமையல் அறைக்குத் தேவையான பொருட்கள், மெத்தைகள் போன்றவைகளும் பகிர்ந்தளிக்கப்பட்டது. பின்னர் மத்துகமை பங்கிற்கு சொந்தமான தெண்ணஹேன மக்களை சந்தித்த ஆண்டகை அவர்கள், அங்கிருந்த மக்கள் முகம் கொடுத்த சம்பவத்தையும் கேட்டறிந்து, அவர்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கினார். அதன் பின்னர் மத்துகமையில் அமைந்துள்ள நேபட என்னும் பகுதி மண் சரிவுக்கு உட்படும் பிரதேசம் என எச்சரிக்கப்பட்ட நிலையில், தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டு, இன்றுவரை வீடு வாசல்களை இழந்து புனித மரியாள் ஆலயத்தில் தஞ்சம் புகுந்துள்ள 14 குடும்பங்களையும் சந்திக்க கர்தினால் ஆண்டகை மறக்கவில்லை. இதன்போது அவர்கள் கர்தினால் ஆண்டகையிடம், ஆலயத்திற்கு சொந்தமான மண்சரிவு ஏற்படாத நிலத்தில் ஒரு பகுதியில் தமக்கு பெற்றுத்தருமாறு கேட்டனர். இதற்கு பதிலளித்த ஆண்டகை அவர்கள் நேபட பிரதேசத்தில மண்சரிவு அபாயம் அற்ற நிலப்பகுதி ஒன்றினை கண்டறிந்து அதனை தமக்கு அறிவிக்குமாறு கேட்டுக்கொணடதோடு, தம்மாலான உதவிகளை செய்ய முடியும் என்றும் கூறினார். இந்த பயணத்தை நிறைவு செய்த ஆண்டகை அவர்கள், ஹொரனை பங்கிற்கு சொந்தமான நியூசெட்டல் தோட்ட மக்களையும், திருக்குடும்ப ஆலயத்தில் சந்தித்து அவர்களுடனும் கலந்துரையாடி அவர்களுக்கும் நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இப்பயணத்தின்போது மத்துகமை பங்கின் பங்குத்தந்தை கலன பீரிஸ் அடிகள் மற்றும் திருப்பாலத்துவ தமிழ் பகுதிக்கு பொறுப்பான அருட்பணி ஓனாசியல் அடிகளார் செத் சரண இயக்குர் லோரன்ஸ் ராமநாயக்க அடிகளார், கொழும்பு உயர் மறைமாட்ட ஆயரின் செயலாளர் அருட்தந்தை ஆகியோரும் கர்தினால் ஆண்டகையுடன் இணைந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பொதுவானவை

- **எவனொருவன்** அதிகம் வைத்துள்ளானோ அவன் பணக்காரனல்ல. எவனொருவன் அதிகம் கொடுக்கின்றானோ அவன் தான் செல்வந்தன் - எரிக்புரம்.
- **அதிகக்** கவனம் செலுத்தவேண்டிய விஷயங்கள், குறைந்த கவனம் செலுத்தவேண்டிய விஷயங்களின் தயவில் இருக்கக்கூடாது - கோதே.
- **மற்றவர்களுக்கு** உதவி செய்யாமல் நமக்கு உதவி செய்து கொள்ள முடியாது. மற்றவர்களை செழிப்படையச் செய்யாமல் நாம் செழிப்படைய முடியாது. மற்றவர்களை நல்வாழ்வுக்குக் கொண்டுவராமல் நாம் நல்வாழ்வைப் பெற முடியாது. - ஜேனட் கோலே.
- **அரசன்** எப்படியோ, அவ்வழி மக்கள்.
- **அழகும்**, நளினமும் உலகத்தை ஈர்க்கின்றன.
- **வினை** விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்
- **குலைக்காத** நாய்களும், அசையாத தண்ணீரும் அபாயமானவை
- **எளிதில்** வருவது எளிதில் போகும்
- **ஒவ்வொரு** மனிதனும் அவனவன் சிலுவையைச் சுமக்க வேண்டும்.
- **ஒவ்வொரு** மலையும் பள்ளத்தாக்கை கொண்டுள்ளது.
- **ஒவ்வொரு** முன் அலையும், பின் அலையைச் சார்ந்து உள்ளது.
- **அதிகம்** கைப்பிடி, அதிகம் கைவிடு
- **காலமும்,** அலையும் யாருக்கும் காத்திருக்காது
- **முள்** இல்லாமல் ரோஜா இல்லை
- **இரண்டு** தவறுகள் ஒரு சரியாகாது
- **ஒரு** நல்லது செய்யக் கெட்ட நேரம் என்று ஒன்று எப்போதுமில்லை
- **உன்னுடையத்** தவறுகளை மற்றவர்கள் மிகைப்படுத்துவதற்கு முன்னால் ஒப்புக்கொள்
- **உன்** காலுக்கடியில் புல்லை வளர விடாதே
- **புண்பட்ட** கால் பெருவிரலை மிதிக்காதே
- **உன்னால்** கடிக்க முடியவில்லையென்றால் ஒருபோதும் பற்களைக் காட்டாதே.

## 01 ஒற்றுமையை....

1991ஆம் ஆண்டு யுத்தம் கடுமையாக இடம்பெற்றுக் கொண்டிருந்த காலத்தில் யாழ் மாவட்டம் கிளிநொச்சியுடன் துண்டிக்கப்பட்டிருந்த போது கிளாலி கடல் ஏரியா பல சிரமங்கள் மத்தியில் யாழ்ப்பாணத்திற்கு வந்த பயணங்களை கர்தினால் ஞாபகமூட்டினார். தமிழர்கள் தங்களை இரண்டாம் தர பிரஜைகளாக கருதும் நிலையை தனிச் சிங்களச் சட்டமே ஏற்படுத்தியது. ஆதனால்தான் யுத்தம் ஆரம்பமாகியது என்று கூறிய பேராயர் ஒற்றுமையை கட்டியெழுப்பக் கூடிய தீர்வை நோக்கி ஒன்றாக பயணிப்போம் என்று வலியுறுத்தினார்.

யாழ் ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையுடன் குருமட காலம் முதல் நல்லுறவில் உள்ளதாகக் கூறிய கர்தினால் அவர்கள் யாழ். ஆயருடன் இணைந்து எம் தேசத்தின் ஒற்றுமைக்காகவும், எம் மக்களின் அமைதி வாழ்வுக்காகவும் உழைப்போம் எனவும் நம்பிக்கை தெரிவித்தார். வத்திக்கான் சங்கத்தின் பரிந்துரையில் கத்தோலிக்க பாடசாலைகளின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுவதாகக் கூறிய பேராயர் இன்றைய கத்தோலிக்க பாடசாலைகள் மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்றும் கூறினார். புனித பற்றிக்ஸ் கல்லூரி மிகச்சிறந்த கல்விமான்கள் பலரையும் சமய அரசியல் தலைவர்களையும் சமூக அக்கறையுடைய பலரையும் உருவாக்கியுள்ளது. இதையிட்டு பெருமைப்படுவதாகவும் பேராயர் குறிப்பிட்டார். இப்பரிசளிப்பு விழாவானது கல்லூரி முதல்வர் அருட்பணி. ம.ஜெறோ செல்வநாயகம் அடிகள் தலைமையில் நடைபெற்றது. இப்பரிசளிப்பு விழாவின் சிறப்பு விருந்தினராகக் கல்லூரியின் பழைய மாணவன் வைத்திய கலாநிதி ரட்ணசபாபதி கேசவன் கலந்து சிறப்பித்தார்.

## 01 புனித யோசேவ்வாஸ்...

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் உரோமை உர்பானியா பல்கலைக்கழகத்தின் அனுசரணையுடன் இயங்கிவரும் புனித யோசேவ்வாஸ் இறையியலகத்தின் 13வது பட்டமளிப்பு விழா 17.06.2017 சனிக்கிழமை அன்று மாலை ஆயர் இல்ல கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இவ்விழாவிற்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தலைமை தாங்கினார்.

அன்றைய தினம் இறையியலகத்தின் தமிழ் பிரிவைச் சேர்ந்த 7 மாணவ மாணவிகள் தமது நான்கு ஆண்டுகால பட்டப்படிப்பை பூர்த்தி செய்து தமது சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர். அவர்கள் முறையே அருட்சகோதரி ராணி எக்னஸ், லக்சிக்கா பர்னாந்து, லிட்வின் ரஜீவ், பெசில் தங்கராஜா, மேரி ஜெனிட்டா, தில்கானி சுலக்ஷனா, மேரி அனா இவர்களை ஞான ஒளி வாழ்த்தி நிற்கின்றது.

## 01 கத்தோலிக்க....

கத்தோலிக்கத் திருச்சபையானது புனிதர்களை உருவாக்குமே அன்றி அவர்களை வழிபடும் திருச்சபை அல்ல. நாம் உண்மையாகவே வழிபடுவது ஒரே இறைவனை மட்டுமே என்பதை நாம் மனதிற்கொள்ளவேண்டும். இது குறித்து சரிவர புரிந்துகொள்ளாத ஏனைய சபைகளானது திருச்சபையின் புனிதர்கள் பற்றி தப்பான கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள். ஆனால், இப்புனிதர்கள் எம்மைப்போன்று சாதாரண வாழ்க்கையை வாழ்ந்திருந்தாலும், அவர்கள் திருச்சபையின் விசுவாச வாழ்விற்காக தமது உயிரைத் தியாகம் செய்தவர்கள். அத்தோடு கிறிஸ்துவின் வாழ்வின் முன்மாதிரிகைகளைத் தமது வாழ்விலும் பின்பற்றி தூய வாழ்வு வாழ்ந்தவர்கள். எனவே நாமும் இப்புனிதர்கள்போல கிறிஸ்துவைப் பின்பற்றி தூய வாழ்க்கை வாழ முயற்சிக்க வேண்டும் என்பதை திருச்சபையானது தமது போதனையாக எமக்கு தருகின்றது என்று, கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்கள் களுத்துறை களமுள்ள புனித அந்தோனியார் ஆலயத்தின் 100வது ஆண்டு யூபிலி திருவிழா திருப்பலியின் மறையுரையின்போது இவ்வாறு தெரிவித்தார்.

## பணிப்பெண் தேவை

உடனடியாக வீட்டில் தங்கி வேலை செய்ய, சிங்களம் பேசக்கூடிய, 45-60 வயதுக்கு இடைப்பட்ட பணிப்பெண் தேவை.

தொடர்புக்கு : 0112930020

(N 1629)

## 03 இனிய சொல்...

உங்கள் வீட்டில், நாட்டில், ஊரில், பங்குகளில் உள்ளவர்களுக்குச் செய்யுங்கள். முதலில் அடுத்தவருக்கு மகிழ்ச்சியையும் சிரிப்பையும் வழங்குங்கள். அதன் விளைவாக நீங்கள் எப்போதும் மகிழ்ச்சியிலும் சிரிப்பிலும் பங்கு கொள்வீர்கள். நாம் வாழும் சமூகம் எப்போதும் சிரித்துக் கொண்டு இனிய முகத்துடன் இருக்கும், ஆம்' இப்போதிருந்தே சிரியுங்கள். சிரித்துக் கொண்டே இருங்கள். எங்க சிரிங்க பார்க்கலாம்.

## 05 அமைதிக்கு ஓர்...

படித்துக் கொண்டிருந்தார். இப்போது தெரசா உரோமைக்கு வந்திருக்கிறார் என்று கேள்விப்பட்டு மனைவி மரியாளுடனும் மகள் பத்து வயது ஆகியுடனும் சந்திக்க வந்திருக்கிறார். அண்ணனும் தங்கையும் தங்கள் வாழ்க்கையைப் பற்றி பேசிக்கொண்டனர். தாய் டிரானவுக்கும் தமக்கை ஆஜேய்க்கும் என்னவாயிற்றோ தெரியாது என்றார் லாசர். அவர்களிடமிருந்து எச்செய்தியும் லாசருக்கோ தெரசாவுக்கோ கிடைக்கவில்லை. லாசர் அப்போது பலேர்மோ என்னும் ஊரில் பெரிய கம்பெனி ஒன்றில் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

லாசரிடம் விடைபெற்றுக்கொண்டு தெரசா திருத்தந்தை 23ம் அருளப்பரைச் சந்திக்கக் காத்துக் கொண்டிருந்தார். அப்போது பாப்பானவரைச் சந்திக்க தேவையில்லை. அவரால் நியமனம் பெற்ற கர்தினால் அகாகியானியான் என்பவரைச் சந்தித்தால் போதும் எனத் தெரசாவுக்குதெரிவிக்கப்பட்டது.

மறுநாள் காலை அன்னை கர்தினால் அகாகியானியானைச் சந்திக்கப் புறப்பட்டார். அப்போது துறவறச் சபைகளின் குழுத் தலைவராகப் பணிபுரிந்து வந்தவர் அவரே. அவர் தெரசாவின் புதுச் சபையைப் பற்றியும் நான்காவது வார்த்தைப்பாட்டைப் பற்றியும் பல கேள்விகளை அன்னையிடம் கேட்டார். ஏழை நாடாகிய இந்தியாவில் எவ்வித வருமானமும் இன்றி சகோதரிகள் எப்படி பணி செய்ய முடியும்? எனக் கர்தினால் அன்னையிடம் வினவினார். "இதுவரை பத்து ஆண்டுக் காலமாக இறைவனின் கருணையை மட்டும் நம்பி வாழ்ந்து வந்திருக்கிறோம். மேலும், சகோதரிகள் ஏழ்மையை மிகக் கண்டிப்பாகக் கடைப்பிடிப்பதனால் உடை, உறைவிடம் போன்ற தேவைகள் மிகமிகக் குறைவு" என அன்னை பதிலளித்தார். **தொடரும்**

## 14 பாத்திமாக காட்சிகள்

**யுத்தங்களையும் திருச்சபை கலாபனைகளையும் எழுப்பிவிடும். நல்லவர்கள் கொல்லப்படுவார்கள். பாப்பரசர் அதிக துன்பங்களை அனுபவிக்க நேரிடும் பல நாடுகள் இல்லாமல் அழிக்கப்படும்.**

**ஆனால் இறுதியில் என் மாசற்ற இருதயம் வெற்றிபெறும், பாப்பரசர் ரஷ்யாவை எனக்கு ஒப்புக்கொடுப்பார். அது மனந்திரும்பும், உலகிற்கு ஒரு சமாதான காலம் கொடுக்கப்படும்.**

**'போர்த்துக்களில் விசுவாச சத்தியம் எப்போதும் காப்பற்றப்படும்.... இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், பிரான்சிஸிடம் சொல்லலாம். நீங்கள் செபமாலை சொல்லும்போது ஒவ்வொரு தேவ இரகசியத்தின் முடிவிலும் 'ஓ என் இயேசுவே எங்களை மன்னியும், நரக நெருப்பிலிருந்து எங்களை காப்பாற்றும். எல்லா ஆன்மாக்களையும் விசேஷமாய் யார் அதிக தேவையிலிருக்கிறார்களோ, அவர்களையும் மோட்சத்திற்கு அழைத்தருளும்.** என்று சொல்லுங்கள்

இத்துடன் நம் அன்னை அக்குழந்தைகளிடம் இன்னொரு இரகசியத்தையும் கூறினார்கள். அது இன்றுவரை யாருக்கும் வெளியிட படவில்லை மேலும் லூசியா அன்னையை நோக்கி **"உங்களுக்கு வேறு ஏதாவது நான் செய்ய விரும்புகின்றீர்களா?**

என்று கேட்க, **'இன்று நான் இதற்கு மேல் ஒன்றும் விரும்பவில்லை'**. என்று கூறிய மாமரி, அக்குழந்தைகளை மிகவும் அன்புடன் நோக்கிய பின் வழக்கம்போல கீழ்த்திசை நோக்கிச் சென்று அளப்பரிய விண்வெளியின் தொலையில் மறைந்தார்கள். சற்று நேரம் குழந்தைகள் மூவரும் கிழக்கு நோக்கிப் பார்த்தப்படியே இருந்தனர். காட்சியின் மகத்துவம் குறைந்தது அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ள சற்று நேரமாயிற்று. அதற்கு கூட்டத்திலிருந்து பலர் அவர்களைச் சூழ்ந்து கொண்டனர். ஆவலுடன் பலர் பல கேள்விகளை கேட்டனர். ஆனால் லூசியா **'அது இரகசியம்'** என்று மட்டும் கூறினாள். பிரான்சிஸ், ஜசிந்தாவின் தந்தை மாட்டோ தன் மகள் ஜசிந்தாவை தோள் மேல் வைத்துக்கொண்டு வீடு நோக்கிப் புறப்பட்டார்

**காட்சிகள் தொடரும்..**

## XIX சமூக வலைத்தளங்கள்

பற்றி வித்தியாசம் தெரியாமல் இளைஞர்கள் வலைத்தளங்களில் தெரிவிக்கும் கருத்துகள் பல நேரங்களில் பிரச்சினைகளில் முடிவடைகின்றன.

3. சுய குறிப்புகள் தேவையில்லாமல் சமூக விரோதிகளிடம் சென்றால், பிரச்சினைகள் உருவாக்கும் என்பது கூட இளைஞர்களுக்கு தெரியவில்லை.
4. அதிக நேரம் சமூக வலைத்தளங்களில் கழிக்கும் மாணவர்களின் படிப்பு அதிக அளவில் பாதிக்கப்படுகிறது என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன.
5. சமூக வலைத்தளங்களில் இளைஞர்கள் தெரிவிக்கும் கருத்துகள் அவர்களின் வேலை வாய்ப்பையும் மிகவும் பாதிக்கிறது என்று ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன.
6. நீண்ட நேரம் வலைத்தளங்களில் செலவிடும் மாணவர்களுக்கு உடல்வலி தவிர உளவியல் ரீதியாகவும், ஆண்மை குறைவு, மலட்டுத்தன்மை பாதிப்பு ஏற்படுகிறது என்றும் தகவல்களை தெரிவிக்கின்றன
7. சமூக வலைத்தளங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் எந்த அளவுக்கு உண்மை என்றும் சந்தேகத்துக்கு உரியவையே! இதனால் நிறைய பேர்கள் ஏமாற்றப்படுகின்றனர்.
8. சில சமூக வலைத்தளங்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களால் சட்ட ஒழுங்குகள் பல இடங்களில் பாதிக்கப்பட்டுள்ளது.

சமூக வலைத்தளங்களை அரசே பரிந்துரை செய்யும் இந்த வேளையில் நன்மைகளும் தீமைகளும் பல இருந்தாலும் நன்மைகளை எப்படி அதிகப்படுத்திக் கொள்வது. தீமைகளை எப்படி குறைப்பது என்பது ஒரு பெரிய சவாலாகும்.

சமூக வலைத்தளங்களில் நன்மைகள் மற்றும் தீமைகள் பற்றி பெற்றோர்களும், ஆசிரியர்களும் மாணவர்களுக்கும் இளைஞர்களுக்கும் கண்டிப்பாக எடுத்துரைக்க வேண்டும்.

சமூகத்தில் எந்த மாற்றம் வந்தாலும் அதனை சரிசெய்து நேர்படச் செய்வது ஒரு சமூகத்தின் கடமையாகும். அந்த கடமையை அனைவரும் செவ்வனே செய்ய வேண்டும்.

சட்டம் இயற்றுபவர்கள் இந்த சமூக வலைத்தளங்களை எப்படி பயன்படுத்த வேண்டும் என்றும் சமூகத்திற்கு பயனுள்ளதாக அமைய வேண்டும் என்றும் நினைத்து சிறப்பான மற்றும் கண்டிப்பான சட்டத்திட்டங்களை இயற்ற வேண்டும்.

புதுப்புது தொழில் நுட்பங்களை உருவாக்கும் இந்த நிறுனங்கள் பாதுகாப்பு விஷயங்கள் மற்றும் சுய விபரங்களை பகிரங்கப்படுத்தாமல் இருக்கும்படி தொழில்நுட்பங்களை உருவாக்க வேண்டும்.

அளவுக்கு மீறினால் அமிர்தமும் நஞ்சாகும் என்பதை போல சமூக வலைத்தளங்களை மாணவர்களும் இளைஞர்களும் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினர்களும் தங்களுடைய சுய கட்டுப்பாட்டுடன் பயன்படுத்தினால் இந்த சமூக வலைத்தளங்கள் சமூகத்திற்கு நிச்சயமாக ஒரு வரம்தான்.

இன்றைக்கு மனிதன் வாழ்வதற்கு இணைய தளத்துடன் கூடிய கணினி வசதி இருந்தால் போதும். எளிமையான வகையில் செலவே இல்லாமல் உலகில் எந்த மூலைக்கு செல்லாமல் பல ஆயிரக்கணக்கானோருடன் எந்த விஷயத்தைப் பற்றி வேண்டுமானாலும் பேசலாம்.

வித்தியாசமான வேற்று உலகத்தை உருவாக்கி, சில சமயங்களில் கலவரங்களுக்கும் காரணமாகி, ஏதோ ஒரு வகையில் நட்பு என்ற ஒரு போலியான மாயத்தை உருவாக்கி மனிதனுக்கு மனிதன் நேரிடையாக பேசுவதையே அரிதாக்கி, உலகம் என்பதை உருவாக்கிக் கொண்டிருக்கும் சமூக வலைத்தளங்கள் உண்மையாகவே ஒரு சமுதாயத்தைத்தான் உருவாக்குகின்றதா என்பதை எண்ணித்தான் பார்க்க வேண்டும்.

சமூக வலைத்தளங்கள் ஒரு வீடாக உருவகித்தால் கூடம், பூசை அறை, சமையல் அறை படிப்பூஜை, படுக்கை அறை, குளியல் அறை தேவைப்படாத பொருட்களை போட்டு வைக்கும் அறை என பல அறைகளைக் கொண்டிருக்கும்

தேவைக்கேற்ப அந்தந்த அறைக்குள் எப்போது செல்ல வேண்டும்? எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? என்பது நமக்கு நாமே நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய ஒன்று!

குழந்தைகள் பூஜை அறை, படிப்பறை மற்றும் தூங்கும் அறைக்கு செல்லாமல், ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய அறைகளுக்கு செல்லக் கூடாது.

இன்றைய கால கட்டத்தில் வளர் இளம் பருவத்தினரை குழந்தைகள் என்றல்ல, கைக்குழந்தைகள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது!

கைக்குழந்தை முன்பாக தங்க சங்கிலி, பிஸ்கட், கூர்மையான கத்தி இப்படி எதைக் காட்டினாலும் அதை கையால் பிடித்து வாயில் கவ்வுவது அந்த குழந்தையின் இயல்பான நிகழ்வாகும்!. சமூக வலைத்தளங்களில் வளர் இளம் பருவ குழந்தைகளின் நிலையும் அந்த குழந்தைகளின் நிலையும் இப்படித்தான் உள்ளது. இந்த சுபாவமே அவர்களை சுலபமாக கழற்றிவிடுகின்றது.

சுழலும்போது எல்லமே சுழலும், சுழல்வது நின்றாலும் சுருண்டுவிழுவது தவிர்க்க முடியாதது.

கட்டுரைத் தலைப்பான சமூக வளத்தளங்கள் வரமா? சாபமா? என்ற அலசின் முடிவில்

மனதை திடப்படுத்தி திசைமாறாமல் இருந்தால் பெறுவது வரங்கள்!

மனதை சிதைத்து திசையெங்கும் ஓட விட்டால் கிடைப்பது சாபங்கள்

வரங்கள் உயிர் **வழியாக** இருந்து நம்மை உய்விக்கும்

சாபங்கள் உயிர்போகும் **வழியாக** இருந்து நம்மை அனுப்பி வைக்கும்.




# வீட்டுக் குறிப்புக்கள்

- ✷ எலுமிச்சை இலைகளை நீரில் இட்டுக் காய்ச்சி வாய் கொப்பளித்தால் தொண்டை வலி நீங்கும். வாயிலிட்டு மென்றுவர வாய் நாற்றம் போகும். இளம் இலைகளை துவையலாக அரைத்தச் சாப்பிட்டால் வயிற்றுக் கோளாறுகள், பித்தம் அகலும்.
- ✷ எருக்கஞ்செடி இலைக்காம்பில் வடியும் பாலை முள் குத்திய இடத்தில் தடவினால் முள் வெளியேவரும். இதன் இலைகளை நெருப்பில் வாட்டி, சூடாக இருக்கும்போது இலைமேல் நின்றுவர குதிகால் வலி குணமாகும். இலைகளை வதக்கி கட்டிகள் மேல் வைத்துக் கட்டினால் கட்டி விரைவில் பழுத்து உடையும்.
- ✷ கற்பூரவல்லி இலைகளைச் சாறு பிழிந்து நெற்றியில் தடவினால் தலைவலி குணமாகும். மூன்றுவேளை, அரைக்கரண்டி வீதம் கற்பூரவள்ளிச் சாறை பருகி வந்தால் ஜலதோஷம், சளி குறையும். தேமல் மேல் இலைகளைத் தேய்த்து வந்தால் விரைவில் தேமல் மறையும்.
- ✷ குப்பைமேனி இலைகளுடன் உப்பு சேர்த்து அரைத்து சொறி சிரங்கின் மேல் பூசிவர புண்கள் ஆறும். இலைச்சாறை நெற்றியில் பூசினால் தலைவலி நீங்கும்.
- ✷ குப்பைமேனி இலைகளை நீரில் போட்டு காய்ச்சி நீரை வடிகட்டி சிறிது உப்பு சேர்த்து சாப்பிட மலச்சிக்கல் தீரும். இலைச்சாறை வெறும் வயிற்றில் குடித்தால் வாந்தி ஏற்பட்டு கபம் வெளியேறும். வயிற்றுப் பூச்சிகள் வெளியேறும்.
- ✷ குப்பைமேனி இலைச்சாறுடன் எலுமிச்சை இலைச் சாறு கலந்து மூட்டுகளில் பூசினால் மூட்டு வலி குணமாகும். இலைச்சாறுடன் தேன் கலந்து தீப்புண்கள் மேல் தடவினால் தீப்புண்கள் விரைவில் ஆறும்
- ✷ குப்பைமேனி இலையை வறுத்துப் பொடியாக்கி, உப்பு சேர்த்து பல்துலக்கி வந்தால் பல்வலி, ஈறு வீக்கம் மறையும். குப்பைமேனி இலைப் பொடியை தேன் அல்லது வெந்நீரில் குழைத்து சாப்பிட இருமல், கபம் தீரும்.
- ✷ கொய்யா இலைகளை நீரிலிட்டு காய்ச்சி வடிகட்டிய நீரைக் குடித்தால் வயிற்றுக் போக்கு நிற்கும். இலைகளை மென்று இலைகளால் பல் துலக்கினால் பல்நோய், பல்சொத்தை, வீக்கம் தீரும். கைப்பிடி அளவு இலைகளை இடித்து நான்கு மிளகு சேர்த்து, இரண்டு டம்ளர் நீர்விட்டுக் காய்ச்சி, அரைகப் வீதம் அரைமணி நேரத்திற்கொரு தடவை குடித்துவர வயிற்றுப்போக்கு நிற்கும். இலைகளை நீரில் இட்டு மிளகு சேர்த்துக் காய்ச்சிக் குடித்தால் வாந்தி நிற்கும்.

# நரை முடியை போக்க

**தேவையானவை :** சில தேங்காய் மூடிகள் அல்லது நெல்லிக்காய் ஓடுகள் மற்றும் அரை லிட்டர் தேங்காய் எண்ணை.

**செய்முறை :** தேங்காய் மூடியை நெருப்பில் சுட்டு கரியாக்குங்கள். பின்னர் அதனை பொடி செய்து தேங்காய் எண்ணெயுடன் கலந்து கொள்ள வேண்டும். இந்த எண்ணெயை வெயிலில் சில நாட்கள் வைக்க வேண்டும்.

**பயன்படுத்தும் முறை :** பிறகு அதை சிறிது எடுத்து, தலைமுடிகளில் தடவிவர வேண்டும். அப்படியே இருக்கலாம், அல்லது தலையை அலச வேண்டுமென்றால், சில மணி நேரம் கழித்து அலசி விடலாம்.

**நரைமுடிக்கு பை பை :** இதுபோல சில தினங்கள் செய்து வந்தால் உங்கள் நரைத்த முடிகள் மெல்ல மெல்ல மறைவதைக் கண்கூடாகக் காணலாம். மேலும், தேங்காய் எண்ணை உடலுக்கு குளிர்ச்சியைத் தந்து, மனதில், செயல்களில் ஒரு தெளிவையும் கொடுக்கும். இதுதான், நமது பாரம்பரிய இயற்கை வைத்தியத்தின் தனிச் சிறப்பு!

# தலைவலி

தலைவலியில் இரண்டு வகை இருக்கிறது. முதல் வகை பிரைமரி ஹெட் ஏக். உடல் ரீதியாக ஒரு மாற்றம் ஏற்படும் போது தலையில் மூளையைச் சுற்றி உள்ள இரத்தக் குழாய்கள் விரிவடைந்து தளர்ந்து மூளையிலும் அதைச் சுற்றிலும் உள்ள நரம்புகளை அழுத்துகின்றன. மூளையில் கட்டி, அடிபட்டிருந்தல், நோய்த் தொற்று இருத்தல் போன்ற காரணங்களால் ஏற்படுகின்ற தலைவலி செகன்ட்ரி ஹெட்ஏக்.

பார்வையில் மாற்றம், குமட்டல், வாந்தி, மயக்கம் போன்ற ஏதோ ஒன்று இருக்குமானால், கண்டிப்பாக உடனே ஒரு மருத்துவரைச் சந்திக்க வேண்டும். மேலும் மூளைக்கட்டி, இரத்தக்கசிவு, நோய்த்தொற்று போன்ற ஏதோ ஒன்றோடு கூட இந்த விளைவுகளுக்குத் தொடர்பு இருக்கலாம்.

## உணவுப் பொருள்கள் மூலம்....

சில சமயத்தில் நாம் சாப்பிடும் உணவுகள் கூட தலைவலியை உருவாக்கிவிடும். காபியில் இருக்கிற காபின், வெண்ணெய்யில் இருக்கிற டைரமைன், வாழைப்பழம் போன்ற சில பழங்கள், சிரட்ஸ் அமிலம் இருக்கிற ஆரஞ்சு, எலுமிச்சை போன்ற சிலவகை பொருள்களுக்கு தலைவலியைத் தூண்டுகிற சக்தி இருக்கிறது. சாப்பிட முடியாமல் போவது, சாப்பிடும் நேரங்களில் மாற்றம் போன்ற சில பழக்கங்களும் தலைவலியைத் தூண்டும். உணவில் காய்கறி, பழங்கள், கீரையை அதிகம் சேர்க்க வேண்டும். தினமும் மூன்று லிட்டர் தண்ணீர் குடிக்க வேண்டும்.

அடிக்கடி தலைவலியால் அவதிப்படுகிறவர்கள் மருத்துவரின் ஆலோசனையுடன் மாத்திரைகளைச் சாப்பிடுவது நல்லது. மாறாக, மருந்துக் கடைகளுக்கு நேரடியாக நீங்கள் சென்று வாங்கிச் சாப்பிடும் மாத்திரைகள் காரணமாக குடல் புண், சிறுநீரக பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புகள் உண்டு.

## தடுக்கும் முறைகள்

மன அழுத்தத்தால் ஏற்படும் தலைவலியைக் குறைக்க மனதையும், உடலையும் தளர்த்துதல் அவசியம். ஓய்வு போன்றவை அழுத்தகம் காரணமாக ஏற்படும் தலைவலியைத் தடுக்க உதவும். மூச்சுப் பயிற்சி, உடலைத் தளர்த்தும் பயிற்சிகள், பிரச்சினைகளை கையாளப் பழகும் உத்திகள் போன்றவை மன அழுத்தத்தின்போது பதற்றத்தைக் குறைத்துக் கொள்ளவும் தலைவலியினைத் தவிர்க்கவும் உதவும். உடற்பயிற்சிகளில் ஈடுபடாதவர்களிடம் அழுத்தம் காரணமாக ஏற்படும் தலைவலி அதிகமாகக் காணப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் நடைபயிற்சி, ஓட்டம், சைக்கிள் ஓட்டுதல், நீச்சல் போன்றவற்றில் ஈடுபடலாம்.



## டென்ஷன் தலைவலி

இது தலைவலிகளில் பிரதானமானது. இப்படி டென்ஷனால் வருகிற தலைவலி 80% பேரை பாதிக்கிறது என்று ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. மன அழுத்தம் அல்லது டென்ஷன், தலைவலியை உருவாக்குகிறது என்பதல்ல. இது ஒரு வசதிக்காகவே சொல்லப்படுகிறது. டென்ஷனால் ஏற்படுகிற தசை இறுக்கமே அந்தத் தலைவலிக்கு முக்கியக் காரணம்.



# பழங்களும், பயன்களும்

# திராட்சை

ஊட்டச்சத்து மிக்க பழங்களில் திராட்சையும் ஒன்று. இதில் வைட்டமின் பி1, பி2, பி3, பி6, பி12, சி, இரும்புச் சத்து, பாஸ்பரஸ் சத்து ஆகியவை உள்ளன. இரத்தசோகை, மலச்சிக்கல், ஜீரண கோளாறு, சிறு நீரகக் கோளாறுகளைப் போக்கும் சக்தி திராட்சைக்கு உண்டு. உறக்கம் இல்லாமல் அவதிப்படுபவர்களுக்கும் மாமருந்தாகிறது திராட்சை பழம். திராட்சையை உண்பதால் உடல் வறட்சி, பித்தம் நீங்கும். இரத்தம் தூய்மை பெறும். இதயம், கல்லீரல், மூளை, நரம்புகள் வலுப்பெறும். ஜீரணக் கோளாறு இருப்பவர்கள் திராட்சை பழத்தை சாப்பிட்டு வர நல்ல தீர்வு கிடைக்கும். பசி இல்லாதவர்கள் அடிக்கடி திராட்சை சாப்பிட வேண்டும். பசியைத் தூண்டி விடும். குடல் கோளாறுகளைக் குணப்படுத்தும் திராட்சைப் பழச்சாற்றை வெந்நீரில் கலந்து குடித்து வர காய்சல், நாவறட்சி நீங்கும்.

திராட்சை சாறுடன் சர்க்கரை சேர்த்து காலையில் வெறும் வயிற்றில் மட்டும் தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டு வர மாதவிடாயக் கோளாறுகள் சரியாகும். வயிற்றுப்புண், வாய்ப்புண் ஆற திராட்சை சிறந்த மருந்தாகும். குளிர்ச்சியான தேகமுள்ளவர்கள் அதிக அளவில் சாப்பிடக்கூடாது.

திராட்சை பல நிறங்களில் கிடைக்கிறது. இது வெள்ளை, வெளிர்ப்பச்சை, கருஞ்சிவப்பு, ஊதா அல்லது கறுப்பு எனப் பல நிறங்களில் இருக்கும். சில வகைகளில் விதைகள் இருக்காது. திராட்சையில் சர்க்கரைச்சத்து அதிகம் உள்ளது. இது தவிர கார்போ ஹைட்ரேட், டெக்ஸ்ட்ரோஸ், பரக்டோஸ், பெக்ஷன் மற்றும் பார்டாரிக் அமிலம், மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம் முதலான அமிலங்களும், புரதம், சுண்ணாம்பு, தாமிரம், இரும்பு, பொட்டாசியம் முதலான உலோகச் சத்துக்களும் உள்ளன.

வெளீரென்ற முகத்தை பெற விரும்பினால், திராட்சை பழச்சாற்றை பிழிந்து எடுத்தபின் மீதம் உள்ள சக்கையை தூக்கி போடாமல் அதை முகத்தில் ஒரு மாஸ்க் போன்று பூசி சிறிது நேரத்திற்குப் பின் கழுவவேண்டும். திராட்சை சாற்றில் அதிக அளவு ஆன்டி ஆக்சின்ட்ஸ் உள்ளது. இது சருமத்தை சுத்திகரித்து இரத்தத்தில் உள்ள பிளேட்லட்ஸ்களை அதிகப்படுத்தி சருமம் புதிதாகவும், சுத்தமாகவும் மாற்றுகின்றது. பொதுவாக வெயில் காலத்தில் தினமும் ஒரு டம்ளர் திராட்சை சாறு அருந்துவது சிறந்தது.

இந்தப் பழச்சாற்றில் அதிக அளவு இரும்புச்சத்து உள்ளது. தினசரி ஒரு கப் சுத்தமான திராட்சை சாறை அருந்தும்போது நல்ல இரத்தம் உற்பத்தியினாலும் அதன் சீரான ஓட்டத்தினாலும் ஒளிரும் சருமம் கிடைக்கின்றது. இது மிக ஆரோக்கியமானதாகும். இதை நீங்கள் சருமத்தில் போட்டால் போதும். உடனடியாக தோல் உரிய ஆரம்பித்து விடும். இவை இறந்த திசுக்களை நீக்கி சுருக்கங்கள் அற்று இயற்கையாக காணப்படும். நல்ல இரத்த ஓட்டத்தின் காரணமாக சருமத்தின் நீட்சித்தன்மையையும் திராட்சை அதிகரிக்கின்றது.

கண்களில் கருவளையங்களைக் கொண்டவர்கள் பலர் உண்டு. அது மிகவும் அசிங்கமாக இருக்கும். திராட்சையை இரண்டாக வெட்டி கண்களின் கீழே தடவினால் போதும். இந்த வழியைப் பயன்படுத்தி கண்களைச் சுற்றி உள்ள பகுதியில் கருவளையங்கள் வரவிடாமல் தடுக்க முடியும். திராட்சை சதைகளில் கிடைக்கும் மிகப்பெரிய சத்து, புரோ ஆன்தோ சயனிடின் என்பதாகும். இதையே புரோ சயனிடின், பைக்னோ ஜெனால் என்பதுண்டு. இந்தப் புரோ ஆன்தோ சயனிடின் திராட்சை சதைகளில் 20 உள்ளது. ஆனால் அதன் விதைகளில் 80 உள்ளது. இந்த வியக்கதக்க செய்தியை தெரிந்த பின்பு விதைகளைவிட்டு சதைகளைத் தின்பதால் எவ்வளவு பெரிய இழப்பு என்பதை தெரிந்து கொள்ளலாம்.

சர்க்கரை நோயாளிகளுக்கு காலில் மரத்துப் போகும் தன்மை, கண் புரை வளருதல் ஆகியவற்றைத் தடுக்கிறது. கண் புரை வந்தாலும் நீக்குகிறது. சிறுநீரகச் செயல்பாட்டின் குறைகளை சரிசெய்யப் பயன்படுகிறது. மாலைக்கண் நோய் நீக்கி கண்களில் ஒளியைத் தருகிறது. பெண்களின் மார்பகப் புற்றுநோய், கருப்பை கோளாறுகள் போன்ற நோய்களிலிருந்தும் தடுக்க வல்லதாக உள்ளது திராட்சை. நினைவாற்றலை மேலும் வளர்க்கிறது.

## தெரிந்து கொள்வோம்

- ★ அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பவர்களுக்கு சர்க்கரை நோய், இதய அடைப்பு மற்றும் இளம் வயதில் மரணம் ஆகியவை ஏற்படுமாம்

  அமெரிக்காவில் உள்ள ஹார்வர்டு ஸ்கூல் ஆஃப் பப்ளிக் ஹெல்த் என்ற மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டுள்ள அதிர்ச்சி தரும் செய்தி
- ★ போத்தலில் உள்ள பழச்சாறுகளை அடிக்கடி குடிப்பதால் பற்களுக்குக் கேடு, உடல் பருமன் ஆதல், இரத்தத்தில் சர்க்கரை அளவு அதிகரித்தல் போன்ற கெடுதிகள் ஏற்படும் என எச்சரிக்கப்படுகின்றது.
- ★ ஒரு டம்ளர் பழச்சாற்றில் ஐந்து ஸ்பூன் அளவு சர்க்கரை உள்ளது. எனவே ஒரு டம்ளர் பழச்சாற்றில் நான்கு மடங்கு தண்ணீர் கலந்து பருகினால் பாதிப்பு குறையும்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

மக்கள் மாண்புமிக்க வாழ்வு வாழ்வதைத் தடைசெய்யும், புதிய வடிவம் வறுமை மற்றும், விளிம்புநிலைக்குத் தள்ளப்படுதல் கண்டு, நாம் புறமுதுகு காட்டக் கூடாது"

"ஏழ்மையின் வழிகளைத் தனதாக்கிக்கொண்டு, அன்பில் வளமிக்கதாய், விசுவாசமுடையதாய், சுதந்திர உணர்வுடனும், வரவேற்கும் குணத்துடனும், மறைப்-பணியாளர்களாகவும் திருஅவை செயல்படும் போது, அது ஒளிர்விட்டு மிளிர்கிறது"

"நாம் அனைவரும், இரக்கம், ஆறுதல் மற்றும், ஒன்றிப்பின் புளிக்காரமாகச் செயல்படவேண்டும் என, மூவொரு இறைவன் திருவிழா நமக்கு அழைப்பு விடுக்கிறது"

"ஒவ்வொருவரின் வாழ்வும், அடுத்தவரின் வாழ்வோடு பிணைக்கப்பட்டுள்ளது: வாழ்க்கை, வெறுமனே கடந்து போவதற்கல்ல, மாறாக, மற்றவரோடு தொடர்பு கொள்வதற்கே"

"சித்ரவதைகளுக்கு எதிரான என் வன்மையான கண்டனத்தை மீண்டும் ஒருமுறை வெளியிடுவதோடு, இத்தகைய நிலைகள் முற்றிலுமாக ஒழிக்கப்படவும், சித்ரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டோர் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கு ஆதரவளிக்கவும், அனைவரையும் விண்ணப்பிக்கிறேன்".



## முதியோருக்கு கூடுதல் பராமரிப்பும் அக்கறையும் தேவை

2015ம் ஆண்டுக்கும், 2030ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில், உலகில், முதியோரின் எண்ணிக்கை கூடும் என்றும், அதற்கேற்றதுபோல் முதியோர் குறித்து, கூடுதல் பராமரிப்பும் அக்கறையும் தேவைப்படும் என்றும் ஐ.நா. அறிக்கையொன்று கூறுகிறது. ஆனி 15, வியாழனன்று சிறப்பிக்கப்பட்ட முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாளை முன்னிட்டு ஐ.நா. அவை வெளியிட்டுள்ள அறிக்கையில், முதியோருக்கு எதிராக நிகழும் வன்கொடுமைகள், பல நாடுகளில் மூடி மறைக்கப்படுகின்றன என்று கூறப்பட்டுள்ளது.

வாழ்விடங்கள் மறுக்கப்பட்டு, சொத்துக்கள் பறிக்கப்பட்டு, ஆதரவற்ற நிலையில் விடப்படும் முதியோரின் எண்ணிக்கை கூடி வருவதாகவும், ஐ.நா. அறிக்கை, கவலை வெளியிட்டுள்ளது. முதியோர் வன்கொடுமை ஒழிப்பு விழிப்புணர்வு நாள், ஆனி 15ம் தேதி சிறப்பிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம், 2011ம் ஆண்டு, ஐ.நா. அவையில் நிறைவேற்றப்பட்டது.

## ஏழு இறை ஊழியர்களின் வீரத்துவமான வாழ்வு ஏற்பு



மறைசாட்சிகள், ஆயர்கள், துறவு சபை நிறுவனர், பொதுநிலையினர் போன்றோரை, புனிதர் மற்றும், அருளாளர் நிலைகளுக்கு உயர்த்துவதற்கென, ஏழு பேரின் வீரத்துவ புண்ணிய வாழ்வு குறித்த விபரங்களை அங்கீகரித்தார், திருத்தந்தை பிரான்சிஸ். திருப்பீட புனிதர் நிலை பேராயத் தலைவர் கர்தினால் ஆஞ்சலோ அமாத்தோ அவர்கள், 16.06.2017 வெள்ளி மாலையில், திருத்தந்தையைச் சந்தித்து, இந்த விபரங்களைச் சமர்ப்பித்தார்.

✷ பொதுநிலை விசுவாசியான இறை ஊழியர் Teresio Olivelli அவர்கள், 1945ம் ஆண்டு தை 17ம் திகதி, கிறிஸ்தவ விசுவாசத்திற்காக கொலை செய்யப்பட்டார். இத்தாலியின் பெல்லாஜ்ஜோ என்ற ஊரில், 1916ம் ஆண்டு தை 7ம் திகதி, பக்தியுள்ள கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த இவர், இரண்டாம் உலகப்போரின்போது சிறைவைக்கப்பட்டு, திருமறைக்காக உயிர் துறந்தார்.

✷ Porto ஆயரான இறை ஊழியர் Antonio Giuseppe De Sousa Barroso (கார்திகை.5,1854-ஆவணி.31,1918)

✷ Aguas Calientes ஆயரும், இயேசுவின் திருஇதய கத்தோலிக்க ஆசிரியர்கள் அருள்சகோதரிகள் சபையை ஆரம்பித்தவருமான இறை ஊழியர் Giuseppe di Gesù López y González (ஐப்பசி.16,1872 - கார்த்திகை.11,1950)

✷ San Marco Argentano-Bisignano ஆயரும், பிரான்சி-ஸ்கன் சபையைச் சேர்ந்தவருமான இறை ஊழியர் Agostino Ernesto Castrillo (மாசி.18,1904 - 16,ஐப்பசி.1955)

✷ கப்புச்சின் துறவு சபையச் சேர்ந்த இறை ஊழியர் Giacomo da Balduina (ஐப்பசி.2,1900 - ஆடி,21, 1948)

✷ கார்மேல் சபையின் துறவியும், தூரின் கார்மேல் துறவு இல்லத்தை ஆரம்பித்தவருமான இறை ஊழியர் Maria degli Angeli (கார்த்திகை.16,1871 - ஐப்பசி.7,1949)

✷ பிரான்சிஸ்கன் அமலமரி சபையைச் சேர்ந்த அருள்சகோதரி இறை ஊழியர் Umiltà Patlán Sánchez (மார்ச்,17,1895 - ஜுன்,17,1970)

ஆகியோரின் வீரத்துவமான வாழ்வு குறித்த விபரங்களை அங்கீகரித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## வளர்இளம் பருவப் பிள்ளைகளின் வளர்ச்சியில் பெற்றோர் துணை நிற்க




உரோம் போன்ற மாநகரங்களில் வாழ்கின்ற குடும்பங்கள், கிராமப்புறப் பகுதிகளைவிட, மாறுபட்ட பிரச்சனைகளை எதிர்கொள்வதால், இந்நகரங்களில் வாழும் பெற்றோர், தங்களின் வளர்இளம் பிள்ளைகளை, மாநகரச் சூழலில், பயிற்றுவிக்க வேண்டுமென்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

உரோம் புனித ஜான் இலாத்தரன் பசிலிக்காவில், இத்திங்கள் இரவு ஏழு மணிக்கு, உரோம் மறைமாவட்ட மாநாட்டை ஆரம்பித்து வைத்து, ஏறக்குறைய 45 நிமிடங்கள் ஆற்றிய உரையில், இம்மாநாட்டின் தலைப்பை மையப்படுத்திப் பேசினார்.

**"வளர்இளம் பருவப் பிள்ளைகளைத் தனியாக விடாதீர்கள், அவர்களுக்குக் கல்வி வழங்குவதில், அவர்களுடன் இருப்பது"** என்ற இம்மாநாட்டின் தலைப்பு குறித்து விளக்கிய திருத்தந்தை, இப்பருவத்தினருக்கு ஆற்றப்படும் மேய்ப்புப்பணியில் கவனம் செலுத்தப்பட வேண்டிய கூறுகளையும் எடுத்துரைத்தார்.

தாங்கள் பின்பற்றக்கூடிய மனிதர்கள் இல்லாமையால், இளையோர் தங்கள் வளர்ச்சிப் பாதையைத் தடை செய்கின்றனர், அல்லது, தங்களையே தனிமைப்படுத்திக் கொள்கின்றனர் என்று கூறியத் திருத்தந்தை, இளையோரைச் சென்றடைவதற்கு, அவர்கள் பிரச்சனைகள் பற்றி, அவர்களிடம் பேசாமல் இருப்பது முதல் படி என்று கூறினார்.

மக்கள், தங்களின் பூர்வீகத்திலிருந்து தொடர்பற்று, சார்புநிலை உணர்வற்று இருக்கும் ஒரு சமுதாயத்தில், பெற்றோர் தங்கள் பிள்ளைகளை வளர்க்க வேண்டிய சவாலை எதிர்நோக்குகின்றனர் எனவும், இளையோருக்குத் தேவைப்படும் சார்புணர்வை, தாத்தா பாட்டிகள் கொடுப்பதற்கு வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும் என்றும், திருத்தந்தை கூறினார்.

மேலும், இம்மாநாட்டைத் தொடங்கி வைப்பதற்கு முன், உரோம் மறைமாவட்டத்தின் 38 பங்குத்தளங்கள் மற்றும், துறவற நிறுவனங்கள் அடைக்கலம் அளித்துள்ள, புலம்பெயர்ந்த குடும்பத்தினர் குழு ஒன்றையும், சந்தித்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

## துயரங்களில் இறைவன் அருகே வருவதை உணர்வதே அழகு – திருத்தந்தை

துயரங்கள் சூழும் மிகக் கடினமான நேரங்களிலும், பிறரது ஏளனங்களுக்கு உள்ளாகும் நேரங்களிலும், பொறுமையோடும், நம்பிக்கையோடும் இறைவனிடம் செபிக்கும் வழிகளைத் தேர்ந்தெடுக்கவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், கூறினார். தான் தங்கியிருக்கும் சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலியாற்றிய திருத்தந்தை, தோபித்து நூலிலிருந்து வாசிக்கப்பட்ட முதல் வாசகத்தை மையப்படுத்தி தன் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார்.

தோபித்து, அன்னா, தோபியா, சாரா ஆகிய அனைவரும் இன்ப துன்பங்களை ஏற்றுக்கொண்ட முறையைக் குறிப்பிட்டுப் பேசியத் திருத்தந்தை, இவர்கள் வாழ்வில் ஏற்பட்ட நல்ல, அழகிய நேரங்கள் மற்றும் கடினமான நேரங்கள் அனைத்திலும் அவர்கள் இறைவனைப் போற்றி வாழ்ந்ததைச் சுட்டிக்காட்டினார். வாழ்வில் வரும் அழகான நேரங்கள் என்றால், அவை, வெளிப்புறமாக, முக ஒப்பனை செய்யப்பட்ட நேரங்கள் அல்ல என்பதை, தன் மறையுரையில் தெளிவுபடுத்தியத் திருத்தந்தை, நமது கடினமானச் சூழல்களில் இறைவன் நம் அருகே வருவதை நாம் உணர்வதே அழகான நேரங்கள் என்று எடுத்துரைத்தார்.

## துன்பங்கள் என்பவை நற்செய்தி அறிவிப்பின் ஒரு பகுதி

வெற்றிக்குரிய வாக்குறுதிகளையோ, துன்பம் மற்றும் தோல்விகளிலிருந்து பாதுகாப்பு கிடைக்கும் என்ற வாக்குறுதிகளையோ இயேசு தன் சீடர்களுக்கு வழங்கவில்லை, மாறாக, ஒதுக்கி வைக்கப்படுதலையும், சித்திரவதைகளையும் ஏற்க வேண்டியிருக்கும் என்பதை முன் மொழிந்தார் என்றார் திருத்தந்தை பிரான்சிஸ்.

25.06.2017 ஞாயிறு திருப்பலி வாசகத்தை மையமாக வைத்து ஞாயிறு நண்பகல் மூவேளை செப உரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், பல்வேறு துன்பங்களை அனுபவித்து சிலுவையில் மரணமடைந்த இயேசுவின் வாழ்வோடு அவரின் சீடர்களின் வாழ்வும் ஒத்திணங்கிச் செல்லவேண்டும் என்றார். துன்பங்கள் என்பவை நற்செய்தி அறிவிப்பின் ஒரு பகுதியாக இருக்கும் வேளையில், அத்துன்பங்களையே நம் விசுவாசத்தின் உண்மை நிலையாகவும், இயேசு கிறிஸ்துவுடன் நாம் கொண்டிருக்கும் உறவை தெளிவுபடுத்துவதற்கான வாய்ப்பாகவும் நோக்க வேண்டும் எனவும் கூறினார்,

கடவுள் நம்மை ஒருபோதும் கைவிடுவதில்லை என்ற நம்பிக்கையில், நற்செய்தி அறிவிப்புக்கான வாய்ப்பை நம் துன்பங்களில் கண்டுகொள்ள வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இன்றைய காலத்திலும் கிறிஸ்தவர்கள் சித்திரவதைப்படுத்தப்படுவது தொடர்கிறது என்றும், அத்தகைய சித்திரவதைகள் மத்தியிலும் தங்கள் விசுவாசத்தை உறுதியுடன் பற்றி நற்செய்தி அறிவிப்பில் தீவிரமுடன் செயல்படும் அவர்களுக்காக செபிப்போம் என்றும் கூறினார்.

"நற்செய்தியின் உண்மைகளை, புறந்தள்ளி வாழும் மக்களைத் தட்டியெழுப்பும் பணியுடன், ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளைப்போல் நம்மை அனுப்பும் இறைவன், "அஞ்சாதீர்கள்" என்ற உறுதிமொழியையும் தந்து அனுப்புகிறார்", என, தன் மூவேளை செப உரையில் மேலும் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

'நான்கு நற்செய்திகளையும், தனித்துப் படிக்கும்போது இயேசுவின் வாழ்க்கையையும் பணிகளையும், வரலாற்றுக்கோர்வையாக அறிந்து கொள்வது எளிதன்று எனவே நான்கு நற்செய்திகளையும், தொகுத்து, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் விண்ணேற்பு வரை சுலபமாகப் படித்து அறிய ஒரு சந்தர்ப்பம் இதோ. இயேசுவை ஆழமாக அறியவும், அவர் வாழ்ந்த விழுமியங்களை அறிந்து கொள்ளவும் இத் தொடரை தொடர்ந்து வாசித்து பயன்பெறுங்கள்



# உள்ளத்தை தொடும் போதனைகள்

## அளவின்றி மன்னித்தல்

வாழ்விற்கு புதிய வழிமுறைகள்

அதிகாரம் 01



**லூக் 17:3** எனவே, நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். உங்களுடைய சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் பாவம் செய்தால் அவரைக் கடிந்துகொள்ளுங்கள். அவர் மனம் மாறினால் அவரை மன்னியுங்கள்.

**லூக் 17:4** ஒரே நாளில் அவர் ஏழு முறை உங்களுக்கு எதிராகப் பாவம் செய்து ஏழு முறையும் உங்களிடம் திரும்பி வந்து, "நான் மனம் மாறிவிட்டேன்" என்று சொல்வாரானால் அவரை மன்னித்து விடுங்கள்.

**மத் 18:21** பின்பு பேதுரு இயேசுவை அணுகி, "ஆண்டவரே, என் சகோதரர் சகோதரிகளுள் ஒருவர் எனக்கு எதிராகப் பாவம் செய்துவந்தால் நான் எத்தனை முறை அவரை மன்னிக்க வேண்டும்? ஏழு முறை மட்டுமா? எனக் கேட்டார்.

**மத் 18:22** அதற்கு இயேசு அவரிடம் கூறியது "ஏழுமுறை மட்டுமல்ல எழுபது தடவை ஏழுமுறை என நான் உனக்குச் சொல்கிறேன்.

**மத் 18:23** விண்ணரசைப் பின்வரும் நிகழ்ச்சிக்கு ஒப்பிடலாம் ஓர் அரசர் தம் பணியாளர்களிடம் கணக்குக் கேட்க விரும்பினார்.

**மத் 18:24** அவர் கணக்குப் பார்க்கத் தொடங்கிய பொழுது, அவரிடம் பத்தாயிரம் தாலந்து கடன்பட்ட ஒருவனைக் கொண்டு வந்தனர்.

**மத் 18:25** அவன் பணத்தைத் திருப்பிக் கொடுக்க இயலாத நிலையில் இருந்தான். தலைவரோ, அவனையும் அவன் மனைவி மக்களோடு அவனுக்குரிய உடைமைகள் யாவற்றையும் விற்றுப் பணத்தைத் திருப்பி அடைக்க ஆணையிட்டார்.

**மத் 18:26** உடனே அப்பணியாள் அவர் காலில் விழுந்து பணிந்து, "என்னைப் பொறுத்தருள்க எல்லாவற்றையும் உமக்குத் திருப்பித் தந்து விடுகிறேன்" என்றான்.

**மத் 18:27** அப்பணியாளனின் தலைவர் பரிவு கொண்டு அவனை விடுவித்து அவனது கடன் முழுவதையும் தள்ளுபடி செய்தார்.

**மத் 18:28** ஆனால் அப்பணியாளன் வெளியே சென்றதும், தன்னிடம் நூறு தெனாரியம் கடன்பட்டிருந்த உடன் பணியாளர் ஒருவரைக் கண்டு, "நீ பட்ட கடனைத் திருப்பித் தா" எனக்கூறி அவரைப் பிடித்துக் கழுத்தை நெரித்தான்.

**மத் 18:29** உடனே அவனுடைய உடன் பணியாளர் காலில் விழுந்து, என்னைப் பொறுத்தருள்க, நான் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்" என்று அவனைக் கெஞ்சிக் கேட்டார்.

**மத் 18:30** ஆனால் அவன் அதற்கு இசையாது, கடனைத் திருப்பி அடைக்கும்வரை அவரைச் சிறையிலடைத்தான்.

**மத் 18:31** அவருடைய உடன் பணியாளர்கள் நடந்ததைக் கண்டபோது மிகவும் வருந்தித் தலைவரிடம் போய் நடந்தவற்றையெல்லாம் விளக்கிக் கூறினார்கள்.

**மத் 18:32** அப்போது தலைவர் அவனை வரவழைத்து, "பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக் கொண்டதால் அந்தக் கடன் முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேன்.

**மத் 18:323** நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் உன் உடன்பணியாளருக்கு இரக்கம் காட்டியிருக்க வேண்டும் அல்லவா? என்று கேட்டார்.

**மத் 18:34** அத்தலைவர் சினங் கொண்டவராய், அனைத்துக் கடனையும் அவன் அடைக்கும்வரை அவனை வதைப்போரிடம் ஒப்படைத்தார்.

**மத் 18:35** உங்களுள் ஒவ்வொருவரும் தம் சகோதரர் சகோதரிகளை மனமார மன்னிக்கா விட்டால் விண்ணுலகில் இருக்கும் என் தந்தையும் உங்களை மன்னிக்க மாட்டார்.

# சமூக வலைத்தளங்கள் ஒரு வரமா? சாபமா?






மனிதன் வார்த்தைகளால் பேசத் தொடங்கிய காலம் முதல் மொழி மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிகள் மாறிக் கொண்டே வந்துள்ளன. மாற்றம் ஒன்றுதான் மாறாதது என்பது போல. மாற்றங்கள் இந்த சமுதாயத்தில் பெரிய அளவில் ஏற்பட்டுள்ளன என்றால் மிகையல்ல.

சைகை மொழியில் ஆரம்பித்த மனித சமுதாயம், வார்த்தைகளை கொள்முதல் செய்ய ஆயிரக்கணக்கான வருடங்களை எடுத்துக் கொண்டது. அன்று முதல் சொற்கள் எழுத்து வடிவமாய் பாறைகளில் வடிவமைக்கப்பட்டு, பின்னர் பல காலம் கழித்து அச்சேறியது என்பது உண்மை. அதனைத் தொடர்ந்து தகவல் பரிமாற்றத்திற்காக பயன்படுத்தப்பட்ட ஊடகங்கள் வானொலி, தொலைக்காட்சி, கணினி இணையம், கைபேசி, என தொடர் மாற்றங்கள் இந்த சமுதாயத்தில் பெரிய அளவில் உண்டானது என்பது எல்லோரும் மறுக்க முடியாத உண்மை.

சமூக வளைத்தளங்கள் என்பது ஓரிடத்தில் அமர்ந்து கொண்டு கணினி மூலமாகவே அல்லது கைபேசி மூலமாகவோ இணைய உலகில் எண்ணற்ற மக்களுடன் தங்களுடைய எண்ணங்களை பரிமாறிக் கொள்வதே ஆகும்.

அதிகமான மக்கள் பயன்படுத்தும் சமூக வலைத்தளங்களான பேஸ்புக், டுவிட்டர், யூ - டியூப் (you tupe) பிளாகர் (Blogger) லிங்டின் (Linked in ) என பல இருந்தாலும் அதனை பயன்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்கள் வகைப்பட்டியல் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றன.

**1. பதிப்பு (Publish)**

ஒருவர் தான் உருவாக்கிய கருத்துக்களை உலகிற்கு தெரியப்படுத்துவது மட்டுமல்லாமல் அனைவரும் பார்த்துக்கொள்ளும் வகையில் உருவாக்கப்படுவது, உதாரணமாக பிளாக்கர், விக்கிபீடியா முதலியன.

**2. பகிர்தல்** (Share)

ஒருவர் உருவாக்கிய புகைப்படம் மற்றும் காணொளிகளை இணையத்தளம் மூலம் மற்றவர்களும் பார்த்துக்கொள்ளும வகையில் உருவாக்கப்படுவதும். உதாரணம் யூடியூப் (you tube) பகாசோ (Picaso), பிளிக்கர் (Flicker) முதலியன.

**3. கலந்துரையாடல்**

ஒருவர் உருவாக்கிய பொருள் மற்றும் திரைப்படங்கள். காணொளிகள் மூலம் மற்றொருவருடன் உரையாடுவது. உதாரணம் ஸ்கைப் (Skype), கூகுல் டோக் (Google talk) யாகூ மெஸஞ்சர் (Yahoo Messanger) முதலிய

**4. சக வலை** (Social Networking)

தம்மை பற்றி உருவாக்கிய சுய குறிப்பு பற்றி மற்றவர்களுக்கு தெரியப்படுத்தி நட்புலகத்தை விரிவுபடுத்திக் கொள்வது. உதாரணம் - பேஸ்புக் (Face book) மை ஸ்பேஸ் (My Space) முதலியன

**5. நுண்வலைத்தளம்** (Microblog)

ஒருவர் விஷயத்தைப் பற்றி தனது கருத்தை ஓரிரு வரிகளில் அறிக்கையாக தெரிவிப்பது உதாரணம் - டுவிட்டா Twitter)

**6. லைப்ஸ்ட்ரீம்**

ஒருவர் சேமித்து வைத்திருக்கும் தகவல்களை பரிமாறிக் கொள்வது.

**7. நேரலை** (Livecast)

ஒருவர் செய்யவும் செயல்களை அதே நேரத்தில் மற்றவர்களுடன் பார்ப்பதற்கான ஏற்பாட்டுடன் கூடிய சமூக வலை, உதாரணம் யாகூ லைப், ஜஸ்டின் டி.வி க்மேன்.

**8. நிஜ உலகம்**

நிஜ வாழ்க்கை உண்மைகளை இணையம் மூலம் தெரிவிப்பது உதாரணம் சிம்ஸ் ஒன்லைன், போர்ட்ரோ முதலியன.

**9. சமூக** விளையாட்டு (Social Gamting)

இணைய உலகத்தில் உருவாக்கப்பட்டுள்ள சமூக விளையாட்டுக்கள், .பார்ம்வில்லி (Farmvile) போகோ (Pogo) டூ.ீ.ப் முதலியன.

**10. பலர் பங்கேற்கும் சமூக விளையாட்டு**

விளையாட்டில் பங்கேற்கும் ஒருவருக்கும் இணைய விளையாட்டில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உதவி புரிவது. (Cartoon Network Universe,infantry online etc)

சமூக வலைத்தளங்கள் அதிகவேகமாக வளர்ச்சி அடைந்து வருவதற்கு முக்கிய காரணம் இளைஞர்களும் மாணவர்களும் அதிகமாக பயன்படுத்துவதுதான். ஆனால், பொதுவாக சமூக வலைத்தளங்கள் மாணவர்களின் நலனில் அதிகமாக உதவுகிறது.

மற்றும் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள் என்றும் குற்றச் சாட்டுக்கள் சரமாரியாக வந்து கொண்டுதான் இருக்கின்றன. ஆனாலும் எந்தவொரு புதிய தொழில்நுட்பத்திலும் நன்மைகளும் தீமைகளும் கண்டிப்பாக இருக்கும் என்பது உலகறிந்த உண்மை.

**தீமைகள் :** 1. சமூக வலைத்தளங்கள் நிச்சயமாக ஒரு பாதுகாப்பான அம்சங்களை கொண்டது அல்ல என்பதே எல்லோரும் தெரிவிக்கும் ஒரு கருத்தாகும்.

2. பொதுக் கருத்துக்கள் மற்றும் தனிக் கருத்துக்கள்.....

15

குமார் என்ற இளைஞன் ஒருவன் இருந்தான். அவன் ஊரில் நடக்கும் எல்லா பந்தயங்களிலும் வெற்றி பெறுவான். குறிப்பாக எல்லா ஓட்டப்பந்தயங்களிலும் அவன்தான் முதலில் வருவான். அவனுக்கென்று தனி ரசிகர்கள். அன்றும் அவன்தான் முதலில் ஓடிக்கொண்டிருந்தான். திடீரென குழந்தையொன்று குறுக்கே ஓடி வந்தது. தவறவிட்ட தாய் தவித்தாள். முதலில் ஓடிவந்த குமார் ஓட்டத்தை நிறுத்தி குழந்தையைத் தூக்கிச் சென்று அக்குழந்தையின் தாயிடம் ஒப்படைத்தான். அதற்குள் அவன் பின்னால் ஓடிவந்தவர்கள் முன்னே ஓடினார்கள். மீண்டும் குமார் முன்னே ஓடினான். மீண்டும் ஒரு சோதனை கூட்டத்திலிருந்து அபயக்குரல், ஓர் அனாதையை "உனக்கென்ன வேடிக்கை கேட்கிறது?" எனக் கேட்டு கூட்டம் ஒன்று அடித்துக்கொண்டு இருந்தது.

குமார் ஓட்டத்தை நிறுத்தினான். அடிப்பட்டவனை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு மைதானத்திற்குள் திரும்பினான். அதற்குள் பரிசளிப்பு விழா முடிந்துவிட்டது. நமது வீரன் ஒரு மரத்தடியில் மனம் கலங்கி நின்று கொண்டு இருந்தான். சிலர் அவனைப் பார்த்து சிரித்தார்கள். சிலர் வாழத் தெரியாதவன் என்றார்கள். சிலர் பிழைக்கத் தெரியாதவன் என்றார்கள். குழம்பிய மனதோடு அன்றிரவு உறங்கச் சென்றான். அவன் கனவிலே அவனால் காப்பாற்றப்பட்ட அனாதை அவனுக்குப் பூச்செண்டு ஒன்றை கொடுத்து மறைந்தான். அப்போது வானத்திலிருந்து குரலொன்று கேட்டது. "உனக்காகவே நீ வாழ்ந்தால் நீ மனிதனே அல்ல, நீயும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைத்தால் நீ மனிதன். பிறர்க்கென்றே நீ வாழ்ந்தால் நீ தெய்வம். இன்று நீ தெய்வத்துள் தெய்வமானாய்" அன்று குமார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை.

சின்னஞ்சிறிய என் சகோதரருள் ஒருவனுக்கு நீங்கள் இவற்றைச் செய்தபோதெல்லாம் எனக்கே செய்தீர்கள். மத் ( 25:40) என்று இறைவன் நமக்கு, கூறுகிறார் நாம் பிறர் நலம் மிக்கவராக வாழ இறைவன் அழைக்கின்றார். நமது தாய் திருச்சபை பிறர் சிநேகத்தை முதன்மையான ஏழு புண்ணியங்களில் ஒன்று என்று கூறுகிறது. விவிலியம், திருச்சபையின் பாரம்பரியம். எல்லாம் பிறர் நலனில் நம்மை அதிகமாக அக்கறைக்கொண்டு வாழ அழைக்கின்றது. இறைவன், நோவா அவரது குடும்பம் மற்றும் எல்லா உயிரினங்களின் ஒரு ஜோடியை மட்டும் பேழைக்கு

**"உனக்காகவே நீ வாழ்ந்தால் நீ மனிதனே அல்ல, நீயும் வாழ்ந்து மற்றவரையும் வாழ வைத்தால் நீ மனிதன். பிறர்க்கென்றே நீ வாழ்ந்தால் நீ தெய்வம். இன்று நீ தெய்வத்துள் தெய்வமானாய்"**




அழைத்துச் சென்று காப்பாற்றக் கூறுகிறார். ஆனால் நோவா தன்னுடன் வாழ்கின்ற பிறமக்களையும் ஆண்டவரின் வாக்கை கூறி அழைக்கிறார். ஆனால் அவர்கள் செவி கொடுக்கவில்லை.

ஆபிரகாம் மம்ரே என்ற பாலைவனத்தில் பாளையம் இறங்கி வாழ்ந்து வருகிறார். மூன்று இறையடியார் வருகிறார்கள். தாமே சென்று அவர்களை அழைத்து விருந்து படைக்கின்றார். அவர்களால் ஆசீர்வதிக்கப்படுகின்றார். மோயீசன் தன் மக்களின் நலனில் அக்கறைக்கொண்டு வாழ்கிறார். ஒரு பெரிய இனத்தின் தலைவனாக மாறுகிறார். அரசர்கள், நீதிபதிகள் மற்றும் இறைவாக்கினர்கள் தம் மக்களின் நலனில் மிகுந்த அக்கறைக் கொண்டவராக வாழ்கின்றார்கள். ஆசீர்வதிக்கப்படுகின்றார்கள். புதிய ஏற்பாட்டில் இறைவன் தன் மக்களின் மீது அன்பு கொள்கிறார். கடவுள் குழந்தையாக அவதாரம் எடுக்கின்றார். இயேசு யூத சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களை அன்பு செய்தார். யூத இனத்தில் மனிதர்களாகக் கூட கருதாமல் கொடுமைப்படுத்தப்பட்ட மக்களை தேடிச் சென்றார். அவர்களின் நலனில் அக்கறைக் கொண்டு வாழ்ந்தார். பாவிகளை பேசச் செய்தார். பார்வை இல்லாதவர்க்கு பார்வை அளித்தார். பேய் பிடித்தவரிடம் இருந்து பேயை விரட்டி விட்டார். இவ்வாறு தன்னுடன் வாழ்ந்த மக்களை அன்பு செய்தார். இறுதியில் சிலுவையில் அறைந்து கொல்லப்பட்டார்.

இயேசுவின் பிள்ளைகளாக நாம் அவரைப் போல வாழ அழைக்கப்படுகின்றோம். அறியாமையில் இருப்பவர்களை அன்பு செய்து அறிவை அளிக்க சமூகத்தில் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமை வாழ்வுக்குப் போராட அழைக்கப்படுகின்றோம். உன்னை நேசிப்பது போல உனக்கு அடுத்திருப்பவனையும் நேசி... பத்துக்கட்டளை நாம் நமக்கு அடுத்து இருப்பவர்களை அன்பு செய்யும்போது நாம் இறைவனை அன்பு செய்கின்றோம். இன்றைய உலகில் கிறிஸ்தவம் என்றால் அன்புப் பணி பிறர் நல பணி என்று கூறினால் மிகையாகாது. நாம் நமது தலைவனைப்போல பிறர் நலம் கொண்டவராக வாழ்வோம். கண்ணால் காண்கின்ற சகோதர சகோதரியை அன்பு செய்யாதவன் இறைவனை அன்பு செய்ய முடியாது 1 யோவா (4:20) எனவே நம்முடன் வாழ்கின்ற பிறரை அன்பு செய்வோம். இதன் மூலம் இறைவனை காண்போம்.

# எப்படி மகிழ்வாயிருப்பது?

**வாழ்க்கை ஒரு போராட்டம் - அதை வாழ்ந்து பார்**
**வாழ்க்கை ஒரு கடமை - அதைச் செய்து முடி**
**வாழ்க்கை ஒரு விளையாட்டு - அதோடு விளையாடு**
**வாழ்க்கை ஒரு வாய்ப்பு - அதை நழுவ விடாதே**
**வாழ்க்கை புனிதமானது - அதை வழிபடு**

உங்கள் மகிழ்ச்சியை ஒருவரும் எடுத்துவிட முடியாது என்கிறார் இயேசு.

**வானுக்கு அழகு - வெண்ணிலாவால்**
**மலைக்கு அழகு - மாரியால்**
**பரம்பு மலைக்கு அழகு - பாரியால்**

என்றபடி பரமனின் படைப்பிற்கு அழகு. மணிமகுடமான மனிதரின் அழகு. அத்தனையும் நிறைவு பெறுவது அவனின் உளநிறை மகிழ்ச்சியால் மட்டுமே. வளமிகு சொத்துக்களால், உயர் மிகு கல்வியால், சீரிமிகு புகழால், வேறு எதனாலும் ஒருவனுக்கு மகிழ்ச்சி வந்துவிடாது. ஆனால் அதே நிலையில் ஏழை ஒருவன் அன்றாடக் கூலி வேலை செய்து பிழைப்பான். மகிழ்வோடு இருப்பான். "மக்கள் தொண்டே மகேசன் பணி" என்றபடி பிறர்க்காக வாழும் வாழ்வு. படித்தவாயினும் படிக்காதவனாயினும் உற்சாக வயல்களில் முயற்சி என்னும் பயிர் விளைந்தால் விரும்பியதைப் பெற்று நிம்மதியான வாழ்வு பெறமுடியும். மகிழ்வின் மற்றொரு கூறாக இருப்பது தன்னம்பிக்கை, இதனை எவனொருவன் இழப்பானோ அவனை நிழல்கூட விரட்டும், இத்தன்னம்பிக்கை எவனிடம் உள்ளதோ, அவன் தோள்கூட இமயத்தைச் சுமக்கும், மகிழ்வெனும் எவரெஸ்ட் சிகரத்தைத் தொட முடியும். ஊக்கம் தரும் எண்ணங்களை மனதில் சுமந்து, அதற்கு இசைவான சொற்களை உச்சரிக்க வேண்டும். அகிலத்தின் அத்தனை வெற்றிகளின் அடிப்படை தன்னம்பிக்கை, தரணிவாழ் தலையான தத்துவம் அதுவே.

மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும் என்கிறான் கவிஞன் ஒருவன், "அன்பே" அம்மூன்றெழுத்து, சாதனையாளர்களின் தாரக மந்திரம் அன்பு. சமயங்கள், சாஸ்திரங்கள் வலியுறுத்துவதும் அதனையே. அன்பிற்கு-முண்டோ அடைக்கும் தாழ்" என்கிறது வள்ளுவரின் வாய்மொழி.

நங்கை ஒருத்தி அழகிற்கே இலக்கணமானவள். கொடி இடையாள். பிறரைச் சுண்டியிழுக்கும் மின்னும் கண்ணுடையாள். தின்னச் தின்னச் சுவைதரும் கன்னல் (கரும்) போன்ற செம்மொழியை உடையாள். காந்தன் வேர் போன்றது அவளின் கரங்கள். செந்நிறச் சூரியனின் சிகப்பு நிறக் கதிர்கள் வையகத்தை மெல்லப் பரப்பும் நேரம் - இவ்வழகி நிற்கிறாள். குளக் கரையில் நிற்கின்றாள். இயற்கையை இரசித்தப்படி அங்கே தாயொருத்தி வருகின்றாள். இடுப்பில் கைக்குழந்தை. வலக்கையில் தண்ணீர் மொள்ள எடுத்து வரும் குடம் அழகியைப் பார்த்து "பெண்ணே! நான் குளத்தில் சென்று தண்ணீர் முகந்து வருகின்றேன். அதுவரை என் குழந்தையைப் பார்த்துக் கொள்" என்கிறாள். குளத்தில் இறங்கி தண்ணீர் எடுக்கும் வேளை, மேட்டிலிருந்து குழந்தை வேகமாக நகர்ந்து வருகிறது. அழகி தன் அழகு கலைந்து விடும் என ஓடித் தூக்கவில்லை. "ஐயோ என் குழந்தையைப் பிடி" என்ற இரைச்சலோடு குடத்தை விட்டு ஓடி வந்து குழந்தையைத் தூக்குகி-ன்றாள். நெஞ்சில் ஈரமில்லாப் பெண்ணே! ஆண்டவன் உனக்கு அழகைக் கொடுத்து என்ன பயன்? நெஞ்சில் அன்பில்லையே! எனக் கூறுகிறாள். இதனால்தான் வள்ளுவர் கூறுகின்றார்.

**புறத்து உறுப்பு எல்லாம் எவன்செய்யும்**
**யாக்கை**
**அகத்துஉறுப்பு அன்புஇல வாக்கு?**



அன்பில்லாத புறத்து அழகால் எப்பயனும் இல்லை என்கிறார். மணமில்லா மலர்களை எவரும் விரும்புவதில்லை. நிறமில்லா வானவில்லால் வசந்தம் இல்லை. அவ்வாறே பகிரப்படாத திறமைகளாலும் செல்வங்களாலும் இன்று எந்தப் பயனும் இல்லை. இன்று வறுமைக்குக் காரணம் பகிரப் பாடாமையே என்கிறார் அறிஞர் ஒருவர். "தனக்கென்று வாழ்பவன் தரித்திரன், பிறர்க்கென்று வாழ்பவன் புனிதன்"

வாழ்க்கைப் பாடத்தின் மகிழ்வான மற்றொரு இலக்கு எளிமை, ஒரே அகராதி எளிமை. மனநிறைவின் மற்றொரு அங்கம் உழைப்பு. உழைக்காமல் உண்பது என்கிறார் புனித பவுல் உழைப்பில்லாமல் கனவு நனவாவதில்லை. தன்னலம் போக்கு. பிறர்நலம் நாடும் வாழ்வே மன ஆறுதல் மற்றும் நிம்மதி. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பது நமது இதய வேண்டலாக இருக்கட்டும். இறுதியில் நம் இதயம் நிறை மகிழ்வைப் பெற இயற்கை நமக்குக் கற்பிக்கும் பாடம்.

**தேனீக்களைப் பார்த்து சுறுசுறுப்பைக் கற்றுக்கொள்**

**எறும்புகளைப் பார்த்து ஞானத்தைக் கற்றுக்கொள்**

**மலர்களைப் பார்த்து சிரிக்கக் கற்றுக்கொள்**

**மரக்கிளைகளைப் பார்த்து பணிவைக் கற்றுக்கொள்**

**தோல்வியைப் பார்த்து வெற்றியைக் கற்றுக்கொள்**

**பெரியோரைப் பார்த்து உயர்வைக் கற்றுக்கொள்**

"சொன்னதைச் செய்வேன். செய்வதைச் சொல்வேன் வேறொன்றும் தெரியாது" என்ற திரைப்படப் பாடலின்படி முயற்சி, தன்னம்பிக்கை, அன்பு, பண்பாடு, பகிர்வு, உழைப்பு நாட்டுப்பற்று, பிறர்நலம், இயற்கை கற்றுத்தரும் பாடங்களோடு இறை சக்தியை அச்சாணியாக்கி, இதை சக்தியினை அதனோடு இணைத்துப் பக்குவமாக்கி, நாம் மகிழ்வோடு பிறரையும் மகிழ வைப்போம்.

**படித்தவனாயினும்**
**படிக்காதவனாயினும்**
**உற்சாக வயல்களில் முயற்சி**
**என்னும் பயிர் விளைந்தால்**
**விரும்பியதைப் பெற்று**
**நிம்மதியான**
**வாழ்வு பெறமுடியும்.**

CMYK

அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் (ஓப்செட் முறையில்)
- நவீன பிரதியாக்கம் (டுப்ளோ),
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்
- அடையாள அட்டைகள் தொடக்கம் A-3 அளவிலான லெமினேட்டிங் சேவைகள்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927
பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.co

---

COLOMBO CATHOLIC BOOKSHOP
CCP

## GIFT VOUCHERS




Everything Catholic Under One Roof

உங்கள் அன்பிற்குரியவர்களுக்கு Voucher ஒன்றினை பரிசளித்து அவர்களின் விருப்பத்திற்கு இடமளியுங்கள்

ரூபா 500/- 1000/- 2000/- Voucherர்களை தற்போது பெற்றுக்கொள்ளலாம்

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம், இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை – கொழும்பு – 08
தொ.பே +94 11 4373869 colombocatholicbookshop@gmail.com

---

COLOMBO CATHOLIC BOOKSHOP
CCP

## இறக்குமதி செய்யப்பட்ட திருப்பலி மேலாடை

போர்த்துக்களிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட தரமான திருப்பலி மேலாடைகள்



தற்போது விற்பனைக்கு

விலை

ரூபா 10200/- தொடக்கம் 18600/- வரை



Serving the Catholic Faithful

கொழும்பு கத்தோலிக்க புத்தக நிலையம்,
இல.02. ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. தொ.பே இல 011 4373869' colombocatholicbookshop@gmail.com


அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை M.F. மகேந்திர D. குணதிலக்க,, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்